www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
நவ.20-26,1994 ரூபா 10/00

# வாரமலர் தினமுரசு

NATIONAL TAMIL WEEKLY முரசு 77

## அரசு_புலிகள் அடுத்தது என்ன?

எக்ஸ்ரே ரிப்போர்ட்



மனைவியர் மத்தியில் ஒரு கணிப்பு
- அமெரிக்க சஞ்சிகையின் ஆய்வு-

அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்...

## பிரபா வைத்த குறி

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

## அமோக அறுவடை!

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
வரலாற்று வெற்றியை
வசப்படுத்திக் கொண்டவர்
நமது புதிய ஜனாதிபதி!
உண்மையிது வெறும் புகழ்ச்சியில்லை!

யாரும் சற்றும் எதிர்பாராமல்
சாத்தியமாகிவிட்ட சரித்திரம்
திருமதி சந்திரிக்காவின் சாதனை!

நினைப்பதெல்லாம் நடப்பதில்லை
என்பது ஆச்சரியமல்ல-ஆனால்
நடந்துவிட்டவை சிலவற்றை
நினைக்க நினைக்க ஆச்சரியம்
இடைவிடாது எட்டிப் பார்த்துக்கொண்டிருக்கும்.

அப்படித்தான்-
நமது ஜனாதிபதியின் அமோக வெற்றியும்!

அவரே இதனை எதிர்பார்க்கவில்லை.
எவர்தான் எதிர்பார்த்தார்கள்?!

பத்து இலட்சம்
அதிகப்படியான வாக்குகள் இலக்கு
என்று பொ.ஐ.முன்னணி கூறியது.
அந்த கூற்று பிரசார தந்திரம்தான்.

ஆனால், திருவாளர் பொதுஜனம்
பாராளுமன்றத் தேர்தல் போல
இம்முறை ஊசலாடவில்லை.
தெளிவான தீர்ப்பினை
திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்.

மந்திரமுமல்ல, மாயமுமல்ல;
மாயையுமல்ல;
மாற்றத்தை விரும்பும் வேகம்!

பழையன தங்கமாக இருக்கலாம்
பழைய யாவும் தங்கமல்ல!
சிந்தனைகளும்-கண்ணோட்டங்களும்
அப்படித்தான்!

பழைய முறையில் தொடர்ந்தும்
ஆளப்படவும் மக்கள் விரும்பவில்லை.
பழைய முறையில் தொடர்ந்து
சிந்தித்துக் கொண்டிருக்கவும்
திருவாளர் பொதுஜனம் விரும்பவில்லை!

இது, சிங்களவர்கள் பூமி
என்று சொல்லிக் கொண்டு
வேட்பாளர் ஒருவர் அறிமுகமானார்.
அவர் வரவை ஆமோதித்தவர்களை
தொகுதி ரீதியாக-
விரல்விட்டு எண்ணி விடலாம்!
ஆயினும் அவருக்கு கிடைத்துள்ள
வாக்குகள் சொற்பமேயாயினும்
இன்னமும், மிச்ச மீதியிருக்கும்
இனவாத எச்ச சொச்சங்களை
அது அடையாளப்படுத்துகிறது.

எச்ச சொச்சங்கள் என்பதால்
அலட்சியமாகவும் நினைக்கக்கூடாது.
தற்போதைய வாய்ப்பை
தக்க முறையில் பயன்படுத்த
பொறுப்புள்ள யாவரும்
பூரணமாக முயலாவிட்டால்
எச்ச சொச்சங்கள்
விருட்சமாகலாம்! விசுவரூபமுமாகலாம்!!

எனவே-விழிப்புத் தேவை!
பெற்றுள்ள வெற்றி பெரிது தான்.
அதைவிடப் பெரிது-
அந்த வெற்றிக்கு காரணமான
சிந்தனைப் போக்கு திசைமாறாமலும்
மக்களின் நம்பிக்கை சிதறாமலும்
காத்துநிற்கும், கடமையாற்றும் பொறுப்பு!
சகல இனமக்களும் ஒருமித்து
உருவாக்கியுள்ள தலைமைத்துவம்
வராது வந்த அற்புத மாற்றம்!
இலங்கை வரலாற்றில்-அதுவும்
இனப்பூசலும், போரும்
வடுக்களை ஏற்படுத்திய நாட்டில்
மாபெரும் அற்புதம்!

நடத்தி முடித்திருக்கிறார்கள்
நமது வாக்காளப் பெருமக்கள்
அந்த அற்புத மாற்றத்தை!

இனப்பிரச்சனைக்குத் தீர்வு!
இனங்களுக்கிடையே ஜனநாயகத் தளத்தில்
சமத்துவ பாலம் மூலமான உறவு!!
இருள்சூழ்ந்த போருக்கு முடிவு!!!
இவைதான்-திருமதி சந்திரிக்கா
தனது சரித்திர வெற்றி மூலமாக
சாதித்துக் காட்டவேண்டிய பணிகள்!

ஜனாதிபதியின் கரங்களில்
அமோகமான மக்கள் தீர்ப்பு
என்னும் அற்புதமான ஆயுதம்!

அதனை எவ்வாறு,
இனி அவர் பயன்படுத்தப் போகிறார்
என்பதைப் பொறுத்தே-
தற்போதைய வெற்றியின் பெறுமதியை
நாளைய வரலாறு மதிப்பிடப் போகிறது.

இன்றைய வெற்றி ஆரம்பம்,
அதன் பயன்பாடே முக்கியம்!

□□

உலகளவில் அதாவது உலக சந்தையில்
உயர்த்தப்பட்டுவிட்ட காகித விலையின்
சுமை முரசையும் அழுத்தியதால்
சற்று அதிகரித்திருக்கிறது விலை!

விளம்பரம் 60 வீதம் என்றில்லாமல்
20 வீதம் மட்டுமே என்று
முரசு வகுத்துள்ள வரையறையும்
வியாபார ரீதியில் அழுத்துவதால்
விலை அதிகரிப்பு அவசியமாகிவிட்டது.
உங்கள் முரசை
விளம்பர முரசாக்க விரும்பவில்லை.
எனவே சுமையில் பங்கெடுப்பீர்கள்
என்ற நம்பிக்கை எமக்குண்டு!

□□

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்

## பாவமன்னிப்பு உண்டு

ஒருவன் தான் மரணம் அடையும் சூழ்நிலையில் கூட தன்னைப் பாவி என்று ஒத்துக்கொண்டு தனது பாவத்திற்காய் மனஸ்தாபப்பட்டு இறைவனின் இரக்கத்தை நாடினால் இறைவன் அவனது பாவத்தை மன்னிக்க சித்தமாய் இருக்கிறார்.

உலகத்தின் பாவத்திற்காய் கொடிய சிலுவை மரண தண்டனையை ஏற்று சிலுவையில் அறையப்பட்டு சிலுவையெங்கும் இரத்தமாய் ஓட, கிறிஸ்து காணப்படுகிறார்.

கிறிஸ்துவோடு, தாங்கள் செய்த குற்றங்களுக்காக இரு கள்வர்கள் சிலுவையில் அறையப்பட்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் கிறிஸ்துவைப் பார்த்து,

"நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள்" என்றான். சிலுவையில் அறையப்பட்டிருந்த மற்றொரு கள்வன் இதைக் கண்டு மனம் உடைந்து போகின்றான். தாங்கள் பாவம் செய்ததற்கு தண்டனை அனுபவிப்பதையும், பாவம் செய்யாத கிறிஸ்து தண்டனை அனுபவிப்பதையும் உணர்கிறான். கிறிஸ்துவை ஏளனம் செய்த கள்வனைப் பார்த்து, "நீ இந்த ஆக்கினைக்கு உட்பட்டவனாயிருந்தும், தேவனுக்குப் பயப்படுகிறது இல்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம். நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம். இவரோ தகாத ஒன்றையும் நடப்பிக்கவில்லை" என்று கடிந்தான்.

பின் கிறிஸ்துவை நோக்கி, "ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்ஜியத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்றான்.

கிறிஸ்து, "நீ என்னுடனே கூட மோட்ச வீட்டில் இருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன்" என்றார் கிறிஸ்து. ஆம். பாவத்திற்காய் மனஸ்தாபப்பட்டு இறைவனிடம் இறைஞ்சும் போது, எப்போதும் மன்னிப்பு உண்டு. நாமும் நமது பாவங்களுக்காக இறைவனிடம் இறைஞ்சுவோம்.

ஜி. டானியல்.



## எங்கும் இலஞ்சம்-எதிலும் இலஞ்சம்!

இலஞ்சம் வாங்குபவர்கள் மீதும், கொடுப்பவர்கள் மீதும் அண்ணலார் சாபமிட்டுள்ளதாகப் பல நபி மொழிகளில் காணுகின்றோம். இந்த இருவருக்குமிடையே இலஞ்சத்திற்காகத் தரகு செய்கின்றானே, அவன் மீதும் அண்ணலார் சாபமிட்டுள்ளார்கள். அல்லாஹ்வின் அருமை நபி அண்ணலார் (ஸல்) அவர்களது சாபம் சக்தியற்றுப் போகுமா..? அப்பொழுது இலஞ்சம் கொடுக்கல்-வாங்கலில் சம்பந்தப்பட்டவர்களின் கதி என்னாவது? கொடிய சாபத்திற்குரிய இச்செயலில் ஈடுபட்டிருப்போர் இன்று எத்தனை ஆயிரமாயிரம் பேர்?

"அநீதி செய்து கொடுமை புரியாதீர்கள்! உங்கள் (பிரார்த்தனை) 'துஆ'க்கள் அங்கீகரிக்கப்படுவதில்லை" என்று அண்ணலார் கூறியுள்ளார்கள். மற்றொரு நபி மொழியில், "கொடுமை புரிபவர்களையும் அல்லாஹ் சற்று விட்டுவைக்கிறான். (ஒருவேளை திருந்திக்கொள்ளலாம்)" என்றும் காணப்படுகிறது. ஆனால் அல்லாஹ் பிடிக்க ஆரம்பித்து விட்டால் பிறகு எவராலும் அவன் பிடியிலிருந்து தப்ப முடியாது! அல்லாஹ் திருக்குர்ஆனில் ஓரிடத்தில் குறிப்பிடுகிறான்:

"அநியாயம் செய்யும் ஊராரை, அவர்களின் அநியாயத்தின் காரணமாக உம் இறைவன் பிடிக்கக் கருதினால், இவ்வாறே அவன் பிடித்துக் கொள்கிறான். ஏனென்றால் நிச்சயமாக அவனுடைய பிடி மிக்க கடினமாயும், துன்புறுத்தக் கூடியதாகவும் இருக்கிறது. அத்-11, வச-102.

எனவே பாவங்களின் காரணமாகத் துன்பங்கள், தொல்லைகள், துயரங்கள் தொடருகின்றன. அதேபோன்று, அல்லாஹ்விற்கு அடிபணிவதைக் கொண்டும், அவனை வணங்குவதைக் கொண்டும் இம்மையிலும், மறுமையிலும் வெற்றி வாய்ப்புக்கள் கிட்டுகின்றன என்பதை எச்சந்தர்ப்பத்திலும் நாம் மறந்துவிடலாகாது.

ஷியானி நளீர்-அக்குறணை.

## கவிதைப்போட்டி இல-74

வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும்
வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

**ஓட்டுப்போட**
மீட்டிக் கொடுங்கள்
எங்கள் உயிர்களை
நாங்களும் வருகிறோம்
ஓட்டுக்களைப்போட்டு
வேட்டுக்களுக்கு
சமாதி கட்ட
ஏ.சி.எம். ஹானிஸ்
அட்டாளச்சேனை-2.



**வேண்டாம் வன்முறை**
துடிக்கின்ற கரங்கள்
துன்பக் கதை சொல்லும்.
போனதெல்லாம் போகட்டும்
இனி வேண்டாம் வன்முறை.
எஸ்.சிவசாமி செல்வராஜ்
பூண்டுலோயா.

### வியக்கப்பட்டவை

**ஞாபகப்படுத்தல்**
சூரியகந்தையிலும்
எம்பிலிப்பிட்டியாவிலும்
அகழ்வுத் தொழிலில்
அரசு ஈடுபட...
மயிலந்தனையும்
கொக்கட்டிச்சோலையும்
தம்மையும் ஞாபகப்படுத்துகின்றதோ?
மாங்கேணி-செ.சுகுமார்.

**மலிவு**
"மரணங்கள் மலிந்ததனால்
மண்ணுக்குள்ளும்
அடி பிடியோ?"
ரீ.சாந்திமதி-கல்முனை-02.

**இனியாவது!....**
உயிரைக் குடிக்கும்
யுத்தம் விரைவில்
ஒழிந்து போகட்டும்.
போர்களற்ற
பொழுதுகள் விடிந்து
தேசம் மலரட்டும்.
சாகும் வரையும்
சமாதானம் என்ற
கரங்கள் உயரட்டும்.
எஸ். நாகராசா
காரைதீவு-2.

**விசித்திரம்**
அடே...
அடுத்த
'சூரியகந்தை'யா?
கை
காட்டி
அழைக்கிறது?
ஆர்.ராஜ்மோகன்
காரைதீவு-2.

**சமாதானப் பிரார்த்தனை**
புதைகுழிக்குள்
இருந்த
கரங்களும்
சமாதான(ப்)
பிரார்த்தனையா?
எஸ்.ஏ.எச்.ஷேக்முஹம்மட்-தர்கா நகர்.

**இந்நிலை!**
அதிகார
ஆதிக்கத்தால்
புதையுண்டுபோன
மனித உரிமைகளின்
ஊசலாட்டங்கள்!
இருட்டு தேசத்துக்குள்!
சமீனா ஹுசைன்
தர்கா நகர்.

**முத்திரை**
வெலிக்கடைப்
படுகொலையின்
இனவாத முத்திரை.
ந.ரதீஸ்வரன்
தம்பிலுவில்-2.

**முனகல்**
குண்டுமழை
பொழிந்து
குருதி நதி
பெருக்கி
திண்டாடும்
என் தேசத்
திருமாதாவின்
சமாதான
முனகல் கேட்டு
சமாதிகளுக்கும்
வந்ததோ
உயிர்....?
ஷியானி நளீர்
அக்குறணை.

**யுத்தம் வேண்டாம்.**
கல்லறைக்குள்ளும்
கேட்கிறதே
கண்ணிவெடி சத்தம்...!
யுத்தம் வேண்டாம்
நிறுத்துங்கள்...!
சாஜிதா தாஹிர்-மன்னார்-03.

**பண்டிகை**
போர்ப்பண்டிகையில்
மரணம் எமக்கு பரிசு!
தந்தோரைத் தேடுகிறோம்
கைகுலுக்க!
அ.தருஷாந்த
திருகோணமலை.

## கவிதைப் போட்டி இல-77



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும் சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 26.11.1994.

— முகவரி —
கவிதைப் போட்டி இல: 77
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

ரசிகர்களின் சபையில் தாக்கல் செய்யப்படுகின்ற வாசமலர் மனுவே தினமுரசு.

உன் சேதிகளில் நாரதரின் எக்ஸ்ரே ரிப்போர்ட்டும், ரசிகனின் இலக்கிய நயமும் இணையில்லாத இன்பத் தேன் சொரிவன. உன்னை பார்க்க, படிக்க பகுதிகள் ஒவ்வொன்றும் பரவசமூட்டுகின்றனவே! உன் சேவையில்... அனைத்துள்ளங்களதும் வேதனைகள் மறையட்டும்.

இரா. இராமகிருஷ்ணன்
அக்கரைப்பற்று-8.

□□

என்றென்றும் தினமுரசுக்கு ஆசிகலந்த நன்றிகள்.

காரணம்- உயர்தரமான சிந்தனையும், நடுநிலையான ஆக்கங்களுமே. இருந்தாலும் சென்ற 74ம் தினமுரசில் ஆசிரியர் அதை (தண்ணீர்த்தாமரையை) தணிக்கை செய்ய மறந்து விட்டார் போலும். பிளீஸ் கொஞ்சம் கூடுதலான கவனமெடுக்கவும். காரணம் வீட்டிலுள்ள அனைவருக்கும் தினமுரசில் உயிர் தான்.

எம்.எம்.அமீன்-வெலிகாமம்.

□□

அன்பு தினமுரசே!
வலம் வந்து கரம் வீழ்ந்து
மனம் ஈர்த்துக் கொள்கின்றாய்-உனை
விழி பார்க்கும் முழுவேளை
அகம் மலரும் பொழுதாகும்.
நிறைவாக நீ அளிக்கும்
அருமையான அம்சங்களுக்கு-என்
மனமார்ந்த வாழ்த்துக்கள்
உனைக்கென்றும் உரித்தாகும்.

செல்வி.ரஜனி சுரேந்தர்
கொழும்பு-12.

□□

எனது அன்பின் முரசே
சகல வயதினரையும் உள்ளம் கவரவைக்கும் சுவையான தகவல்களை வெளியிட்டு எங்களை மகிழ்வூட்டும் முரசே நீ மீண்டும் மீண்டும் புகழ் பெற நம் வாழ்த்துக்கள்.

எம்.ரியாஸ் முஹம்மத்
கம்பளை.

□□

பெயர் குறிப்பிட்டு வாழ்த்துவதற்குக் கூட இடம் வைக்காது பிரசுரிக்கப்பட்ட அத்தனை ஆக்கங்களுமே அபாரம். சூடாக,சுவையாக, சுவாரசியமாக ஆம்... உன் இலக்கணத்திலிருந்து இம்மியும் விலகாத இலட்சிய நடை. முழுக் கிழமைக்கும் முற்றாக தீனி போடும் முரசின் நிறைவு.

ஏ.எச்.எம். பாஹிம்-ஹிஜ்ராபுரம்.

□□

அன்பின் புதிய நிலாவே!

நீ சுமந்து வரும் தொடர்கதை முதல் சிறுகதை, ரசிகனின் இலக்கிய நயம் என்பன தித்திக்கும் கற்கண்டாக இனிக்கிறது. வாராவாரம் வழங்கி வரும் சினிவிசிட் ஒரு திரைப்படத்தைக் கண்டு இரசிப்பது போன்று உள்ளது.

பிரசாந்த் பிரியர்கள்-
மோகனா அர்ஜுனன், வி. புண்ணமூர்த்தி,
வி. அருள்-இரத்தினபுரி.

□□

முரசே!

நீ வேண்டும். அதுவும் முற்றும் முழுவதும் நீயாக வேண்டும். பாதி நீயும் பாதி விளம்பரம் என்ற அரக்கனும் வேண்டவே வேண்டாம். விளம்பரப் பக்கங்களை அதிகரித்து, வித்தியாசமான பத்திரிகை என்ற முரசின் தரத்தை குறைத்துப் பத்தோடு இதையும் பதினொன்றாக்கி விடாதீர்கள் பிளீஸ்..

கனேவல்பொல ரொஷான்-கெகிராவ.



அன்பு தினமுரசே!
உன்னில்,
அம்சங்கள் அனைத்தும் அமுதினுமினிது
கரத்தினில் ஏற்றால் அகமது மலர்வு
பார்க்கப் பார்க்க மனதிற்கு நிறைவு
நீடூழி நீ வாழ எனதன்பு வாழ்த்து.

ஆர்.ரஜனி-பிட்டமாருவ.

□□

அன்பின் முரசே!

உன் ஆக்கங்கள் அனைத்தும் பிரமாதம். குறிப்பாக, எக்ஸ்ரே ரிப்போர்ட் அரூடனின் அன்றும் இன்றும் ஓர் அலசல் போன்ற அரசியல் அலசல்கள் சூப்பர்.

வெகுநாளைக்குப் பின் ரிஸ்கி ஷெரீப்பின் ஒரு காதல் குற்றம் என்னும் சிறுகதையும் விதியே கதை எழுது என்னும் ஷர்மிளா இஸ்மாயிலின் சிறுகதையும் என்னைக் கவர்ந்தன.

எம். ஷாரா-பொல்கஹவெல.

□□

திக்கெட்டும் பறந்தோடும் தினமுரசே!
தீந்தமிழில் நீ தந்தாய் இலக்கிய நயம்.
என்றென்றும் இருக்க வேண்டும்-இந்த நயம்.
புதுமைகள் பலதாங்கி பவனி வந்தால்
மட்டற்ற மகிழ்ச்சி கொள்வார் நற்றமிழர்.

என். நல்லசிவம்-லிண்டுல.

□□

நீ வாரா வாரம் சுமக்கின்ற கருத்துக்கள் யாவும் நல்ல சிந்தனைக்குரியது. அதிலும் தேன் கிண்ணம், கவிதைப்போட்டி, இலக்கிய நயம் அதி விஷேசமானவை.

ஏ.எல்.எம். நியாஸ்-கிண்ணியா-6.

□□

மகாபாரதம், சினிவிசிட், ராஜதந்திரி அரசியல் அலசல் அத்தனை அம்சங்கள் அருமை. உனக்கு என் வாழ்த்துக்கள் பல.

எஸ். நமசிவாயம்-பதுளை.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# ஒட்டுக்கேட்ட செய்தியும் ஒத்துக்கொண்ட புலிகளும்!

## அதிகாரபூர்வ அறிவிப்பில்லை என்கிறார் பாலசிங்கம்!!

**கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் பாதுகாப்புப்படை தரப்பினரால் செய்தியாளர்களுக்கு ஒரு தகவல் சொல்லப்பட்டது.**

**நண்பகல் 12 மணிக்கு முன்பாகவே அச்செய்தி செய்தி உலகில் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது.**

புலிகளின் தொலைத் தொடர்பு சாதனங்களை இடைமறித்து ஒட்டுக்கேட்டுக் கொண்டிருந்தபோது, தாக்குதலை ஒரு வாரத்திற்கு ஒத்திவைக்குமாறு புலிகளின் தலைமை புலிகளின் படையணிகளுக்கு அனுப்பிய உத்தரவு தமக்கு கிடைத்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

புலிகள் பகிரங்கமாக அறிவிக்காத ஒரு செய்தியை ஒட்டுக்கேட்டதை மட்டுமே வைத்து படையினர் தரப்பு எப்படி நம்பியது என்ற சந்தேகம் எழாமல் இல்லை.

வழக்கமாக தமது தொலைத் தொடர்பு சாதனங்களில் புலிகள் சங்கேத வார்த்தைகளில்தான் பேசிக்கொள்வார்கள்.

சில சமயங்களில் படைத் தரப்பினரை திசை திருப்பக்கூடிய விதத்திலும் அவர்கள் பேசிக்கொள்வதுண்டு. ஒட்டுக்கேட்பதை இடையூறுகள் மூலம் தெரிந்துகொண்டு அவ்வாறு செய்வதுண்டு.

தாக்குதலை நிறுத்துமாறு பேசப்பட்ட செய்தியும் அவ்வாறு திசை திருப்பும் செய்தி அல்ல என்று பாதுகாப்பு வட்டாரங்கள் உறுதியாக நம்பியது எப்படி?

சனிக்கிழமை நள்ளிரவு திருகோணமலையில் 'சல்லி' என்ற இடத்தில் பொலிஸ் காவலரண் மீது புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தார்கள்.

மட்டக்களப்பில் புலிகள்-இராணுவ மோதலில் சனிக்கிழமையன்று தயாராஜ் என்னும் புலி பலியாகியிருந்தார்.

எனவே தாக்குதல் நிறுத்த உத்தரவு பற்றி பேசப்பட்ட செய்தியை . ஞாயிற்றுக் கிழமை காலைக்குப் பின்னர்தான் படைத் தரப்பினர் கேட்டிருக்க வேண்டும்.

ஆக, ஒட்டுக்கேட்கப்பட்ட செய்தி அவசர அவசரமாக வெளியிடப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பு உயர்மட்டத்தில் ஆராயாமல் இவ்வாறான செய்திகள் பகிரங்கப்படுத்தப் படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

படைத்தரப்போ அல்லது அரச தரப்போ ஜனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின் புலிகளிடமிருந்து செய்தி ஏதாவது வரும் என்று எதிர்பார்த்திருக்கலாம்.

### போர் நிறுத்தம் செய்ய தயாராகிறது அரசு?

### பந்து இப்போது அரசின் பக்கம்!

ஆனால், தேர்தல் வெற்றி குறித்தோ, மக்களின் தீர்வு குறித்தோ புலிகள் எவ்வித கருத்தையும் பகிரங்கமாக வெளியிடவில்லை.

இந்த நிலையில் ஒட்டுக்கேட்கப்பட்ட செய்தி வெளியாகியது. உடனடியாக அந்தச் செய்தி உலகளவில் முக்கியத்துவம் பெற்றது.

ஞாயிற்றுக்கிழமை இலண்டன் பி.பி.சி செய்திகளில் அது வெளியாகியும் விட்டது.

ஆனால் திங்கட்கிழமை அன்றுகூட யாழ்ப்பாணத்தில் உள்ள புலிகளது பிரசார சாதனங்கள் எதுவும் ஒட்டுக்கேட்கப்பட்டதாக் கூறப்பட்ட செய்தி உண்மையா பொய்யா என்று எந்தக் கருத்தும் வெளியிடவில்லை.

புலிகளின் பிரசார பொறுப்பை ஏற்றது போலவும், புலிகளது சார்பில் போர் நிறுத்தத்தை அறிவிப்பது போலவும் படைத் தரப்பினரே செயற்பட வேண்டியிருந்தது.

செய்திகள் பரவிய வேகத்தையும், அதற்கு வரவேற்பு இருந்ததையும் கவனித்த புலிகள் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்களை சந்தித்தனர்.

படையணித் தலைவர்களுக்கு பிரபாகரன் ஓர் உத்தரவை வழங்கியது உண்மைதான் என்று அன்ரன் பாலசிங்கம் கூறினார். அந்த உத்தரவு 13ம் திகதியன்று அறிவிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

"சிறிலங்காவின் ஆட்சிப் பொறுப்பை திருமதி சந்திரிக்கா குமாரதுங்கா ஏற்றதைத் தொடர்ந்து ஒரு சமாதான நல்லெண்ண சமிக்ஞையாக ஒருவாரகால போர் இடை நிறுத்தத்தை தலைவர் அறிவித்துள்ளார்" என்று திரு.அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார்.

இந்த போர் இடை நிறுத்தம் குறித்து சிறிலங்கா அரசுக்கு அதிகார பூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் பாலசிங்கம் கூறியுள்ளார்.

அன்ரன் பாலசிங்கத்தின் பேட்டியில் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

அரசுக்கு தம்மால் அறிவிக்கப்படாத போர் நிறுத்தத்தை பற்றி அரசு சாதகமான முடிவை எடுக்க வேண்டும் என்று எப்படி புலிகள் எதிர்பார்க்க முடியும்?

போர் இடை நிறுத்த நோக்கம் இரு தரப்பினதும் நல்லெண்ணத்தை வெளிப் படுத்துவதாகும்.

ஒரு தலைப்பட்சமான போர் இடை நிறுத்தம் என்பதன்அர்த்தம், ஒரு தரப்பு போரை நிறுத்த முன்வராத நிலையில் தமக்கு சமாதானத்தில் உள்ள நம்பிக்கையை காட்டுவதற்கு மறு தரப்பு தானாக முன்வந்து போர் நிறுத்தத்தை அறிவிப்பதாகும்.

அந்த அறிவிப்பு போரில் ஈடுபடும் மறு தரப்புக்கும் பகிரங்கமாக அறிவிக்கப் படவேண்டும். அவ்வாறு அறிவிக்கப்பட்டால் தான் மறு தரப்பிடம் நல்லெண்ணம் இருந்தால் அதுவும் தாக்குதலில் ஈடுபடாமல் இருக்க முடியும்.

அறிவிப்பையும் மீறி மறுதரப்பு தாக்குதல் நடத்துமானால் அந்தத் தரப்புக்கு நல்லெண்ணம் இல்லை என்று முழு உலகமும் அறியும்.

ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் தீர்ப்பை கௌரவிக்கவே போர் இடை நிறுத்தம் என்று வைத்துக் கொண்டாலும், கௌரவிக்கப்படும் மக்களுக்கு புலிகள் அதனை ஏன் தெரிவிக்கவில்லை.

குறைந்த பட்சம் யாழ் மக்களுக்குகூட அதனை ஏன் செவ்வாய்க்கிழமை வரை தெரிவிக்கவில்லை. ஒட்டுக்கேட்ட செய்தி உண்மையானால்- படைத் தரப்பு 13ம் திகதி அன்று புலிகள் பேசிக்கொண்டதை ஒட்டுக் கேட்டிருக்காவிட்டால் புலிகளது முடிவு வெளியே யாருக்கும் தெரிந்திருக்காது. தவிர விடயம் அறியாமல் படையினர் தாக்குதல் நடத்தியிருந்தால் புலிகளது நல்லெண்ணம் வெளியே தெரிந்திருக்காது.

புதிய ஜனாதிபதியாக திருமதி சந்திரிக்கா குமாரதுங்கா பொறுப்பேற்றமைக்கான நல்லெண்ண அறிகுறியை காட்டப் புலிகள் விரும்பியிருந்தால், ஜனாதிபதியிடம் தமது இடைக்கால போர் ஓய்வை அறிவித்திருப் பார்கள்.

அவ்வாறு அறிவிக்கப்பட்டிருந்தால் புதிய அரசுக்கு பேச்சுக்களைத் தொடர உற்சாகமாக இருந்திருக்கும்.

சிங்கள மக்கள் மத்தியில் பேச்சுவார்த்தை தொடர்பாகவும் புலிகள் தொடர்பாகவும் மிகுந்த எதிர்பார்ப்பும் ஏற்பட்டிருக்கும்.

இவற்றையெல்லாம் புலிகள் அறியாதவர்கள் அல்ல. அப்படியானால் ஏன் அவர்கள் அரசுக்கு அதிகாரபூர்வமாக தமது முடிவை அறிவிக்கவில்லை. குறைந்த பட்சம் மக்களுக்குக்கூட ஏன் தெரிவிக்கவில்லை?

புலிகள் அறிவித்து அதன் மூலமாக அவர்கள்மீது நல்லெண்ணமும், அரசியல் ரீதியான ஆதாயமும் ஏற்படக்கூடிய செய்தியை புலிகள் அறிவிக்கவில்லை. புலிகளின் 'நலன் கருதி' படையினர் அறிவித்துள்ளனர் என்பதுதான் சந்தேகங்களை உருவாக்குகிறது.

கடந்த 13ம் திகதி புலிகள் தமக்குள் பேசியதாக படையினர் ஒட்டுக்கேட்ட செய்தி 'காக்காய் உட்கார பனம் பழம் விழுந்த க்தை'யாக இருக்குமோ என்று சந்தேகம் வருகிறது.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் வெள்ளத்தால் மக்கள் அவதிப்படுகிறார்கள்.

இவ்வாறான நிலையில் அங்கு தாக்குதல்களில் ஈடுபடவேண்டாம். தாக்கினால் மட்டும் திருப்பி அடி என்று புலிகளின் தலைமை யாழிலிருந்து அறிவித்த உத்தரவை படைத் தரப்பு தவறாக அர்த்தப்படுத்தியிருக்கலாம்.

அல்லது புலிகள் தாமாகவே ஒரு போர் நிறுத்தத்தை அறிவித்ததாகக் கூறி, புலிகள் அதனை மறுக்க முடியாத சூழலை உருவாக்கிவிட்டு அரசும் போர் நிறுத்தத்தை அறிவிக்கக்கூடிய சாதகத்தை ஏற்படுத்தலாம்.

புலிகள் தாமாக முன்வந்து போர் நிறுத்தம் செய்துள்ளதாக அறிவித்தால் அரசு போர் நிறுத்தத்தை அறிவிப்பது அதிருப்தியை உருவாக்காது. தவறான

**அரசியல் நிருபர்**

பிரசாரத்தை எதிர்தரப்புக்கள் செய்யவும் வாய்ப்பிருக்காது என்பது நோக்கமாக இருக்கலாம்.

புலிகள் ஏன் தமது முடிவை உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை என்ற கேள்வி இதுவரை அரச தரப்பிலிருந்து எழுப்பப்பட வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அரசுக்கு போர் நிறுத்தத்தில் நாட்டம் இல்லையானால் அவ்வாறான கேள்வி எழுப்பப்பட்டிருக்கும்.

எப்படியோ ஒட்டுக்கேட்கப்பட்டதாக வெளிவந்த செய்தி மூலம் புலிகளுக்கு அரசியல் ரீதியான சாதகம் ஏற்பட்டிருக்கிறது.

அதே சமயம் தமது தரப்பின் மூலமாக வெளியுலகில் அறிவிக்கப்பட்ட 'புலிகளது இடைக்கால போர் நிறுத்தம் பற்றிய முடிவுக்கு' பதிலீடாக அரசாங்கமும் ஏதாவது செய்தாக வேண்டும். இல்லாவிட்டால் புலிகளது நல்லெண்ணத்தை அரசு கருத்தில் கொள்ளவில்லை என்று கருதப்படும்.

புலிகளோடு பேச்சை தொடரவும், போர் நிறுத்தம் ஒன்றைச் செய்யவும் ஒட்டுக் கேட்கப்பட்ட செய்தியை அரசு தனக்குச் சாதகமாக்கினால் அது விவேகமாக இருக்கும்.

ஒட்டுக்கேட்கப்பட்ட செய்தி உண்மை என்று புலிகள் ஒத்துக்கொண்டது மூலம் பந்தை அரசு தரப்பின் பக்கம் அடித்து விட்டிருக்கிறார்கள். இனி அரசின் முறை.

---

**"ஜனநாயகத்தின் கண்ணீர்த்துளி"**




இலங்கையின் வன்முறையால் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுவரும் சோகத்தை விளக்கும் கருத்தோவியம். அமெரிக்க 'ரைம்' ஆங்கில சஞ்சிகையில் வெளிவந்தது.

---

## கரும்புலித் தாக்குதல்! கப்பல் தப்பியது!!

(நமது நிருபர்)

ஜனாதிபதித் தேர்தல் தினமான நவம்பர் 9ம் திகதிக்கு முன்தினமான 8ம் திகதி கடற்படையினரின் தரையிறங்கு கப்பல் மீது கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டது.

8ம் திகதி அதிகாலை 12.25 மணிக்கு வெடிமருந்து நிரப்பப்பட்ட படகில் வந்த கரும்புலி கப்பலுடன் மோதினார்.

எனினும் கப்பல் சேதத்தோடு தப்பியது. மேஜர் விக்கி என்றழைக்கப்படும் பருத்தித் துறையைச் சேர்ந்த யோகேஸ்வரன் என்னும் கரும்புலி தற்கொலைத் தாக்குதலில் பலியானதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து அதே தினம் வடமராட்சி பகுதியில் விமானங்கள், ஹெலிகள் சகிதம் படையினரின் தாக்குதல் இடம்பெற்றது.

வெற்றிலைக்கேணியில் கரும்புலித் தாக்குதலுக்கு உள்ளான கப்பல் 108 அடி நீளமும், 26 அடி அகலமும் கொண்டது. 600 பேரை ஏற்றிச் செல்லக்கூடியது. 20 M.M பீரங்கிகள், விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் கப்பலில் பொருத்தப்பட்டிருந்தன.

நவம்பர் 9ம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெற இருந்தமையால் இத் தாக்குதல் செய்திக்கு கொழும்பில் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது.

---

## "பாப்பரசர் வரும்போது போர் வேண்டாம்"

### மதத்தலைவர்கள் வேண்டுகோள் விடுக்கட்டும்!

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் அடுத்து வரும் ஜனவரி மாதம் இலங்கை வரவுள்ளார்.

அவரை வரவேற்க கொழும்பில் இப்போதிருந்தே ஏற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன.

வடக்கு-கிழக்கில் உள்ள மக்களும் பாப்பரசரை வரவேற்க ஆவலாய் உள்ளனர். எனினும் அவர் செல்வது சிரமமான காரியம். அதனால் வடக்கு-கிழக்கில் இருந்து வருவோர் கொழும்பில் தங்கிக்கொள்ள ஏற்பாடுகள் நடக்கின்றன.

பாப்பரசரின் இலங்கை விஜயத்தின் போது நாடெங்கும் சமாதானம் நிலவ வேண்டும். சமாதானச் சூழ்நிலையில் அவரது ஆசிச் செய்தியை மக்கள் கேட்கவேண்டும் என்று பரவலாக விரும்பப்படுகிறது.

இது தொடர்பான வேண்டுகோளை கிறிஸ்தவ மதத்தலைவர்கள் விடுக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

---

## கரையொதுங்கிய மனிதக் கால்கள்!

யாழ்ப்பாணம் வடமராட்சி குடத்தனை பகுதியில் இரு மனிதக் கால்கள் கரையொதுங்கின.

கடந்த 8ம் திகதி வெற்றிலைக் கேணியில் கரும்புலித் தாக்குதலில் பலியான கடற்படையினரது கால்களாக இருக்கலாம் என்று 'புலிகளின் குரல்' வானொலி 13.11.94 அன்று அறிவித்தது. ■

---

## வடக்கே மாவீரர் தின விழாக்கோலம்!

## பன்னிரு நாட்கள் தொடர்ந்து நடைபெறும்!!

(வர்மா)

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இதுவரை பலியான உறுப்பினர்களை நினைவு கூரும் 'மாவீரர் தினம்' இம்மாதம் கடந்த 15ம் திகதி (15.11.94) முதல் வடபகுதியில் ஆரம்பமாகியுள்ளது.

யாழ் நகரெங்கும் விழாக்கோலம் பூண்டிருக்கிறது.

எதிர்வரும் 27ம் திகதிவரை மாவீரர் தினம் புலிகள் அமைப்பினரால் அனுஷ்டிக்கப்படும்.

எதிர்வரும் நவம்பர் 26ம் திகதி புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த தினம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

வழக்கமாக மாவீரர் தினத்தை முன்னிட்டு புலிகள் அமைப்பினர் தாக்குதல் நடவடிக்கை ஒன்றினை நடத்துவது வழக்கமாகும்.

படையினர் தரப்பினால் ஒட்டுக்கேட்கப்பட்டதாக கூறப்படும் புலிகளது முடிவின் படி ஒரு வாரகால போர் இடைநிறுத்தமே செய்யப்பட்டிருக்கிறது.

அதன்படி நவம்பர் 20ம் திகதியன்று போர் இடைநிறுத்தம் முடிவுக்கு வரும்.

அரசாங்கம் போர் நிறுத்தத்தை 20ம் திகதிக்கு முன்னதாக அறிவித்தால் போர் நிறுத்தம் தொடரும் என்று நம்பப்படுகிறது. இல்லாவிட்டால் புலிகள் அமைப்பினர் தாக்குதல் ஒன்றை நடத்தக்கூடும்.

கடந்த வருடம் மாவீரர் தினத்தை முன்னிட்டு பூநகரி இராணுவ கூட்டுத்தளம் மீது புலிகளால் 'தவளைத் தாக்குதல்' நடத்தப்பட்டது.

மாவீரர் தினத்தை முன்னிட்டு புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் 'தமிழீழ விடுதலை கீதங்கள்' ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

பாடசாலைகளிலும் மாவீரர் தின அனுஷ்டிப்பு நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு ஈடுபட்டுள்ளது.

---

## அம்பாறையில் அரசியல் மாநாடு!

(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ் மக்களின் தேவைகள், பிரச்சனைகளை அறிந்து அவற்றிற்குத் தீர்வு காணும் நோக்குடன், அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களின் அரசியல் மகாநாடு ஒன்றை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நடத்துவதற்கு உத்தேசித்திருப்பதாக அமைச்சர் அல்-ஹாஜ் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அறிவித்துள்ளார். வீரமுனை தமிழ் கிராமத்தில் புதிய உப தபாலகம் ஒன்றின் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார். குறைந்தது ஆறு மாத காலத்திற்கு ஒரு தடவையாவது இத்தகைய மாநாட்டு ஒன்றுகூடல் நடைபெற்று தமிழ் மக்கள் பிரச்சினைகளை ஆராயவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

---

## பௌசியை அழைக்கத் திட்டம்!

### கிழக்கில் தொடரும் பனிப்போர்!!

(அம்பாறை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையே பனிப் போர் நிலவுகிறது.

இதன் ஒருகட்டமாக அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸியை அம்பாறை மாவட்டத்திற்கு அழைத்து பெரும் வரவேற்பளிக்க அங்குள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் திட்டமிட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண வெள்ள நிவாரணத்திற்காக சுகாதார பெருந் தெருக்கள் அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம்.பௌஸி 15 இலட்சம் ரூபாய்களை வழங்கியுள்ளமையும் அம்பாறை மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி வட்டாரங்களில் உற்சாகத்தைக் கொடுத்திருக்கிறது.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகும் பிரமுகர்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பக்கமே செல்லுகின்றனர்.

ஏற்கனவே முஸ்லிம் காங்கிரசோடு கடுமையாக முரண்பட்ட நிலையில் செயற்பட்டதால் அவர்கள் முஸ்லிம் காங்கிரசில் சேரமுடியாத நிலை இருப்பதும் அதற்குக் காரணமாகும்.

முஸ்லிம் காங்கிரசோடு முரண்பாடானவர்கள் சி.சு.கட்சியில் சேருவதாலும் பனிப் போர் நீடிக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

---

## இ.தொ.கா.மீது குற்றச்சாட்டு!

(அரசியல் நிருபர்)

ஜனாதிபதித் தேர்தலில் இ.தொ.காவின் முக்கியஸ்தர்கள் சிலர் தலைமையின் முடிவையும் மீறி ஐ.தே.கட்சிக்கு ஆதரவாக செயற்பட்டதாக மலையக மக்கள் முன்னணி வட்டாரங்கள் கூறியுள்ளன.

நுவரெலியா போன்ற பகுதிகளில் இ.தொ.கா. உறுப்பினர்கள் தீவிரமாகப் பணியாற்றி இருந்தால் இன்னும் அதிகமான வாக்குகள் கிடைத்திருக்கும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இ.தொ.காவின் முடிவை அமைச்சர் தொண்டா சார்பாக திரு.தேவராஜ் உறுதிப்படுத்தியிருந்தார். ஆனால் இ.தொ.காவின் பொதுச் செயலாளர் திரு.ஆறுமுகம் தொண்டமான் பகிரங்கமாக அறிக்கை எதனையும் வெளியிடாமல் இருந்துவிட்டார்.

தலைவர் நாட்டில் இல்லாதபோது பொதுச் செயலாளர் தமது கட்சி முடிவை விளக்குவதே சரியாக இருந்திருக்கும் என்றும் இ.தொ.காவின் எதிரணியினர் கூறுகின்றனர்.

இதேவேளை கொழும்பின் ஆங்கில வார ஏடான 'சண்டே ரைம்ஸ்' அமைச்சர் தொண்டா மீதான ஊழல் குற்றச்சாட்டு பற்றி வெளியிட்ட தகவல்கள் ஐ.தே.கட்சி மூலமாக பெறப்பட்டதாகவும் அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

---

## பங்குகொள்கிறோம்

இயற்கையின் சீற்றம் பல்லாயிரம் மக்களை படுமோசமாகப் பாதித்திருக்கிறது.
வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் சோகத்தில் முரசும் பங்குகொள்கிறது.
அரசியல் வேறு பாடுகள் கடந்து நிவாரணப் பணிகள் துரிதமாக நடத்தப்படும் அவசியத்தையும் முரசு சுட்டிக்காட்டுகிறது.

(ஆ-ர்)

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## கொச்சிக்காப் போடியார் மடல், அதிரடி அய்யாத்துரையாருக்கு!



# “கணகாட்டும் கக்கிசமும் மனுஷன கயிட்டப்படுத்துது”

## — போடியார் கவலை

அண்ண,

சிவ சிவா எண்டுத்துத்தான் விடியங் காலத்தால எழும்பிற நான். புலிபாஞ்ச கல்லில இவ்வளவு நாளும் மேச்ச நம்மட மாட்டுப்பட்டிய, மாரிப்பவ்வலுக்கு அங்க உட ஏலா எண்டு கண்டு கட்டின காலப் பக்கம் சாச்சிப் போட்டன். பாலக் கறக்கவும் வழியில்ல. மாட்டக் கண்ட, விப்பமெண்டா அறாவிலைக்கு கேக்கானுகள். என்ன எண்டும் தெரியல்ல. நம்மட கோப்பாவெளி கோணரு டவுணுக்க வாற எண்டு விசளம் அனுப்பியிருக்காரு. பாத்திற்றுக் கிடக்கன். குறிஞ்சா முன குருநாதப் போடியாரும் வாராறாம் எண்டு கத. வந்தா கிந்தா டவுணுக்குள்ள கிடக்கிற மாட விக்கலா மெண்டு நினைக்கன். ஏனெண்டு கேட்டா, இச்சயும் வச்சிருக்கிற நல்லாத் தெரியல்ல.

டவுணுக்குள்ள புல்லுகில்லுமில்ல. கண்ண மூக்கப்பாத்து கவுன்சில் ஆக்கள் புடிச்சிக்கிடிச்சித்து போயிருவானுகள், எண்டபடியால் அரைக்கி பாதி வந்தாலும் வித்துப் போடத்தான் பாக்கிறன்.

அய்யாத்துரை அண்ண, இந்தப் போடிய தெரியுந்தானே உங்களுக்கு! ‘மழக் கால் இருட்டெண்டாலும் மந்தி கொப் பிளக்கப் பாயாது’ எண்டதப் போல போடி போடிதான்.

நாலஞ்சி நாளா நல்ல மழையுந்தான். சரசுவதி பூச பொடு பொடுப்புப் போல. பள்ளியெண்டுமில்ல, கந்தோர் எண்டுமில்ல, கயிட்டம் எண்டுமில்ல, கக்கிசம் எண்டு மில்ல, எல்லா இடத்திலயும் பொங்கலும், பூசையுந்தான்.

கடல, அவல் சப்பினதுல பல்லக்கட்ட வேணும் போல கிடக்கு. எல்லாரும் அள்ளித் தந்தா எப்பிடித் தின்னுற?

அண்ண! என்ர தலையிலையும் நாலு மயிர்தான் கிடக்கு. எல்லாம் பறந்திற்று. ‘நீ போடியெண்டாப்ப எண்டெண்டும் மாக்கண்டேயர் போல’ இரிக்கலாமா எண்டு- நம்மட மண்டபத்தடி மானாகப் போடி கேட்டுத்துப் போறாரு. யாழ்ப் பாணத்தில இருக்கக்க, சும்மா சொல்லப் படாது, நல்லா கள்ளிலயும் போட்டுத்து பொழு பொழுப்பா இருந்த நான். இப்ப நல்லா வடிஞ்சி போனன். தலையில இருக்கிற நாலு மயிரு தப்பிப் புழைச்சிருக்கு. ஒவ்வொரு நாளும் நம்மட தமிழனுகளிட கக்கிசத்தப் பாத்து தடையுண்டு போனன்.

அண்ண! எண்ட மனுஷியும் சொல்லிப் போட்டாவு. தலையில மயிர் பறந்தா காரியமில்லை. என்ர பொன்னாரு மச்சான்ர உசிரு இந்தக் கூட்டுக்க கொஞ்சக் காலம் கிடந்திடட்டும். என்ர கண்மூடினதும் அவருர கண்ணு மூடினா போதும். நல்லூரானிட்டயும், மண்டூரானிட்டயும் நான் கேக்கிற நேத்தி அவ்வளவுதான்” எண்டு அவ நேத்திக்கடன் வைக்கிறா....!

அண்ணேய்! என்ர மனுஷிர பேரு நாமம் உங்களுக்கு தெரியுந்தானே- தங்கப்பொன்னு எண்டு!

என்ர மகளுக்கும் செல்லக்கண்டு எண்டுதான் பேர் வைச்சிக்கிருக்கன்.

எண்ட மகனும் அவண்ட புள்ளைக்கு ‘குசுப்பு’ எண்டு வைக்கவேணுமெண்டு ஓடினதாம். சரிவரல்லப் போல. ஊர் ஆக்களெல்லாம் ஒரே மூச்சிலே சொல்லிப் போட்டாங்களாம்- குசுப்பு, கிசுப்பு வேணாம், செல்லக்கண்டு எண்டு வைக்கச் சொல்லி.

ஒவ்வொரு கிழமையும் எழுதவேணும் எண்டுதான் நினைக்கிற நான். எங்க நேரமெண்டா கொஞ்சமும் இல்ல. கண காட்டும், கக்கிசமும் ஒரு பக்கம். மத்தப் பக்கத்தால மழ பொடு பொடுப்போட நாலு நெல்ல எறிஞ்சித்தமெண்டா நாலு நெல்லுத் தொட்ட நமக்கும் கிடைக்கு மெலுவா? பயளைய, கியளைய கொண்டு போறதும், கரச்சலாத்தான் போகும் போல. கொண்டுபோக விட்டவனுகள்தான் முன்ன. இப்ப என்னடா எண்டா, பொடி யனுகளும் வாறானுகளாம் எண்டு ஒரு கத. ஒண்டயும் கொண்டு போக விடுறானுகள் இல்ல. சென்றியளையும் சிக்காராக்கிப் போட்டானுகள்.

மட்டக்களப்பும் ஒரு மாதிரிக் கிடக்கு. ஏசண்டுத் துரையையும் மாத்திப் போட்டா னுகள். ஏ.கே-ய போட்டது தெரியுந்தானே! கனக்க ஆக்கள் இதுக்குப் புறகு கதிகலங்கிப் போனாங்க!

அண்ண! எப்பிடி எண்டாலும் நம்மட ஆக்களுக்கு துர்க்க கடாட்சம், லெச்சுமி கடாட்சம், சரசுவதி கடாட்சம் கிடைக்க வேணும். கிடைச்சிடுமெண்டா நம்மட பொடியனுகளோட சேர்ந்து நாம...

## பொத்துவிலில் சூழும் மலேரியா

திருக்கோவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பொத்துவில் பிரதேசத்தில் உள்ள சுற்றயல் கூறு வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவில் அனேகமானோருக்கு மலேரியா நோய் ஏற்பட்டிருப்பது அவதானிக்கக் கூடியதாக இருந்ததெனத் தெரிவிக்கின்றார் பொத்துவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.எஸ்.எம். அப்துல் மலிக்.

பரவிவரும் மேற்படி மலேரியா நோயைத் தவிர்ப்பதற்காக பின்வரும் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறு ஆலோசனை வழங்குகிறார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்.

1. நீர் தேங்குகின்ற குட்டைகளை மண் கொண்டு நிரப்பி நீரை வழிந்தோடச் செய்தல்.
2. மழை நீர் தேங்குகின்ற பழைய கலன், போத்தல், சட்டி பானை, குடம், டின் ஆகியவற்றை குழியிலிட்டுப் புதைத்தல்.
3. வீட்டின் கூரையின் மேல் பாரத்துக்காகப் போடப்பட்டுள்ள பழைய டயர்களில் நீர் தேங்காமல் இருப்பதற்காக டயரை இரண்டாக வெட்டி மண்கொண்டு நிரப்பி பாரமேற்றுதல்.
4. நீர் தேங்குகின்ற தேங்காய் சிரட்டை, குரும்பைக் கோம்பை, இளநீர் கோம்பை போன்றவற்றில் நீர் தேங்காமலிருப்பதற்காக அதனை இரண்டு மூன்றாக வெட்டி காயவைத்து விறகாகப் பயன்படுத்தல்.
5. சொப்பிங் பேக் எனும் சிலு சிலு பையை நீர்தேங்சி விடாமல் சுற்றாடலில் இல்லாதொழித்தல்.
6. மாலை 5 மணியுடன் ஜன்னல், கதவுகளை மூடிவைத்தல்.
7. ஜன்னல், கதவுகளுக்கு வலைத் துணி இடுதல்.
8. நுளம்பு வலை, நுளம்புத் திரி பாவிப்பதோடு வீட்டுக்கு மலத்தியன் தெளித்தல்.

## தரம் குறைந்த பேச்சுகள்

### தவறான முறையில் தண்டனைகள்!

(சிலாபம் நிருபர்)

சிலாபம் நகர தமிழ்பாடசாலை ஒன்றில் கல்விகற்கும் சிலாபம் நகரசபை சிற்றூழியர்களின் பிள்ளைகள் தரக் குறைவான முறையில் நடாத்தப்படுவதாக சிலாபம் பத்திரிகையாளர்களுக்கு செய்திகள் கிடைத்துள்ளன.

ஒரு சில ஆசிரியர்களும், ஆசிரியைகளும் தரக்குறைவான வார்த்தைகளால் பேசுவதாகவும், தும்புத் தடியால் ஒரு மாணவியை அடித்தும் உள்ளனர். இப்பாடசாலையில் இது போன்ற சம்பவங்கள் அண்மைக்காலமாக கூடிவருவதாகவும் தெரியவந்துள்ளது. இது சம்பந்தமாக இவ் ஆசிரியர்கள், ஆசிரியைகள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக சிலாபம் பத்திரிகையாளர் சங்கமும், வேறு சில பொதுநல ஸ்தாபனங்களும் நகரசபை தலைவர் திரு. சுவனீ பெரேரா உதவியுடன் மேற்கொள்ள உள்ளது.

## ஒரு மறுப்பு

# தபால்கள் உடைக்கப்படுவது உண்மை

## ஆனால் அதிபர் பொறுப்பல்ல

ஒக்டோபர் 16.22.1994 தினமுரசு வாரமலரின் 4ம் பக்கம் கிழக்கின் கிடுகிடுச் செய்திகள் என்ற தலைப்பின் கீழ் வெளியான ‘ஒழுக்கம் தவறலாமோ?’ என்ற செய்தியில் தேனகத்தின் தாதியர் பயிற்சிக் கல்லூரியின் அதிபர் சம்பந்தமான குறிப்பினைப் பார்த்து வியப்புற்றேன். இங்கு தாதியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றே ஒன்று இருப்பதாலும், அதிபர் நான் என்பதாலும் பெரும் மனத்தாக்கத்தைத் தந்துள்ளது.

1. ஏனையோர் மடலைப் பார்ப்பது
2. அலுவலக ஊழியரின் திருமணம் தடைப்பட்டது,
3. தாதி மாணவர்களின் மடலைத் திருட்டுத் தனமாகப் பார்ப்பது சம்பந்த குறிப்பு களைப் பற்றி விளக்க விரும்புகிறேன்.

1. பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் மட்டக் களப்பு பிரதேசத்தில் விநியோகிக்கப் படும் சில தபால்கள் சந்தேகத்தின் பேரில் அதிகாரிகளால் உடைத்து வருவதை அவதானித்துள்ளேன். இதற்கு அதிபர் பொறுப்பல்ல.

வேறு தாதியர் பாடசாலை அன்றி எமது பாடசாலையைக் குறிப்பிடுவதாயின் அது அதிபருக்கு அபகீர்த்தியை உண்டு பண்ணக் கொடுத்த செய்தியாகவே இருக் கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தயவு செய்து மேற்படி மறுப்புச் செய்தியை தங்களது வாரமலரில் பிரசுரித்து தெளிவுபடுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி. தே. அருளானந்தம்
அதிபர்
தாதியர் பாடசாலை-மட்டக்களப்பு.


## BRIGHT BOOK CENTRE (PVT) LIMITED

S-27, First Floor Colombo Central Super Market Complex, Colombo 11. (T. P. 434770)

77/24 Jampatta Lane (பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் கிழக்குவாசல் வீதி) கொழும்பு - 13.

### மாபெரும் மலிவு விற்பனை

1.12.94 முதல் 31.1.95 வரை பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரையிலான சகல புத்தகங்களும் அப்பியாச கொப்பிகளும் மலிவு விலையில் விற்கப்படும். இத்தோடு வாப்பாடு, நேர அட்டவணை, பொக்கட் கலண்டர் இலவசமாக வழங்கப்படும்.

### BRIGHT ன் தபால் மூலம் கல்வித்திட்டம்

### 90 DAYS SPOKEN ENGLISH & SINHALA

மூன்றே மாதங்களில் ஆங்கிலம், சிங்களம் பேச, எழுத, வாசிக்க சிறந்த முறையில் நவீன உளவியல் அடிப்படையில் மாணவர் உவந்து ஏற்கும் முறையில் சிறந்த தபால் மூலம் பாடத்திட்டமாக தயாரித்துள்ளோம். படித்தோர் பாராட்டுகின்றனர். மற்றையோர் படித்து பயன்பெற விரும்புகின்றனர். நீங்களும் அவர்களில் ஒருவரானால் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

### METHOD OF BOOK-KEEPING கடைக் கணக்கு எழுதும் முறை

கடைக் கணக்கு எழுதும் முறை ஆரம்பத்திலிருந்து தபால் மூலம் கற்றுத் தரப்படும். இது ஆறுமாதகால Diploma பயிற்சியாகும். இதனைக் கற்பதன் மூலம் தொழில் அற்றோர் தொழில் பெறவும், சுய தொழிலில் ஈடுபடுவோர் தம்முடைய கணக்குகளை தாமே தயாரித்துக் கொள்ளவும் முடியும். அத்தோடு தொழில் பெறக்கூடிய சான்றிதழும் வழங்கப்படும்.

### ஆண்டு 4 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் - 1995 முன்னோடி பயிற்சியும் BRIGHT ன் வெகுமதியும்

தற்போது ஆண்டு 4 மாணவர்களை புலமைப் பரிசில் போட்டியில் சித்திபெற முன்னோடிப் பயிற்சி தபால் மூலம் ஆரம்பமாகி உள்ளது.

### EFFECTIVE ENGLISH WITH GRAMMAR செயல்திறனுடைய ஆங்கிலத்துடன் இலக்கணம்

பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களும் க.பொ.த. பரீட்சையில் சித்தியடைய விரும்புவோரும் ஆங்கில இலக்கணத்தை அறிய விரும்புவோரும் படிக்க கூடிய ஆறு மாத கால தபால் மூலம் பாடத் திட்டமாகும். இலகுவாக எளிய முறையில் எவரும் கற்றுத் தெளியக் கூடிய முறையில் மிகவும் விரும்பக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டமாகும். இப்பாடத்திட்டத்தில் கற்றவர்களுக்கு ஆங்கிலம் ஓர் அந்நிய மொழியல்ல... மிக இலகுவான பாடத்திட்டம்.

### மத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தொழில் புரிவோரும் இக்கல்வித்திட்டத்தில் பங்கு கொள்ளலாம்.

மேலதிக விபரங்கட்கு கீழ்காணும் விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து முத்திரை ஒட்டப்பட்ட சுய விலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

விரும்பும் பாடநெறி: ....................

முழுப்பெயர்: ....................

முகவரி: ....................

Mercantile Ads.

### BRIGHT TRAINING CENTRE

S-27, First Floor, Colomba Central Super Market Complex, P.O. Box-162 Colomb 11. T.P. 434770


## விளம்பரப் பகுதி




### மலையாள மாந்திரீகம்

27 வருடங்களாக மலையாள மாந்திரீக துறையில் நுணுக்கமாக நான் கற்றறிந்த வகையில் இக்காலங்களில் அவ்வப்போது அவரவர் குறைகளுக்கு என்ன பரிகாரம் என அச்சொட்டாக அவ்வேளைகளிலே மலையாள பகவதி வெளிச்ச வீடாக எனக்கு காட்டிக் கொடுக்கின்றது.

இதையொட்டியே வளர்ந்த எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாறியது. அத்துடன் நவீன உலகத்துக்கு தகுந்தவாறு என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம், கைரேகை இவைகளுக்கான அதி அற்புத கம்பியூட்டர் உண்டு. உங்கள் குறை என்ன? காதல் தோல்வியா? கல்யாணம் நடக்கவில்லையா? நினைத்தது நினைத்தவாறு நடக்கவேண்டுமா? காதலுக்காக சாவா? வாழ்வா என நினைப்பதை விட்டு என்னை சந்திக்கலாமே.

இவ்வாண்டு மாந்திரீக சக்தியின் வெற்றி பெற்ற ஜபிதா இதோ?

இவ்வாண்டு மலையாள மாந்திரீக காந்த சக்தியும் வெற்றியும்:

நிறைவேறாத காதல் வசியம்- 100/97
கடல் கடந்து செயல் புரியும் காதல் வசியம்- 100/97
கணவன் மனைவி பிணக்கு- 100/45
பெற்றோர் விரும்பாத காதல்-100/87
குத்தகை குடியிருப்போர் பிரச்சனை-100/33
தீரா ஆஸ்துமா நோய்- 100/100
திருமணத் தங்குதடை நிவர்த்தி-100/97
குடிபோதை நிவர்த்தி- 100/97
கல்வி ஞான விருத்தி- 100/72
சகல வியாபார விருத்தி- 100/83
மீன்பிடி, பண்ணை, ஆடு,மாடு,கோழி வளர்ப்பு- 100/27
புத்திர பாக்கியம்-100/33
பிசாசு தோஷம், சூனிய நிவர்த்தி-100/97

கொழும்பில் மாதந்தோறும் மாதக் கடைசியில் 30,31 திகதிகளில் தான தர்மமும் துர்க்கை உச்சாட பூசை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும். அன்று நிச்சயம் உண்மை அறியலாம்.

**தலைமைப்பீடம்**
P.K.சாமி JDGAN
(மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3093

**கொழும்பு இல்லம்-**
இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 342463, 342464



### நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு | ரூபா 440/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் | ரூபா 225/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் | ரூபா 115/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.
சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.


## நிரந்தரமாக்குவதில் நீடிக்கும் தாமதம்!

(நாரம்மலை நிருபர்)

பயிலுனர் பட்டதாரி ஆசிரியர்களையும், சேவையில் இருக்கும்போதே பட்டம்பெற்ற ஆசிரியர்களையும் நிரந்தரமாக்கும் பணியில் வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் தற்போது ஈடுபட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் மாகாண கல்வித் திணைக்களங்கள் ஏற்கனவே இவ்வாசிரியர்களை நிரந்தரப் பட்டதாரி நியமனங்களுக்கு வழிசெய்யும் வகையில் தம் பணிகளைப் பூர்த்தி செய்துள்ளன.

பல பட்டதாரி ஆசிரியர்களும், பட்டதாரிச் சங்கங்களும் கோரிக்கை விடுத்ததன் பின்னர் இப்பணியை ஆரம்பித்துள்ள வடமேல் மாகாண கல்வித்திணைக்களம், ஒரு வருடம் பூர்த்தியான பட்டதாரி ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளன.

கல்வியமைச்சின் செயலாளரின் No/S/5/53 அறிக்கையின் படி (NO/93/2) 1993.06.01 வரை ஒரு வருடம் பூர்த்தியான சகல பட்டதாரிகளையும் நிரந்தர மாக்குதல் வேண்டும். இவ்வறிக்கையின்படி பயிலுனர் பட்டதாரிகள் நியமனங்கள் அனைத்தும் பூர்த்தியடைதல் வேண்டும்.

எனினும் 1993.06.01ந் திகதியின் பின்னர் ஒரு வருடம் பூர்த்தியான பயிலுனர் பட்டதாரிகள் நியமனம் இடம் பெறுவதில்லை.

இது சம்பந்தமாக குளியாப்பிட்டி பட்டதாரிகள் சங்கம் வடமேல்மாகாண முதலமைச்சரினதும், கல்வியமைச்சரினதும் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளது.

## பஸ்சேவை கிடைக்குமா?

### நாசிவன் தீவு மாணவர்களின் பெரும்பிரச்சனை

(ஏறாவூர் நிருபர்)

நாசிவன் தீவிலிருந்து வாழைச்சேனை இந்துக் கல்லூரிக்கு வரும் சுமார் 100க்கு மேற்பட்ட மாணவர்கள் பெரும் போக்குவரத்துப் பிரச்சனையை எதிர்நோக்குகிறார்கள். சுமார் 3 1/2 மைல் தூரத்தை தரைவழியாக இம்மாணவர்கள் நடந்து வாழைச்சேனை இந்துக் கல்லூரிக்கு வரவேண்டியுள்ளது. அல்லாமல் அவர்கள் நாசிவன் தீவு வாவியைப் படகு மூலம் கடந்து வருவதானால் உரிய நேரத்திற்குப் படகு கிடைக்காமை, வாவியில் மழை, காற்று போன்ற பலதரப்பட்ட பிரச்சனை களை இம்மாணவர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

நாசிவன்தீவு வாழைச்சேனைக்கான படகுச சேவை கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் ஆரம்பித்து வைக்கப்பட்டு அதன் சேவை அத்துடனே நின்றுவிட்டது.

எனவே தற்சமயம் தியாவட்டவான் வரை மேற் கொள்ளப்படும் இ.போ.ச.பஸ் சேவையை நாசிவன்தீவு வரை நீடிக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் தினமுரசு வாயிலாக வேண்டுகோள் விடுக்கின்றனர்.


### மாந்திரீகம்

நீங்கள் விரும்பும் நபரை உங்கள் வசமாக்கி எண்ணங்களை நிறைவேற்ற காதலில் வெற்றிபெற, கல்வியில், செய்யும் தொழில் மேன்மையடைய, வேண்டாதோர் உறவைப் பிரித்து வைக்க, பேய்-பிசாசு-பில்லி சூனியங்களை விரட்ட, எதிரியை முறியடிக்க, வழக்கில் வெற்றிபெற மட்டக்களப்புமாந்திரீகம் செய்து கொள்ளுங்கள்.

வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கும் கடல் கடந்து பலிக்கும்படி செய்து அனுப்பிவைக்கப்படும்.

கடிதத் தொடர்பு
**Yogi-S.Lafeer**
Ipps of Swiss And Lanka
**Nintavur (E.P.)**
**Sri Lanka.**



### விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்குங்கள்.

விளம்பர மேலாளர்
இல.5, காவிந்த பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-06.

Phone 852041

**Advertising Manager**
No.5, Kavinda Place,
Kirulapone
Colombo-06.

www.padippakam.com
நன்றி நூலகத்திட்டம்

# சோகக் காட்சியோடு முடிந்த 17 வருட தொடர் ஆட்சி!

**நாரதர்**

வாக்காளர்களிடம் ஐ.தே.கட்சி வாங்கிக் கட்டிக்கொள்ளும் என்பது எதிர்பார்த்தது தான்.

ஆனாலும் இந்தளவுக்கு அடி பலமாக இருக்கும் என்று முதலில் எதிர்பார்க்கவில்லை.

வெள்ளைச் சேலையைக் காட்டினால் வெளுத்துவாங்கலாம் என்று நம்பியது முதற் கோணல்.

நாடறியாத ஒருவரை காமினியின் துணைவி என்ற இலச்சினையை மட்டும் காட்டி வாக்கு சேகரிக்கும் இயந்திரமாக நம்பியவர்களுக்கு நவம்பர் 9 நள்ளிரவுக்குப் பின் முகம் கறுக்கத் தொடங்கிவிட்டது.

முதலில் எண்ணப்பட்ட தபால் மூலமான வாக்களிப்பு எண்ணிக்கை அபாயத் தந்தியாக முடிவை முன்கூட்டியே கூறிவிட்டது.

சிலருக்குப் பட்டால்தான் புத்தி வரும். அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை பட்டால் கூட புத்திவராது. காரணம், பதவி ஆசை. பதவி மூலமான லாப வரவுகள்.

மாற்றத்தை விரும்பும் தமது விருப்பத்தை கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வாக்காளர்கள் கோடிட்டுக் காட்டிய போதும் ஐ.தே.கட்சி கண்ணை மூடிக் கொண்டு இருந்ததுதான் சோகம்.

காமினி பலியான போது ஏற்பட்ட சோகத்தோடு, தேர்தலில் வெற்றிபெற ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்ற ஆறுதலும் ஐ.தே.கட்சிக்குள் சிலருக்கு ஏற்பட்டிருந்தது.

17 வருடமாக ஒரே கட்சி ஆட்சி. ஒரே விதமான காட்சிகள். சலித்துப் போயிருந்த மக்களுக்கு சந்திரிக்காவின் வரவு புதிய உற்சாகத்தை கொடுத்திருக்கிறது.

புழுக்கமும், நெருக்கமுமான அறையில் இருந்து வெளியே வந்து சுத்தமான காற்றையும், வெளிச்சத்தையும் தரிசிப்பது மாதிரியான சந்தோசம்.

17 வருடமாக தொலைக் காட்சியில் கூட அநேகமாக ஒரே முகங்கள். 17 வருடமாக புன்னகைத்து செயற்கைத் தனமாகப் புன்னகைப்பது போல மாறிவிட்ட முகங்கள்.

அதனால்தானோ என்னவோ இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சியின் தீவிர ஆதரவாளர்கள் பலர்கூட வாக்களிக்கச் செல்லவில்லை.

சிலரால் பதவிக்குப் பெருமை. வேறு சிலருக்கு பதவியில் இருப்பதனால் மட்டுமே பெருமை. திரு.டி.பி. விஜயதுங்கா இரண்டாவது ரகம். பதவி என்ற ஒன்று மட்டும் இல்லையானால் அவர் பேச்சைக் கேட்க அவரது கட்சிக்குள் கூட ஆள் இருக்காது.

அது தெரிந்துதான் ஆட்சியில் இருந்து விடைபெற முன்னரே அவர் கட்சியின் தலைமையை மெல்லக் கைவிட நேர்ந்தது.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சியை அறிமுகப்படுத்தியதால் சர்வாதிகார முறையை விரும்பிய கட்சி என்ற பெயரை சம்பாதித்துக் கொண்டது ஐ.தே.கட்சி.

திரு.டி.பி. விஜயதுங்கா ஜனாதிபதியான பின்னர் அந்தப் பெயர் மட்டுமே இருந்தது. அதிகாரம் கையில் இருந்தும் அதிகாரம் செலுத்தக்கூடியவரான ஒருவர் இல்லாமல் ஐ.தே.கட்சி அழுது வடிந்ததோடு 17 வருட தொடர் காட்சி முடிவுக்கு வந்தது.

ஆனால், சோகம் கூட கோபிக்கவில்லை. சிவாஜியின் சோகப் படம் பார்த்தால்கூட ஒரு திருப்திவரும்.

திரு.டி.பி. விஜயதுங்காவும், காமினி குடும்பத்தவரான திரு. விக்கிரமசூரியாவும் பங்குகொண்ட இறுதிக்கட்ட சோகக் காட்சிகள் வாக்காளர்களது மனதில் நிற்காமல், கட்சியே ஆட்சிக் கட்டிலில் இருந்து முற்றாக வெளியேற வேண்டியதாகிவிட்டது.

ஏற்கனவே ஆயுத பேர ஊழல்கள் பற்றிய பேச்சுக்கள் எழுந்தமையும் முன்னாள் ஜனாதிபதி அடக்கிவாசிக்க காரணம் என்று கருத இடமுண்டு.

பதவி முடிந்தபின் சர்ச்சைகளில் சிக்காமல் ஓய்வு நாற்காலியில் அமர அவர் விரும்பியிருக்கலாம் என்று தோன்றுகிறது.

ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் திருமதி. சிறிமாவோவின் குடியுரிமை பறிக்கப்பட்ட நினைவும் திரு.டி.பி. விஜயதுங்காவிற்கு எழாமல் இருந்திருக்காது.

எப்படியோ இறுதியில் அழுதுவடியும்

சேர்த்து வைத்து ஒன்று திரட்டி பார்க்கும் போது 17 வருடகால ஐ.தே.கட்சி ஆட்சி பற்றி சொல்வதற்கு நிறைய குற்றச் சாட்டுக்கள். பட்டியலிடக் கூடிய வசதி.

பொதுஜன முன்னணிக்கு தனது கொள்கைகளைக் கூறவே நேரமிருக்கவில்லை. ஐ.தே.கட்சியின் 17 வருட ஆட்சி பற்றி தாராளமாக பேசவே நேரம் போதுமானதாகவிருந்தது.

டி.பி.விஜயதுங்கா தலைமையேற்ற பின்னர் ஐ.தே.கட்சிக்கும் ஒரு வயோதிப தோற்றம் ஏற்பட்டிருந்தது.

தனது தலைமைத்துவத்தில் வயதை மீறிய இளமையான புத்துணர்ச்சி எதையும் ஆட்சியிலோ அல்லது கட்சியிலோ டி.பி. விஜயதுங்கா ஏற்படுத்தித் தரவில்லை.

ஜனாதிபதி தேர்தலின் போது கூட தமது ஜனாதிபதி அதிகாரத்தில் இருந்தது மூலமாக ஐ.தே.கட்சிக்கு பெரிய சாதகம் எதுவும் கிடைக்கவில்லை.

ஜனாதிபதி என்பவர் பொதுவானவர். நான் ஐ.தே.கட்சிக்கு மட்டும் ஜனாதிபதி அல்ல என்று இறுதிக் கட்டத்தில் டி.பி. விஜயதுங்கா தெரிவித்த கூற்று வில்லங்கம் இல்லாமல் விலகிக்கொள்ளவே அவர் விரும்பியிருந்தமையை வெளிப்படுத்தியது.

ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் தாக்கப்படுவதாக அக்கட்சி புகார் செய்யுமளவுக்கு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி கைகட்டிக்கொண்டு இருந்ததுதான் இன்றும் சோகம்.

நிலையில் கட்சியை திரு. ரணிலிடம் ஒப்படைத்து விட்டார்கள்.

ஐ.தே.கட்சி வேட்பாளராக திருமதி. காமினி போட்டியிட முன்வந்தமைக்கு திரு. ரணில் இப்போது நன்றி சொல்லியிருக்கிறார். சீரியசாக சொன்னாரா அல்லது ஜோக்கா என்று தெரியவில்லை.

□□

இப்போது ஜனாதிபதி சந்திரிக்கா மீதுதான் சகலரது கவனமும் குவிந்திருக்கிறது.

அவர் என்ன சொன்னாலும், எதைச் சொன்னாலும் பாராட்டுவதற்கென்றே பலத்த போட்டி நிலவுகிறது.

ஜனாதிபதியாக பதவியேற்ற போது திருமதி. சந்திரிக்கா மும்மொழியில் பேசியது வரவேற்கத்தக்கது என்பதில் ஐயமில்லை.

ஆனால் அதனைச் சொல்லி தனியாக ஒரு அறிக்கை விடவே போட்டி நிலவியது தான் வேடிக்கை.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவும் பல தடவைகள் தமிழிலும் உரையாற்றினார் என்பதையும் மறந்துவிட முடியாது.

ஒருவர் புகழைப் போற்றுவதற்காக இன்னொருவர் புகழை மறைப்பது எப்படி நியாயமாகும்? எதிர்காலத்தில் இதே நபர்கள் இன்னொருவரைப் புகழ சந்திரிக்காவின் சாதனைகளையும் வேண்டுமென்றே மறக்கக்கூடும்.



# அரசு—புலிகள் அடுத்தது என்ன?

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

எக்ஸ்ரே ரிப்போர்ட்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

இன்னொரு பேச்சும் பிரபலமாகி வருகிறது. 17 வருடம் எதுவுமேயில்லை. இப்போதுதான் செய்திச் சுதந்திரம் கிடைத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்கிற விமர்சனப் புலிகள் ஜனாதிபதி சந்திரிக்காவையோ அல்லது அரசையோ விமர்சிக்கத் தொடங்கிவிட்டு அதனைச் சொன்னால் நன்றாக இருக்கும்.

சரியானவற்றை வரவேற்பது தவறானவற்றை எதிர்ப்பது என்ற விடயத்தை சகல தரப்புக்கள் விடயத்திலும் கடைப்பிடிக்கும் விமர்சகர்கள் மட்டுமே செய்திச் சுதந்திரத்தின் நிலவரம் பற்றி மதிப்பிடத் தகுதி உடையவர்கள்.

அதுமட்டுமல்ல தமிழ்பேசும் மக்கள் மத்தியில் உள்ள செய்திச் சுதந்திரம் என்பதும் அதற்கான அச்சுறுத்தல் என்பதும் அரசாங்கத்தின் மூலமாக மட்டும் ஏற்படும் விடயமல்ல.

கடந்தகால ஆட்சியில் ரிச்சர்ட் டி சொய்ஸா காணாமல் போனார். அதனைக் கண்டித்தும் எதிர்த்தும் பத்திரிகையாளர்கள் போராடினார்கள்.

ஆனால், வடக்கில் ஈழநாடு பத்திரிகையாளர் சண்முகலிங்கம் புலிகளால் அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் போனார். எங்கே என்று கேட்கவும் எவருக்கும் திராணியில்லை.

யாழ்ப்பாணத்தில் பிரபலமான ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் புலிகளால் தகர்க்கப்பட்டது.

பின்னர் இந்திய படையால் புலிகளது ஆதரவு பத்திரிகையான ஈழமுரசு காரியாலயம் தகர்க்கப்பட்டது.

யாழ் செல்லும் பத்திரிகையாளர்கள் புலிகளால் கண்காணிக்கப்படுகிறார்கள். புலிகளை விமர்சித்து முறிந்த பனை என்னும் ஆவணத்தை வெளியிட்ட யாழ்பல்கலைக்கழக பேராசிரியர்கள் யாழ்ப்பாணத்தைவிட்டு கொழும்புக்கு தப்பிஓடி வரவேண்டி ஏற்பட்டது.

இந்தியப் படை காலத்தில் பத்திரிகையாளர்கள், அச்சுக் கோப்பாளர்கள் பலரை ஆயுதமுனையில் கடத்திப்போய் ஈ.பி.ஆர்.எல்.எஃப். 'விடுதலை' என்னும் பத்திரிகை நடத்தியது.

ஆனால், தமிழ் பேசும் விமர்சகர்களில்சிலர் யார் உடனே துப்பாக்கியைத் தூக்குவார்கள் என்று தெரிகிறதோ அவர்கள் பற்றி மூச்சே விடுவதில்லை. வேண்டுமானால் வரவேற்கவும், பாராட்டவும் மட்டும் செல்வார்கள்.

அதுபோல யார் அதிகாரத்திற்கு வந்தாலும் அப்பப்பா இப்போதுதான் நிம்மதி. இதுவரை பட்டபாடு பெரும்பாடு என்று சொல்லியும் கொள்வார்கள்.

இப்படிச் சொல்பவர்களில் எத்தனைபேர் பத்திரிகைச் சுதந்திரம் பற்றிய அவசியம் உணர்ந்து நடந்திருக்கிறார்கள்.

சிங்களப் பத்திரிகையாளர்களுக்கு உள்ள முதுகெலும்புகூட நம்மவர்கள் சிலரிடம் கிடையாது.

பிரேமா உயிரோடு இருந்தபோதே சிங்களப் பத்திரிகைகளில் கேலிச் சித்திரங்கள் வெளிவந்தன. 'ராவய' பத்திரிகை கிட்டத்தட்ட நிர்வாணமான தோற்றத்தில் பிரேமதாசாவைக் கேலிச் சித்திரமாக வரைந்திருந்தது.

ஆனால் பிரேமாவுக்கும் நோகாமல், புலிகளுக்கும் வலிக்காமல் விமர்சனம் எழுதிக் கொண்டிருந்த சிலர் இப்போது செய்திச் சுதந்திரம் பற்றி பேசுவதுதான் வேடிக்கை. கடந்த 17 வருடமாக போராடிய பத்திரிகையாளர்களோடு ஒட்டுமில்லாமல் உறவுமில்லாமல் இருந்தவர்கள் எல்லாம் இப்போது துள்ளிக் குதிப்பது சுவாரசியம்.

கடந்த ஆட்சிக்காலத்தில் செய்திச் சுதந்திரம் என்பதை அறவேயில்லையானால் பிரேமாவை கேலிச் சித்திரமாக்க எப்படி முடிந்தது? கடந்தகால ஆட்சியில் அச்சுறுத்தல் இருந்தது. ஆதிக்கம் இருந்தது. அதற்கெதிரான கண்டனங்களும் இருந்தன.

அதே சமயம் ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் பி.பி.சி. தொலைக்காட்சி செய்திகள்கூட கட்டம்போட்டு மறைக்கப்பட்டது மட்டும் விமர்சனப் புலிகளின் கண்ணில் படவில்லை. அதனையும் சுட்டிக் காட்டிக் கொண்டுதான் செய்திச் சுதந்திரம் பற்றிப் பேசவேண்டும்.

இல்லாவிட்டால் திருமண வீட்டில் போய் பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும் என்று காலமாற்றம் புரியாமல் சம்பிரதாயமாக வாழ்த்திக்கொண்டிருப்பது மாதிரி எந்த ஆட்சி வந்தாலும் வாழ்த்தப் படுவோர் பெயரை மட்டும் மாற்றிவிட்டு ஒரே வாழ்த்துப் பாவை வாசித்துக்கொண்டேயிருக்க வேண்டியதுதான்.

இன்னொரு 'விடயம், அரச வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் வேலை பெற்றுக் கொள்ளவும் விமர்சனப் புலிகள் சிலர் ஒற்றைக்காலில் நிற்பதாக தகவல். வாழ்க, சேவை - மனப்பான்மை!

□□

புதிய ஜனாதிபதி பொறுப்பேற்று விட்டார். குண்டுவெடிப்பால் அனுதாப அலை புலிகள் மீதான சந்தேகத்தால் அரசுக்கும் கெட்ட பெயர். அதற்கும் மேலாக புலிகளும், பொ.ஜ.முன்னணியும் சேர்ந்துதான் சதித் திட்டம் தீட்டியதாக ஐ.தே.கட்சியின் குற்றச் சாட்டுகள்.

தம்மோடு பேச்சு நடத்துவதில் அக்கறை காட்டிய அரசாங்கம் தமது இயக்கம் மீதான சந்தேகத்தால் திணறியபோதும் புலிகளின் தலைமை ஒப்புக்காகக்கூட மறுப்பு விடவில்லை.

அனைத்துக்கும் மேலாக ஜனாதிபதித் தேர்தல் நடப்பதற்கு முதல் நாளான நவம்பர் 8ம் திகதி அதிகாலை வெற்றிலைக் கேணியில் கடற்படைக் கப்பல்மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தினார்கள். அதில் ஒரு கரும்புலி மேஜர் விக்கி பலியானார். தாக்குதல் சற்றுப் பிசகியதால் கப்பல் சேதத்தோடு தப்பியது.

அரசாங்கம் செய்திச் சுதந்திரத்தை அடக்கி வாசித்தமையால் அந்தச் செய்தி பெரிதாகாமல் போனது. விமர்சனப் புலிகளும் அதுபற்றி மூச்சே விடவில்லை. யாழ்ப்பாணத்தில் புலிகளின் குரல் வானொலி மட்டுமே கரும்புலிக்கு வீரவணக்கத்தோடு அதனை முக்கியத் துவப்படுத்தியது.

அந்தத் தாக்குதலின் நோக்கம் என்ன? திருமதி சந்திரிக்கா மீது அதிருப்தியை வளர்த்துவிடுவதா?

புலிகள் வழிக்கு வரமாட்டார்கள். எனவே சந்திரிக்கா ஜனாதிபதியானாலும் அவர் சொல்வது போல் போர் ஓயாது. பிரச்சனை தீராது என்று சிங்கள வாக்காளர்களை நினைக்கவைக்கும் நோக்கமா?

ஐ.தே.கட்சியின் அனுதாப அலைக்கு மேலும் வேகம் கொடுப்பதால் புலிகளுக்கு என்ன நன்மை?

புலிகளின் தாகம் தமிழீழம் தான் என்றால் அவர்களுக்கு சந்திரிக்கா அரசை விட டி.பி.விஜயதுங்கா அரசுதான் சாதகம்.

இனப்பிரச்சனையே இல்லை. புலிகளை ஒழித்தே தீருவேன் என்று பளிச் சென்று பேசி தமிழ்பேசும் மக்களது வெறுப்பினையும் நம்பிக்கையீனத்தையும் சம்பாதிக்கும் ஒருவர்தான் தமிழ் ஈழ கோரிக்கையின் நியாயத்தை வலியுறுத்த புலிகளுக்கு வசதியாக இருப்பார்.

சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களது பிரச்சனையை நியாயமாகத் தீர்க்காது என்று நிரூபிக்கக் காரணங்கள் யாது? என்ற கேள்விக்கு புலிகள் பதில்சொல்லும் அவசியமே இல்லை. டி.பி.விஜயதுங்காவின் பேச்சே போதுமானதாக இருந்தது.

ஆனால், சந்திரிக்காவின் பிரவேசத்தின் பின்னர் உள்ள நிலைமை வேறானது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள பெரும்பாலான மக்கள்கூட சந்திரிக்கா மீது பலத்த நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.

இனப் பிரச்சனையை சந்திரிக்காவால் தீர்க்கமுடியும் என்று மக்கள் நம்புவதை பகிரங்கமாக மறுத்துப் பேச புலிகள் நினைத்தாலும் முடியாது.

திரு. பிரபாகரனே தமிழீழ தேசியத் தலைவர். தமிழர்களுக்கு அவர் மட்டுமே விடிவு தரமுடியும் என்று புலிகள் இதுவரை ஏற்படுத்தியிருந்த பிரசார நம்பிக்கைகள்கூட பலமிழந்து போய்விட்டன.

பிரபாகரன் பிரதமருக்கு கடிதம் அனுப்ப முன்னரே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்கள் சந்திரிக்காவின் வரவை எதிர்பார்ப்போடு நோக்கத் தொடங்கிவிட்டார்கள்.

17 வருடகால ஆட்சிக்கு தென்னிலங்கையில் உள்ள மக்கள் மாற்றத்தை விரும்பியதுபோல, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள மக்களும் ஒரு மாற்றத்தை நாடுகிறார்கள் என்று தெரிகிறது. ஆனாலும் வடக்கே ஒரு ஜனநாயகத் தேர்தல் நடந்தால் புலிகள் அதில் தோற்கடிக்கப்படுவார்கள் என்று அதற்கு அர்த்தமல்ல.

ஆனால், சந்திரிக்காவின் வரவோடு புலிகளின் தமிழீழக் கோரிக்கை பலவீன

(தொடர்ச்சி 6ம் பக்கம்)



வெகுஜனப் பிரதிநிதிகள் சபைக்கு நடந்த தேர்தலின் பின் கிழக்கின் தனித்துவத் தலைவர் காட்டின உற்சாகத்தை பார்த்தவை, சமீப வெற்றியிலை அந்த உற்சாகம் பாதி அவரிட்டை மிஸ்ஸிங் மாதிரித் தெரிஞ்சது எண்டு சொல்லுகினம். போனமுறை எல்லாத்திலையும் முன்னால நிண்டு முகம்காட்டின சுறுசுறுப்பும் மிஸ்ஸிங்காம். பதவியேற்புக்குப் பின் நடந்த இரவு விருந்துபசாரத்திற்கும் தாமதித்துத் தான் வந்தாராம். கணபட்டுப் போச்சாக்கும். திருஷ்டி சுத்திப் போடுங்கோ.

அவர் ஒரு முன்னாள் பவர் ஆள். தேர்தலில் போட்டியிடேக்கையே முன்னணிக்கு சார்பாய்த்தான் குதிக்கிறார் எண்டதும் தெரிஞ்ச சங்கதி. முன்னணியின் வெற்றிக்காக பாடுபட்ட பிரமுகர்களுக்கு நடந்த விருந்துபசாரத்தில் முதல் ஆளாய் வந்து கலந்து கொண்டதே அவர்தானாம். தேர்தலில் 'ரண'ப்பட்டாலும் 'சிங்கம்' கவலைப்படேல்லை.

புதிய அமைச்சுப் பதவிகள் பற்றி கிழக்கிலை எக்கச்சக்கமான வதந்திகள் கால் கை முளைச்சு உலாவினவாம். தனித்துவத் தலைவருக்கு துறைமுகம் இந்த முறை இல்லை எண்டு போட்டி வட்டாரம் சொல்லித் திரிஞ்சதாம். உடனடியாக பதிலுக்கு பதிலாக தனித்துவ கட்சி வட்டாரமும் கொழும்பு தலைவர் ஒருவரின் பெயரைச் சொல்லி அவருக்கு 'ஆரோக்கிய' பதவி கிடைக்காது எண்டவையாம். இதெல்லாம் அ.ப.மு. அதாவதுங்கோ அமைச்சர்கள் பதவிக்கு ஏற்புக்கு முன்! அ.ப.பின் நிலைமை என்னடாவென்றால் இரு தரப்புக்கும் பரம திருப்தி. வதந்திகளை நம்பினவைக்கு பெப்பேபே.

## அதிரடி அய்யாத்துரை

முக்கியமான தமிழ் கட்சி செயலாளர் ஒருவர் வடக்கு-கிழக்கு கவர்னர் பதவியிலை குறிவைச்சு கொழும்புக்கும்-திருவான மலைக்கும் இடையிலை ஒடுபட்டுத் திரியுறாராம். அதுக்கு அனுசரனையா இன்னொரு பிரதிநிதி கவர்னர் பதவிக்கு அடிபடுற பெயர்கள் உள்ள சிலரை பண்பாக மிரட்டுகிறாராம். உங்களுக்கேன் இதை. ரெண்டு எழுத்தார் கோபிப்பினம் எண்டு அவர் கயிறு விடுவதாகத் தகவல். இதெல்லாம் பதவி ஆசையிலை செய்யிற வேலையில்லை, அதென்ன சொல்லுறது ஆ....ஆ.. அதுதானுங்கோ பொதுநலம்.

பனைவள விடயத்திலை சொந்தவளம் தேடிய ஒருத்தர் பற்றி முக்கியமான இடங்களிலை விரிவான தகவல்கள் போயிருக்குது. ஆனாலும் அவர் தங்கடை ஆள் எண்டு சொல்லி கூட்டான கட்சி மீண்டும் பதவி கொடுக்கச் சொல்லுதாம். இந்த இடத்திலைதான் 'தமிழ் ஆள்' எண்ட பாசத்தையும் காட்டி பேசுற சீன் வருகுது பார்த்தியளோ! பேசுறது தமிழ் எண்டா பிடுங்கிக்கொள்ளலாம் எண்டு அர்த்தமாக்கும்.

தேர்தல் நடந்தா அன்று முதல் ஊரடங்கு எண்டு இப்பவெல்லாம் முன்கூட்டியே தெரிஞ்சபோகுது. ஜனநாயக நாட்டில் வாழுறம் எண்டு நெஞ்சை நிமிர்த்திச் சொல்ல இந்த விசயமும் உறுத்துதல்லோ. வெற்றி தோல்வி சகஜம் எண்டு கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் இருந்தே சொல்லிவந்தாலும் தொண்டர்கள் கல் ஏந்தி மோதும் காட்சிகள் மட்டும் கச்சிதமாக அரங்கேறிக்கொண்டுதான் இருக்கு.

முன்னாள் வெகுஜனப் பிரதிநிதி ஒருத்தரை இந்நாள் வெகுஜனப் பிரதிநிதி எண்டு செய்தியில் அறிவிச்சு கலக்கிப்போட்டுது 'நம்மூர் வானொலி'. செய்தியை கேட்ட முன்னாள் பிரதிநிதி இனிமேல் தனித்து போட்டியிட்டு எந்நாளும் பிரதிநிதியாக முடியாத தமிழ்கட்சி செயலராம். அவர் வானொலியை வாயார வாழ்த்தியிருப்பாரல்லோ? நம்மூர் வானொலி சிவபதவி முதல் சகல பதவிகளையும் அவசரப்பட்டு வழங்கும் வேகத்தையும் பார்த்தா சாதனை படைக்கும் நோக்கமிருக்கிற மாதிரிப் படுகுது. அதாவது செய்திகள் விசயத்திலை.

திறமைசாலிகள் சிலருக்கு விளம்பரம் போதாது. இந்தக் காலத்திலை விளம்பரம்தானே முன்னேற வெளிச்சம். சினிமாவுக்கு பாட்டெழுதின கவிஞர்களில் சுரதா பக்குவமான ஆள். "அமுதும் தேனும் எதற்கு...." அவர் எழுதினதுதான். ஏனோ அவருக்கு உரிய இடம் இல்லை.

"ஊட்டி வளர்ப்பவளே-உயிர்
ஓவியம் போன்றவளே
ஏட்டின் கவிதையைப் போல் -நகர்
எங்கும் புதுமையடி.
காட்டுப் பறவையெல்லாம் -தமிழ்க்
காதல் புரியுதடி.
வாட்டம் தவிர்த்திடடி - எனை
வந்து தழுவிடடி."

இதுவும் சுரதா கவிதையில் ஒரு துளிதான். ஒரு துளிதேன்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# சிவகுமாரன் போட்ட விதை! பிரபாகரன் வைத்த குறி!!

அரசியல் தொடர்..... 2

அற்புதன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

## தியாகராசாவின் புத்தி

கொழும்பில் வைத்து தன்னைக் கொலைசெய்யும் துணிச்சல் தமிழ் இளைஞர்களுக்கு ஏற்படாது என்றுதான் வட்டுக்கோட்டை பா.உ.தியாகராசா நினைத்திருந்தார்.

அதனால்தான் முன்பின் அறிமுகமில்லாத இரு இளைஞர்கள் பத்திரிகை ஒன்றின் பெயரைச் சொல்லி பேட்டி கேட்டபோது சந்திக்கச் சம்மதித்தார். ஆனாலும், முதல் அனுபவம் என்பதால் இளைஞர்கள் இருவரதும் நடவடிக்கைகளில் தியாகராசாவுக்கு சந்தேகம் ஏற்பட்டுவிட்டது.

கதவருகில் நின்ற இளைஞர் கைத்துப்பாக்கியை உருவிக்கொண்டதை கண்ட தியாகராசா உசாராகி விட்டார்.

மரணதூதன் எதிரே நிற்கும் உணர்வில் எப்படியாவது தப்பித்தாக வேண்டுமே என்று உள் மனம் உந்த தரை நோக்கிக் குனிந்தார்.

அச்சமயம் கதவருகில் நின்ற இளைஞரோ தியாகராசாவின் அருகில் நின்ற தனது சகாவான இளைஞரை "திசை இங்கே வா" என்று அவசரமாக குரல் கொடுத்தார்.

பயிற்சியும் இல்லை; கைத்துப்பாக்கியும் உள்ளூர் தயாரிப்பு.

வெடிக்கலாம். ரவையை துப்பாமலும் அடம்பிடிக்கலாம். தவிர, தான் சுடுவது தப்பித்தவறி சகாவுக்கும் பட்டுத் தொலைத்துவிடலாம் என்ற பயம் வேறு.

'திசை' என்று அழைக்கப்பட்ட இளைஞர் கதவை நோக்கி ஓட, கதவருகில் நின்ற இளைஞர் தியாகராசாவை குறிவைத்து விசையை அமுக்க, அதே தருணத்தில் தரையை நோக்கி குனிந்த தியாகராசா அபயக்குரல் எழுப்பியபடி தரைவிரிப்பின் முனையில் பிடித்து இழுத்தார்.

தியாகராசா குனிந்ததும், தரைவிரிப்பு இழுக்கப்பட்டதால் அதன் மறுமுனையில் நின்ற இளைஞர் தனது சமநிலை தவறிய நிலையில் சுட நேர்ந்ததும் குறி தவறக் காரணமாயின.

துப்பாக்கிரவை சுவரில் பாய்ந்தது. திட்டம் தோல்வியாகிவிட்டதை உணர்ந்து இரு இளைஞர்களும் தப்பி ஓடினார்கள்.

அவர்கள் இருவரும் தனியார் வாகனமொன்றை வாடகைக்கு அமர்த்தியே வந்திருந்தனர்.

வெடிச்சத்தமும், அபயக்குரலும் சிங்களவரான வாகனச் சாரதிக்கு விபரீதத்தை தெரியப்படுத்திவிட, ஓடிவந்த இளைஞர்களைக் கண்டதும் வாகனச் சாவியை வீசி எறிந்து விட்டு சாரதி ஓடிவிட்டார்.

பின்னர் எப்படியோ இரு இளைஞர்களும் தப்பிக் கொண்டார்கள்.

ஒருவர் திசைவீரசிங்கம். மற்றவர் ஜீவன் அல்லது ஜீவராசா.

அவர்களை திட்டத்தோடு அனுப்பி வைத்தது தமிழ் மாணவர் பேரவைத் தலைவர் பொன்.சத்தியசீலன். இந்த மூவரும் இப்போது வெளிநாட்டில் உள்ளனர்.

## அனுப்பி வைப்பார் வரமாட்டார்

சத்தியசீலன் பற்றி அவரோடு இருந்தவர்கள் சொல்லும் விமர்சனம் இது: "அவர் யாரைச் சுட வேண்டும் என்று சொல்லி அனுப்பி வைப்பார். எந்த நடவடிக்கையிலும் தான் மட்டும் பங்குகொள்ள மாட்டார். பொலிசார் விசாரிக்கும் போது ஆதியோடு அந்தம்வரை சொல்லிவிடுவார்.

'சிறைமீண்ட செம்மல்' என்று அழைக்கப்பட்ட சத்தியசீலன் ஜெர்மனுக்கு கொள்கை விளக்கமளிக்க அழைப்பு வந்துள்ளதாகக் கூறிச் சென்றவர்தான்- திரும்பி வரவேயில்லை.

கூட்டணித்தலைவர்களால் உணர்ச்சிகரமாகத் தூண்டிவிடப்பட்ட 'துரோகிகள் ஒழிப்பு' படலத்தில் முதலில் குறிவைக்கப்பட்ட அரசியல்வாதியான தியாகராசா தப்பிக் கொண்டார். (பின்னர் 1981ம் ஆண்டு இவர் வட்டுக்கோட்டையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். புளொட் அமைப்பே கொலைக்குக் காரணம் என்று நம்பப்பட்டது) அவர் 1977ம் ஆண்டு தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தியாகராசா உயிர்தப்பிய போதும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் மற்றும் அருளம்பலம், சி.எக்ஸ்.மார்டின், குமாரசூரியர், ராஜன் செல்வநாயகம், போன்ற பா.உக்களும் யாழ் மேயர் அல்பிரட் துரையப்பாவும் தமக்கும் குறிவைக்கப்படலாம் என்று உணர்ந்தேயிருந்தனர்.

ஆனாலும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களால் யார் கடுமையாக வசைபாடப்படுகிறார்களோ அவர்களே உடன் ஒழிக்கப்பட வேண்டியவர்கள் பட்டியலில் முதலிடம் பெறுவார்கள்.

## துரையப்பாவின் இரு பக்கங்கள்

யாழ் மேயராக இருந்த அல்பிரட் துரையப்பாவுக்கு இரு பக்கங்கள் உண்டு.

தமிழ் பேசும் மக்களது அரசியல் அபிலாசைகள் பற்றிய கோரிக்கைகளை அவர் அலட்சியம் செய்தார்.

அதன்மூலமாக தமிழர்களுக்கு எதிரானவராக தான் சித்தரிக்கப்படுவதையிட்டு அவர் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அப்போது பிரதமராக இருந்தார். அவரிடம் தனது சொல்லுக்கு மதிப்பிருப்பதாக காட்டிக் கொள்ளுவதில் அவர் கவனம் செலுத்தினார். இது அவரது ஒருபக்கம்.

யாழ் நகரை அழகுபடுத்துவது, நவீனப்படுத்துவது என்பவற்றில் தனக்கு முன்னும் பின்னும் வந்த நகரமுதல்வர்களைவிட துரையப்பாவே ஆர்வத்தோடு செயற்பட்டார்.

யாழ் நகரில் வள்ளுவருக்கும் ஔவையாருக்கும் சிலைகள் நிறுவினார்.

யாழ் நகரில் உள்ள நவீன சந்தைக் கட்டிடம் துரையப்பாவின் முயற்சியால் உருவாக்கப்பட்டதாகும்.

யாழ் நகரில் நவீன விளையாட்டரங்கும் உருவாக்கப்படவும் துரையப்பாவே ஏற்பாடு செய்தார்.

கூட்டுறவுச் சங்கங்களில் துரையப்பாவின் மூலமாக நூற்றுக்கணக்கானோர் வேலைவாய்ப்புப் பெற்றார்கள். இது அவரது மறுபக்கம்.

ஆனால் இவற்றையெல்லாம் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கேலிசெய்தனர்.



உரும்பிராயில் வைத்து புலிகளால் கொல்லப்பட்ட ந.நடராசா இவர்தான்.

## சோறா சுதந்திரமா?

'தன்மானத் தமிழனுக்கு சோற்றைவிட சுதந்திரமே முக்கியம்.'

'தமிழ் ஈழம் கிடைத்த பின்னர் நவீன சந்தைகளை நாமே உருவாக்கிக் கொள்ளலாம்' என்றனர்.

'கூப்பன் கள்ளன்' என்றும் அவர் கேலி செய்யப்பட்டார்.

இதற்கிடையே துரையப்பா மீது இளைஞர்களுக்கு கடும் சினம் ஏற்படக்கூடிய வகையில் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு அமைந்தது.

1974ம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடந்தது.

இந்த மாநாடு மூலம் கூட்டணியினர் அரசியல் லாபம் அடைந்துவிடுவார்கள் என்று துரையப்பா நினைத்தார்.

அதனால் மாநாடு நடைபெறுவதை தடுக்கவும், அதையும் மீறி நடந்தபோது இடையூறாக இருக்கவும் முற்பட்டார்.

சகல தடைகளையும் மீறி மக்கள் வெள்ளத்தின் மத்தியில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டின் கண்கொள்ளாக் காட்சி துரையப்பாவுக்கு வயிற்றெரிச்சலை கொடுத்தது. யாழ் நகரெங்குமே விழாக் கோலம் பூண்டு எங்கும் தமிழ் முழக்கம் கேட்ட அந்த நாட்களில் ஒருநாள் துப்பாக்கி வேட்டொலிகள்!

திரண்டிருந்த மக்கள் சிதறியோடினார்கள். தேமதுரத் தமிழோசை கேட்கவந்த 9 தமிழர்கள் செத்துப்போனார்கள்.



வேட்டோசை எழுப்பி பொலிசார் நடத்திய அட்டூழியத்தை அன்றைய அரசு மூடி மறைக்கப் பார்த்தது.

மின்சார வயர்களை மிதித்ததும் கூட்ட நெரிசலும் சாவுக்கு காரணம் என்பதுபோல் விளக்கம் சொல்லப்பட்டது.

தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசு மீதும் துரையப்பா மீதும் இளைஞர்களது கோபாவேசத்தை வளர்த்துவிட்டன.

கல்வியில் தரப்படுத்தல் கொள்கை, **தமிழரசு- நமக்கொரு தனியரசு வேண்டும்** என்ற சிந்தனைக்கு நீர்வார்த்தது.

தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் **'ஆயுதம் ஏந்தாமல் விமோசனம் இல்லை'** என்ற சிந்தனைக்கு கொம்பு சீவிவிட்டது.

ஆயுதம் ஏந்தி முதல் பலியான போராளி சிவகுமாரன்

படுகொலைக்கு காரணமான பொலிஸ் அதிகாரி சந்திரசேகராவுக்கும் துரையப்பாவுக்கும் குறிவைத்து சிவகுமாரன் தலைமையில் சில இளைஞர்கள் நேரம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணம் கைலாசநாதர் கோவில் அருகில் வைத்து பொலிஸ் அதிகாரி சந்திரசேகராவின் கார் சிவகுமாரன் குழுவினரால் வழி மறிக்கப்பட்டது.

கார் கதவை திறந்த சிவகுமாரன் சந்திரசேகரா மீது கைத்துப்பாக்கியால் சுட்டார். ஆனால் கைத்துப்பாக்கி சிவகுமாரனை கைவிட்டது- இயங்க மறுத்தது. உள்ளூர் தயாரிப்பு உருப்படியாக இல்லை.

பல்வேறு முறை மேற்கொள்ளப்பட்ட கொலைமுயற்சிகளில் இருந்து சந்திரசேகரா தப்பினார்.

அதே வேளை பொன்னாலை பாலத்தில் வைத்து துரையப்பாவைக் கொல்ல சிவகுமாரன் போட்ட திட்டமும் பலிக்கவில்லை.

பொன்-சிவகுமாரன் உரும்பிராயைச் சேர்ந்தவர். ஆயுதம் ஏந்துவது ஒன்றே தமிழர்கள் விடுதலைக்கு வழி என்று உறுதியாக நம்பியவர்.

துரோகிகள் ஒழிப்புத்தான் அவரது முதல் குறியாக இருந்தது. எனினும் அதில் அவர் வெற்றிபெறவில்லை.

1974ம் ஆண்டு ஜுலை 5ம் திகதி கோப்பாய் வங்கிக் கொள்ளை முயற்சியில் கைதானபோது விஷம் அருந்தித் தற்கொலையானார்.

தற்கொலை கலாசாரத்திற்கு கால்கோள் நாட்டியவர் சிவகுமாரன்தான்.

பொலிசாரின் தீவிர தேடுதல் வேட்டை காரணமாக சில காலம் தமிழ்நாட்டில் தங்கியிருந்துவிட்டு வருவதற்கு சிவகுமாரன் திட்டமிட்டார்.

கடல் வழியாக தப்பிச் செல்ல சிவகுமாரனுக்கு பணம் தேவைப்பட்டது.

ஐயாயிரம் ரூபா தந்துதவுமாறு அன்றைய கோப்பாய் பா.உ. கதிரவேற்பிள்ளையிடம் கேட்டிருந்தார்.

உதவ ஒப்புக்கொண்ட கதிரவேற்பிள்ளை கடைசியில் கைவிரித்துவிட்டார்.

அப்போது கதிரவேற்பிள்ளைக்கு 'சிந்தனைச்சிற்பி' என்று பட்டம் இருந்தது.

சிந்தனைச் சிற்பிக்கு சிவகுமாரனை காக்கும் சிந்தனையே இல்லாமல் போனதால், சிவகுமாரன் குழுவினர் கோப்பாய் வங்கியில் குறிவைத்தனர்.

கொள்ளை முயற்சி தோல்வியடைந்தது. தப்பி ஓடிய சிவகுமாரும் ஏனையோரும் பொலிசாரின் சுற்றிவளைப்பில் சிக்கினார்கள்.

சிவகுமாரன் ஓடிப் போய் பதுங்கியிருந்த இடம் பற்றி பொலிசாருக்கு தகவல் சொன்னவன் பெயர் ந.நடராசா.

(உரும்பிராய் பெற்றோல் நிலைய முகாமையாளரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளருமான ந.நடராசா 2.7.1978 அன்று புலிகளால் கொல்லப்பட்டார்)

சிவகுமாரின் முயற்சிகள் தோல்வியில் முடிந்தபோதும் அது ஆற்றலின்மையின் வெளிப்பாடு அல்ல. முன் அனுபவமற்ற எந்தவொரு நடவடிக்கையும் அப்படித்தான் ஆரம்பமாகும்.

## சிவகுமாரன் போட்டது விதை

சிவகுமாரின் மரணச் சடங்கில் கடல் அலையாக மக்கள் கண்ணீர் வெள்ளம்.

'எங்கள் பொடியளாவது ஆயுதம் ஏந்துவதாவது' என்று நினைத்தவர்கள் கூட காலம் மாறத்தொடங்கி விட்டது என்பதைக் கவனத்தில் கொண்டனர்.

மரணவீட்டில் முன் வரிசையில் நின்றவர்கள் இன்றுவரை தம்மை அகிம்சைவாதிகள் என்று கூறிக்கொள்ளும் கூட்டணித் தலைவர்கள் தான்.

அது தவிர ஆவேசமாக அஞ்சலிக் கூட்ட உரைகளும் நிகழ்த்தினார்கள்.

'இந்திய சுதந்திரப் போராட்ட தியாகி பகவத்சிங் மாதிரித்தான் தம்பி சிவகுமாரனும்' என்றார் தலைவர் அமிர்.

கூட்டத்தில் சிந்தனைச் சிற்பி கதிரவேற்பிள்ளையும் கலந்துகொண்டு சிவகுமாரன் பற்றி புகழ மறக்கவில்லை!

கூட்டணியின் குரலாக அன்று வெளிவந்த 'சுதந்திரன்' பத்திரிகை சிவகுமாரன் புகழ்பாடியது.

உரும்பிராயில் சிவகுமாரனுக்கு சிலை ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது.

அந்தச் சிலையை திறந்து வைத்தவர் தமிழ் ஈழ விடுதலை இயக்க தலைவர் முத்துக்குமாரசாமி. (தற்போதைய ரெலோ அல்ல அது)

அகிம்சையே எம் வழி என்று சொன்ன கூட்டணித்தலைவர்கள் சிவகுமாரன் பாதை தவறு என்று ஒரு நாளும் சொன்னதில்லை.

மகாத்மா காந்தி, பகவத்சிங் பற்றி விமர்சித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவகுமாரனின் மரணம் ஆயுதப் போராட்ட எண்ணத்திற்கு நெய் வார்த்தது.

சிவகுமாரனால் குறிவைக்கப்பட்டு தப்பிய துரையப்பா 1975 ஜுலை 27ம் திகதியன்று யாழ்ப்பாணம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு முன் வந்திறங்கினார்.


அங்கு துரையப்பாவின் வருகைபற்றிய தகவல் அறிந்து நான்கு இளைஞர்கள் காத்திருந்தனர்.


பிரபாகரன், கலாபதி, கிருபாகரன், பற்குணராஜா ஆகியோரே அந்த நால்வர்.

துரையப்பா காரிலிருந்து இறங்கியதும் இளைஞர்களில் ஒருவர் முன்னால் வந்து 'வணக்கம் ஐயா' என்றார்.

**(தொடர்ந்து வரும்)**

## அது இவர்தான்





பஸ்தியாம்பிள்ளை கொலை தொடர்பாக தேடப்பட்ட தமிழ் இளைஞர்களது படங்கள் சுவரொட்டி மூலமாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் 1978ல் வெளியிடப்பட்டன. துரையப்பா கொலை முதல் பஸ்தியாம்பிள்ளை குழுவினர் கொலை வரை தேடப்பட்ட பிரபாகரனின் சிறுவயதில் எடுக்கப்பட்ட புகைப்படம் மட்டுமே புலனாய்வுத்துறையினரிடம் சிக்கியது. வீட்டிலிருந்த தனது புகைப்படங்கள் அனைத்தையும் முன்கூட்டியே பிரபாகரன் எடுத்துச் சென்றுவிட்டார். தேடப்பட்ட இளைஞர்களில் மாவை சேனாதிராஜா, வண்ணை ஆனந்தன், கல்லாறு நடேசானந்தன், புஸ்பராஜா, சபாலிங்கம் (கடந்த மே மாதம் 1ம் திகதி பாரிசில் கொல்லப்பட்டவர்) போன்றோர் பொலிசாரிடம் சரணடைந்தனர்.

பிரபாகரன், சிறிசபாரத்னம் போன்றோர் சரணடையவில்லை.

துரையப்பா கொலையில் பிரபா நேரடியாக பங்கேற்றிருந்தார். சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை குழுவினர் கொல்லப்பட்டதில் பிரபா பங்கேற்கவில்லை.

## எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி

மாகியிருக்கிறது என்று அர்த்தம்.

பேச்சு நடத்த யாழ் சென்ற அரச தூதுக்குழுவை வரவேற்க திரண்ட மக்கள் புலிகளது காவல்துறையினரது தலைத் தொப்பிகளையும் தட்டி விழுத்தித் தடைக்குப் போட்டிருந்த மரக்கட்டை தடுப்புக்களையும் மீறிக் கொண்டு ஆரவாரம் செய்தனர். கரம் அசைத்தனர்.

இனப்பிரச்சனைக்கு நேர்மையான அரசியல்தீர்வு காணப்படவேண்டும். போர் முடிவுக்கு வரவேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்புமளவுக்கு தமிழீழக் கோரிக்கையை அவர்கள் கைவிடமுடியாத, கைவிடக்கூடாத ஒன்றாக நினைக்கவில்லை என்று தெரிகிறது.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்பது மக்களின் கோசமாக இல்லாமல் ஒரு குறிப்பிட்ட இயக்கத்தின் கோசமாக மட்டுமே இருப்பதுதான் இன்றைய நிலை.

இவ்வாறான ஒரு நிலையில் திருமதி சந்திரிக்கா இனப் பிரச்சனையை தீர்க்கும் ஆணையை சிங்கள மக்களிடம் பெற்றுக் கொள்வதை- அதுவும் அமோகமாக பெற்றுக் கொள்வதை புலிகள் விரும்பியிருக்க முடியுமா?

ஊகங்களையும், மன விருப்பங்களையும் சார்ந்து பதிலளிக்காமல் சம்பவங்கள், செயல்கள் மூலமாக விடைதேடும் போது புலிகள் விரும்பியிருக்கவில்லை என்றே தெரிகிறது.

காமினி கொலை பற்றிய மௌனமும், வெற்றிலைக்கேணியில் நவம்பர் 8ல் நடந்த கரும்புலித் தாக்குதலும் திருமதி சந்திரிக்காவின் கரத்தைப் பலப்படுத்தும் அக்கறையைத் தெரிவிக்கும் செய்திகளல்ல.

புலிகளின் தரப்பில் இருந்து இதனை நோக்கும்போது அவர்களது சாணக்கிய தந்திரமாக மதிப்பிடலாம்.

எந்தவொரு தரப்பும் தனது எதிர்த்தரப்பு பலமாகவேண்டும் என்று விரும்பாது. விரும்பும் பலமாக உதவும் என்றும் எதிர்பார்க்க முடியாது.

திருமதி சந்திரிக்கா அமோக வெற்றி பெற்றமை ஒரு முக்கிய அரசியல் நிகழ்வு.

ஆனால், நவம்பர் 10ம் திகதி முடிவுகள் வெளியாகியபின்னர் நவம்பர் பதினைந்தாம் திகதி- இதனை எழுதும்வரை- புலிகள் தரப்பிலிருந்து திருமதி சந்திரிக்காவுக்கு ஒரு வாழ்த்துச் செய்திகூட அனுப்பப்படவில்லை.

உடனடியாக வாழ்த்துச் செய்தி அனுப்ப வசதியில்லை என்று கருதமுடியாது. இருக்கவே இருக்கிறது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம். கையோடு 'ஃபக்ஸ்' சாதனம்.' உடனடியாக ஜனாதிபதி அலுவலகத்திற்கு கிடைக்க வழி செய்துவிடுவார்கள்.

ஆனால் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாகி ஒரு வாரமாகியும் புதிய ஜனாதிபதியை புலிகள் வரவேற்கவில்லை.

திருமதி சந்திரிக்காவை புலிகள் நம்புகிறார்கள் என்றால் அவரது வெற்றிச் செய்தி இனிப்பான செய்தியாக அவர்கள் செவியில் விழுந்திருக்க வேண்டும்.

அதிர்ச்சியாக இருந்தால்தான் அதனை ஜீரணிக்க அவகாசம் தேவைப்படும்.

புலிகளின் மௌனமும், அமோக வெற்றி குறித்து ஒரு வாரமாக கருத்து வெளியிடாத போக்கும் எதிர்தரப்பின் அமோக அரசியல் பலம் அவர்களுக்கு அதிர்ச்சிதான் என்றே தெரிகிறது.

இவற்றின் பின்னணியில்தான், அடுத்த நகர்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அவை எப்படி அமையப்போகின்றன என்பதை வரும் வாரங்களில் இரு தரப்பின் நடைமுறைகளை வைத்து நோக்கலாம்.

ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா பெருவெற்றியீட்டியுள்ளார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இவ்வெற்றி ஒரு சாதனையாகவே இருக்கின்றது.

ஆட்சிமுறையை இந்நாட்டிலிருந்து நீக்குவது போன்ற நடவடிக்கைகளை தமது அரசு மேற்கொள்ளும் என்று சந்திரிகா கூறியிருந்தார்.

இந்த [illegible] வடுக்கள் இலங்கையின் அரசியலில் ஆழமாகப் பதிந்திருக்கின்றன. எனவே முன்னைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளின் பாணியிலிருந்தும்

அலசுவது—இராஜதந்திரி

# மக்களால் மக்களுக்காக ஜனாதிபதியாக தெரிவான சந்திரிகா!

இலங்கையில் இதுவரை காலமும் இடம்பெற்ற தேர்தல்களில் எந்தவொரு அரசியல் தலைவரும் பெற்றிருக்காத ஒரு பிரமாண்டமான வெற்றியாகவே சந்திரிகாவின் வெற்றி காணப்படுகின்றது.

இத்தடவை ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சூடுபிடித்திருந்த வேளையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான காமினி திசாநாயக்கா குண்டு வெடிப்பொன்றில் கொல்லப்பட்டிருந்தார்.

அவருடன் சேர்ந்து ஐ.தே.கவின் முக்கிய அரசியல் பிரமுகர்கள் மற்றும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவர் ஒஸி அபேகுணசேகரா உட்பட சுமார் 60 பேர் குண்டுவெடிப்பில் உயிரிழந்தனர். இக்குண்டுவெடிப்பு ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களில் சந்திரிகாவுக்குப் பெரும் சங்கடத்தை அளிப்பதாக இருந்தது.

கொலையுண்ட காமினியின் குடும்பத்தவர்களும், அவரது கட்சி சகபாடிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளையும், சந்திரிகா அரசையும் எந்தவொரு கட்டத்திலும் அவர் இனவாதத்தைப் பேசவில்லை. ஐ.தே.கவினர் காமினியின் மரணத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே காரணம் என்று தீவிர பிரசாரஞ் செய்தபோதிலும் சந்திரிகா விடுதலைப் புலிகளைத் தாக்கியோ அல்லது தமது அரசுக்கும் புலிகளுக்குமிடையில் ஆரம்பமான பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொள்ளும் பணியிலோ எந்தவொரு கருத்தையும் வெளியிடவில்லை.

இதன்மூலம் சந்திரிகா தமது பிரசாரத்தில் இனவாதத்தை தொலைவிலேயே வைத்திருந்ததுடன் பிற்போக்கான, குறுகிய அரசியல் கண்ணோட்டங்களுக்கும் இடந்தந்திருக்கவில்லை.

இதன்மூலம் இலங்கை எதிர்காலத்தில் இன,மத,மொழிவாதங்களற்ற ஒரு புதிய அரசியல் சூழ்நிலையைக் கொ்ண்டிருக்க வேண்டுமென்பதனையே நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் புலப்படுத்துவனவாக இருக்கின்றன.

வேறுபட்ட ஒரு புதியபாணியைக் கொண்டிருக்க வேண்டியவராகவே சந்திரிகா காணப்படுகின்றார்.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களின் தமிழ்பேசும் மக்கள் மட்டுமல்ல மலையக மக்களும் சந்திரிகா மீது தமது நம்பிக்கையை வெளியிட்டிருப்பதனை வடக்கு-கிழக்கு, மலையக வாக்களிப்பு முடிவுகள் மூலம் தெளிவாக அறிந்துகொள்ள முடிகின்றது.



கொண்டதாக இருக்கின்றது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை இலங்கையில் அறிமுகப்படுத்திய முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன கூட முன்பு ஒருதடவை உரையாற்றியபோது, "ஓர் ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாக மட்டும் தம்மால் மாற்றமுடியாதே தவிர மற்றைய அனைத்தையும் இந்த நிறைவேற்று அதிகார ஆட்சிமுறைமூலம் தம்மால் மேற்கொள்ளமுடியும்" என்று ஜே.ஆர். கூறியிருந்தார்.

சந்திரிகா நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மட்டுமல்ல அதற்கு முன்னர் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில்கூட இலங்கையிலிருந்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை நீக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்.

சந்திரிகாவின் அரசு பூர்வாங்கப் பேச்சுக்களை ஆரம்பித்திருந்தது. இப்பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து பரஸ்பர புரிந்துணர்வுடன் மேற்கொள்வதில் அரசு தரப்பும், தமிழீழ விடுதலைப் புலிகளும் ஆர்வங்காட்டியிருந்தனர்.

ஆயினும் அரச தரப்பினருக்கும், புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளை எதிர்காலத்தில் தொடர்ந்து நடத்துவது குறித்து கேள்விக்குறியொன்றை எழுப்பியதாகவே காமினி திசாநாயக்காவைப் பலியெடுத்த தொட்டலங்க குண்டு வெடிப்புச் சம்பவம் விளங்கியிருந்தது.

இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து பேரினவாதக்

## புலிகளுடனான சமரசம், அரசியலமைப்பு மாற்றங்கள்; என்பனவே அவர்முன்பாக உள்ள தலையாய பணிகள்!!

குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புபடுத்தித் தமது பிரசாரங்களைக் கட்டவிழ்த்துவிட்டிருந்தனர்.

கூடவே காமினியின் மரணத்தையடுத்து நாட்டு மக்களின் அனுதாபத்தை தமது தரப்புக்கான ஆதரவாகத் திரட்டும் விதத்தில் காமினியின் பூதவுடல் அவரது இல்லத்தைவிட்டு வெளியேறுமுன்னரே ஐ.தே.கவினர் காமினியின் விதவை மனைவியான திருமதி. சிறிமா வஜிரா திசாநாயக்காவை ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நியமித்திருந்தனர்.

'சந்திரிகாவுக்கு வாக்களிப்பது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிப்பதற்குச் சமானமானதாகும்.' 'இந்த நாட்டில் எல்.ரி.ரி.ஈயை மேலும் வளர அனுமதிப்பதா? அல்லது அவர்களை அழிப்பதா என்பதனை இத்தேர்தல் மூலம் மக்கள் உறுதி செய்ய வேண்டும்' என்று ஐ.தே.கவினர் தமது பிரசாரங்களில் முடுக்கிவிட்டிருந்தனர்.

இனவாதத்தை தூண்டும்வகையில் சந்திரிகாவை நெற்றியில் பொட்டிட்ட ஒரு தமிழ் பெண்ணாகவும் சித்தரித்து சுவரொட்டிகளும் வெளிவந்திருந்தன.

ஆயினும் சந்திரிகா தமது பிரசாரத்தில் உறுதியாகவே இருந்தார். நாட்டில் அமைதி, சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்குத் தீர்வொன்றைக் காண்பது, மற்றும் தென்னிலங்கையில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளிவைத்து அடிப்படை மனிதஉரிமைகளை நிலைநாட்டுவது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி

சந்திரிகாவின் தேர்தல் வெற்றி முற்றிலும் எதிர்பார்த்திராததாகவே இருக்கின்றது.


சந்திரிகா தனது தேர்தல் பிரசாரங்களில் உரையாற்றுகையில் தமக்கு சுமார் 6 இலட்சம் அதிகப்படியான வாக்குகள் கிடைப்பது நிச்சயமே என்று கூறிவந்தார். ஆனால் அவரே அதிசயிக்கும் வகையில் 19 இலட்சத்துக்கும் அதிகமான மேலதிக வாக்குகள் அவருக்கு நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்துள்ளது.

இவ்வளவு பெருந்தொகையான வாக்குகளுடன் சந்திரிகா தெரிவாகியிருப்பதை நோக்கும்போது சமாதான முயற்சிகள், மற்றும் அவரது அரசியலமைப்பு மாற்றம் குறித்த விடயங்களில் நாட்டு மக்கள் அதிக நம்பிக்கை கொண்டிருப்பதையே அறிய முடிகின்றது.

எனவே ஆட்சிபீடத்தில் தற்போது முழுமையான ஆளுமையைக் கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா, திறந்த மனத்துடன் புதிய அரசியல் சிந்தனைகளுடன், மக்கள் எதனை எதிர்பார்க்கிறார்களோ அதனையே செயலில் காட்டவேண்டியவராகவும் இருக்கின்றார்.

கடந்த 17 வருடகால நிறைவேற்று அதிகார ஆட்சிமுறை ஏறத்தாள ஒரு 'கொடுங்கோல்' ஆட்சியாகவே விளங்கியிருந்தது.

வடக்கு-கிழக்கில் தமிழ்பேசும் மக்கள் மீதான அடக்குமுறைகளுக்கும், தென்னிலங்கையில் பெருமளவு அடிப்படை மனித உரிமை மீறல்களுக்கும் கடந்தகாலங்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையே மூலகாரணமாக விளங்கியிருந்தது.



### ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல வடபகுதி வாக்களிப்பு!

கிழக்கில் சந்திரிகாமீதான ஆதரவு ஒரு பேரலையாகவே விளங்கியிருந்தது. வடக்கே படையினரால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் வடபகுதிப் பிரதேசங்களுக்கான வாக்களிப்புகள் இடம்பெற்றிருந்தன.

வாக்காளர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைந்தளவிலேயே வடபகுதியில் காணப்பட்டிருந்தது. ஆயினும் 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்று கூறப்படுவதற்கு அமைவாகவே வடபகுதி மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிப்பதாக அங்கிருந்து கிடைத்த முடிவுகள் விளக்கியிருந்தன.

இலங்கையில் ஜனாதிபதிப் பதவி பெருமளவு அதிகாரங்களைக்

நீதியமைச்சரும், அரசியல் அமைப்பு விடயங்களைக் கையாளும் பொறுப்பைக் கொண்டிருப்பவருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அடுத்தஆண்டு (1995) ஜூலையில் புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும் என்று அண்மையில் தெரிவித்திருந்தார்.

அத்துடன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை நீக்கிய பின்னர் சந்திரிகா மீண்டும் பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு முக்கியமளித்து பிரதம மந்திரியாகத் தம்மை மாற்றிக்கொள்வார் எனவும் பேராசிரியர் பீரிஸ் கூறியிருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் அரசியல் நடவடிக்கைகளை முழு நாடுமே மிக ஆவலுடன் எதிர்பார்க்கின்றது. ஒரு பலம்மிக்க ஜனாதிபதியாக நாட்டு மக்கள் சந்திரிகாவைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

இலங்கையில் இதுவரை எந்தவொரு தலைவருக்கும் வழங்கியிருக்காத ஆதரவை நாட்டுமக்கள் சந்திரிகாவுக்கு வழங்கியுள்ளனர். இதன்காரணமாக உலக நாடுகள்கூட சந்திரிகாவின் அரசியல் நடவடிக்கைகளை மிக ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றன.

வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கு ஒரு முடிவுகட்டி அப்பிரதேசங்களில் சமாதானத்தை ஏற்படுத்துவது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ரத்துச் செய்து மீண்டும் பாராளுமன்ற அரசியலுக்குப் புத்துயிர் அளிப்பது என்பனவே சந்திரிகா எதிர்நோக்கியுள்ள இருமுக்கிய அரசியல் விவகாரங்களாக இருக்கின்றன.

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு தீர்வொன்றைக் காணும்வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன்

கும்பல்களும், அரசியல் விஷமிகளும் இனவாதத்தைத் தூண்டி அரசு, புலிகளுக்கிடையிலான பேச்சுக்களில் முட்டுக்கட்டைகளைப் போடும் சூழ்நிலைகளை உருவாக்க எத்தனித்திருந்தனர்.

'சந்திரிக்காவின் தேர்தல் சின்னமான கதிரைக்கு வாக்களிப்பது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வாக்களிப்பதற்குச் சமனாகும்' எனவும் விஷமப் பேர்வழிகள் பிரசாரங்களைக் கட்டவிழ்த்திருந்தனர்.

ஆனால் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா ஈட்டிய பிரமாண்டமான வெற்றி அவரது அரசியல் நடவடிக்கைகளுக்கு நாட்டு மக்களின் பூரண அங்கீகாரமாகவே காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்கு நெருக்கடி ஒரு கொடிய யுத்தத்தை உருவாக்கி நாட்டின் அமைதி, சுபீட்சம் ஆகியவற்றுக்கு ஒரு சவாலாக இருக்கின்றது. இதனை நாட்டு மக்கள் நன்கு உய்த்துணர்ந்துள்ளனர்.

'போர் வேண்டாம், பகைமை வேண்டாம்; இனி ஒரு விதி செய்வோம். அதை எந்நாளும் பேணுவோம்' என்ற வகையில் புதிய சிந்தனைகளை நோக்கிய நிலையிலேயே மக்கள் சந்திரிகாவை ஜனாதிபதியாக்கியுள்ளார்கள்.

எனவே மக்களால், மக்களுக்காக ஜனாதிபதியாகத் தெரிவான சந்திரிகா முழு நாட்டு மக்களினதும் அரசியல் அபிலாஷைகளை எந்தவகையில் பூர்த்தி செய்யவுள்ளார் என்பதனையே முழு உலகமும் அவதானித்துக் கொண்டிருக்கின்றது!

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ விந்தைகள்

## குக்—குக்—குக்... குக்... குக்
## கொட்டாவிக்குப் பின்னால் என்ன இருக்கு?



**கொ**ட்டாவிக்கும் தூக்கத்துக்கும் நெருங்கிய உறவு இருக்கிறது என்றும் சோம்பேறிகளின் சுறுசுறுப்பற்ற தன்மையினை வெளிப்படுத்தும் சாதனம் என்றும் தான் கொட்டாவிக்கான விளக்கம் தரப்பட்டு வந்தது. அறிவியல், ரீதியில் மேலதிகமாக உடலினுள் தேங்கிய கரியமிலவாயு வெளியேற்றம் என்று கூறப்பட்டது. ஆனால் பல்டியோர் கவுண்டி - மேரிலாண்ட் பல்கலைக் கழக நரம்பியல் நிபுணர் பேராசிரியர் றொபட் புரோவைன், கொட்டாவி தொடர்பாக பல புதிய கருத்துக்களைக் கண்டறிந்துள்ளார்.

பேராசிரியர் புரோவைன் கடந்த 10 ஆண்டுகளாக 1000 பேரை தனது ஆய்வுளுக்கு உட்படுத்தியுள்ளார். மேலும் தனது பணிக்கு உதவுவதற்கு பலருடைய உதவிகைள அவர் நாடுகிறார்.

கொட்டாவி மிக வேகமாகத் தொற்றிக் கொள்ளும் தன்மையுடையது. ஒருவர் கொட்டாவி விடுவதைப் பார்த்திருக்கும் மற்றுமொர்ருவர் உடனடியாகக் கொட்டாவி விடுவார். படுக்கைக்குச் செல்வதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பாகவே சிலருக்கு கொட்டாவி ஏற்படுகிறது. இதற்குக் காரணம் உடலிலிருந்து சோர்வு அகன்று விடுகிறது என்று கொள்ளலாம்.


"ஒருவரிடமிருந்து மற்றுமொருவருக்குத் தொற்றக் கூடியதாக கொட்டாவி இருப்பதனால் இது மனிதப் பரிணாம வளர்ச்சியுடன் தொடர்புபட்ட ஒன்றாகும். முகத்திலுள்ள தசை நார்களில் ஏற்படும் சுருக்கங்களையும் தளர்வுகளையும் நீக்குதற்கு கொட்டாவி பயன்படுகிறது. ஒரு மனிதன் தன்னிடமுள்ள ஆற்றல்களை வெளிப்படுத்தும் வாய்ப்பிழந்துள்ள நிலையிலும் கொட்டாவி பிறக்கிறது".

இவ்வாறு டாக்டர் புரோவைன் கூறுகிறார். தொடரும் அவருடைய ஆராய்ச்சியின் முடிவில் கொட்டாவிக்குப் பின்னால் உள்ள பல புதிய தத்துவங்கள் கொட்டாவி பற்றி வெளிப்படும் என்று அவர் திடமாக நம்புகிறார். ■

## குறைந்தது பத்து நிமிசம் பிளீஸ்!

உடற்பயிற்சியிலீடுபடும் ஒருவரின் உடலுக்கு மாத்திரமல்ல அது அவரின் மனதிற்கும் புத்துணர்ச்சியை அளித்துவருகிறது.

மனோ வைத்திய நிபுணர்களின் கூற்றுப்படி மனத் தாக்கங்களுக்கு ஆளானோர் அவற்றிலிருந்து விடுபடுவதற்கு உடற் பயிற்சியே சிறந்த நிவாரணியென சிபார்சு செய்கின்றனர்.



உடற் பயிற்சி எனக் கூறும் பொழுது அவை மிகக் கடினமாக அமைய வேண்டும் என்ற கட்டாயமில்லையென்று குறிபபிடும் நிபுணர்கள் நாளாந்த வாழ்க்கையில் குறைந்தது பத்து நிமிட நேரமாவது உடற் பயிற்சியிலீடு படுவதன் மூலம் உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக பேணிப்பாதுகாத்துக் கொள்ள முடியும் எனவும் குறிப்பாக மனத் தாக்கமுற்ற ஒருவர் உடற்பயிற்சியில் ஈடுபடும் பொழுது அவரின் சிந்தனைமாற்றமடைவதோடு அவரின் மூளையும் வேதனையைத்தாங்கிக் கொள்ளும் சுரப்பிகைளயும் நேர்த்தியாக சுரக்கச் செய்கிறது. பயிற்சி முடிவில் அவரின் உடலில் புத்துணர்வும் சிந்தனை மாற்றமும் தோன்றப்பெறுகிறது. இவற்றின் மூலம் படிப்படியாக மனத்தாக்கங்களை பூரணமாக போக்கி கொள்ள முடியுமென மேலும் அவ் வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். ■

## இறைச்சிப் பிரியர்கள் ஜாக்கிரதை

**நா**ம் உட்கொண்டுவரும் உணவுக்கும் நம் உடலின் ஆரோக்கியத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்காமல் விடுமா? அதிக அளவில் இறைச்சியை உட்கொள்வோர் அதி விரைவிலேயே புற்று நோய்த் தாக்கத்திற்கு ஆளாகிவருவதாக மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சமீபத்தில் 51000 மக்களைக் கொண்டு அமெரிக்க நாட்டு வைத்தியக் குழுவினர் நடத்திய பரிசோதனையில் இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் இதுபற்றி அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களின்படி அதிக அளவில் இறைச்சியை உட்கொள்ளும் பழக்கத்தை கொண்டோர்களில் பலருக்கு விந்துக் கோளத்தில் கூட புற்று நோய்த் தாக்கங்கள் ஏற்பட்டிருந்ததாகவும் வாரம் ஒன்றிக்கு ஐந்து கறிக் கிண்ணத்தளவு இறைச்சியை உட்கொண்டு வந்தவர்களே அதிக பாதிப்புக்கு ஆளாகியிருந்ததாகவும் தெரியவருகிறது. ●

### கிளாமர் நியூஸ்
## இது பெரிய அநியாயமப்பா!



இந்தியாவெங்கும் சமீபகாலமாக அத்தியாவசியப் பிரச்சனையாக விவாதிக்கப்படும் விவகாரம் 'தணிக்கைக்குழு' நடவடிக்கை.

தொப்புள் தெரிந்தால் போதும் அந்தக் காட்சியை வெட்டிவிடுகிறார்களே நியாயமா? அடுக்குமா? என்றெல்லாம் சினிமா உலகத்தினர் நீதி கேட்டு வருகிறார்கள்.

இதற்கிடையே இந்தியாவில் ஒரு ஆங்கிலப்படம் சத்தமில்லாமல் வந்து சக்கைபோடு போடுகிறது. படத்தைப் பார்த்த இந்தியப் படவுலகத்தினருக்கு அதிர்ச்சி.

"அய்யய்யோ அநியாயம்" என்று தலையில் கைவைத்து ஒப்பாரி.

காரணம், 'தணிக்கைக்குழு'வின் கண்களில் மண்ணைத்தூவிவிட்டு அந்தப்படம் அமர்க்களப்படுத்துகிறதாம்.

படத்தின் கதாநாயகி மடோனா. ஒரு போத்திலை கையில் வைத்துக்கொண்டு அவர் நடித்துள்ள பாடல் காட்சியில் ஆபாசம் படுமோசமாக ஆக்கிரமித்திருக்கிறதாம். படத்தின் பெயர் 'இன் பெட் வுத் மடோனா'.

பூலான்தேவி பற்றிய படத்தில்கூட கதைக்கு அவசியமான நிர்வாணக் காட்சிகளை வெட்டியவர்கள் மடோனாவை மட்டும் கவனிக்கவில்லையாக்கும் என்று பொருமுகிறார்கள் இந்திய சினிமா உலகக்காரர்கள். ம்.... அவர்கள் கவலை அவர்களுக்கு!

## நாணமோ இது நாணமோ?

இங்கிலாந்து இளவரசி டயானாவின் காதலர் என்று கொலரைத் தூக்கிவிட்டுக் கொள்ளும் ஜேம்ஸ் கெவிற் சொல்லி எழுதிய புத்தகம் பற்றி முரசு ஏற்கனவே தகவல் வெளியிட்டிருந்தது. ஜேம்ஸ் கெவிற் பொல்லாத ஆசாமி. காதலுக்கு சாட்சியான புகைப்படங்களையும் பத்திரமாக சேகரித்து வைத்திருந்தாராம். அதில் ஒரு படம்தான் மேலே. அதுசரி, டயானா வெட்கப்படுவது காதலினாலா அல்லது பரிசு கிடைத்த களிப்பினாலா? ஜேம்ஸிடம் கேட்டால் அது காதலின் முத்திரைகளில் ஒன்று என்றுதான் சொல்லுவார். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?



### அமெரிக்க சஞ்சிகையின் ஆய்வு
## கணவன் என்ன காதல் மன்னவனோ?
### மனைவியர் மத்தியில் ஒரு கணிப்பு





**பு**துவிதமான ஆய்வுகள் நடத்துவதில் மேல்நாட்டுப் பத்திரிகைகளுக்கு குசியோ குசி.

சிண்டு முடிவது, வம்பில் மாட்டுவது போன்றவற்றையும் ரசித்துக்கொண்டு செய்வார்கள்.

தம்பதியரை சந்தித்து பேட்டி என்றால், அந்த விசயத்தில் எப்படி நடந்து கொள்வீர்கள் என்றுகூட விவஸ்தையில்லாமல் கேட்டுவிடுவார்கள். அதற்கு விலாவாரியாக விளக்கம் சொல்வோரும் இருக்கிறார்கள். விளக்கம் சொல்வோர் இருக்கும் போது வினா தொடுப்பதில் என்ன பிழை?

சமீபத்தில் அமெரிக்க சஞ்சிகை ஒன்று வித்தியாசமாக யோசித்து ஒரு ஆய்வு நடத்தியிருக்கிறது.

அதாகப்பட்டது; கணவர்மாரில் காதல் மன்னர்களாக இருப்பவர்கள் யார் என்று அவர்களது மனைவியர்கள் மூலம்அறிவதுதான் ஆராய்ச்சி.

சிக்காக்கோ நகர வீதியில் இறங்கிய நிருபரிடம் முதலில் மாட்டியவர் திருமதி பிரெண்டா றியன்ஸ்சானோ.

திருமதியிடம் அவரது துணைவர் பற்றிய அபிப்பிராயத்தை துருவினார் நிருபர்.

திருமதி உடனே சொல்லத் தொடங்கினார்.

அவரை கைப்பிடித்து ஆகிவிட்டன 30 வருடங்கள்.

என் துணைவரிடம் ஒரு ஸ்பெசல் குணம் இருக்கிறது.

அது உன்ன ஸ்பெசல் குணம்?

இருப்பது ஒரே வீட்டில் சந்திப்பு உண்டு தினசரி! ஆனாலும்கூட தினமும் ஒரு காதல் கடிதம் எழுதி என்னிடம் தந்து விடுவார். இது ஸ்பெசல் குணம் தானே!

இன்னொரு குணமும் உண்டு! அது யாதெனில், இரவு வீடு திரும்பும் போது மறக்காமல் பூச்செண்டுகள் வாங்கிவந்து தருவார்.

இதையெல்லாம் சொல்லிவிட்டு திருமதி வெட்கப்பட்டுக் கொண்டு சொன்ன இறுதித் தகவல்,

"தினமும் இரவில் என் காதுகளுக்குள் காதல் கவிதைகளை பொழிந்து தள்ளிவிடுவார்,"

தனது கணவர்தான் சிறந்த காதல் மன்னன் என்று அடித்துக் கூறிவிட்டார் திருமதி பிரெண்டா றியன்ஸ்சானோ.

அடுத்ததாக நிருபரிடம் சிக்கியவர் திருமதி பற்றியா மன்னிங். அலுவலகம் ஒன்றில் நிர்வாக அதிகாரியாக இருக்கிறார். விரல் நுனியில் விபரம் என்பார்களே அது மாதிரி தனது கணவர் பற்றி படபடவென்று புகழ்ந்து தள்ளிவிடடார்.

"வாரத்தில் மூன்று முறை காதலுறவு கொள்வோம். சனிக்கிழமைகளில் சினிமாவுக்குச் செல்வோம். ஞாயிறுதோறும் தேவாலயம் சென்றுவிடுவோம்.

வெள்ளிக் கிழமைகளில் தித்திப்பான பதார்த்தங்களை அவர் வாங்கிவருவார்.

அது மட்டுமல்ல செவ்வாய்கிழமை தோறும் காலை உணவை சமைக்கும் பொறுப்பை அவரே ஏற்றுக்கொள்வார்.

ஆக, என் புருசன்தான் காதல் மன்னன். எனக்குமட்டும் தான் தெரியும் என்றுவிட்டார் இரண்டாவது திருமதி.

திருமதி கதி புறுவா தனியார் நிறுவனம் ஒன்றில் விற்பனை முகாமையாளராக இருக்கிறார். தனது கணவரே கண்கண்ட காதல் மன்னர் என்று உறுதியாகச் சொல்கிறார்.

20 வருடம் எந்த பிணக்கும் இல்லை. அந்த விசயத்தில் கூட என் விருப்பம் அறிந்தே நடந்துகொள்ளுவார். நான் மறுத்தால் வற்புறுத்த மாட்டார்.

பாத்திரங்களை அவரே கழுவி வைத்துவிடுவார். சமையலின் போது உதவி செய்வார்.

இரவு ரி.வி பார்த்து விட்டு இனிப்பான கதைகள் பேசிவிட்டு தூங்கச் செல்வோம். தினசரி எமக்கு தித்திப்புத்தான் என்கிறார் திருமதி கதி புறுவா.

திருமதிகள் யாரைக் கேட்டாலும் 'என் புருசன்தான் காதல் மன்னன்' என்று அடித்துக் கூறியதால் நிருபருக்கு சலிப்பு வந்துவிட்டது.

உடனே இன்னொரு யோசனை!

உங்கள் அப்பா எப்படி?

உங்கள் அம்மாவுக்கு உண்மையாக நடப்பவர் தானா என்று ஒரு கேள்வியை தூக்கி திரு. ஒல்சான் என்பவரிடம் நீட்டினார்.

அவரோ சற்றும் அதிராமல் "என் அப்பா தான் தலை சிறந்த காதல் மன்னன்" என்று உறுதியாகக் கூறி சான்றுகளையும் அடுக்கிவிட்டார். சான்றுகளில் சில,

"எனது தாயார் பல வருடங்களாக பாரிச வாதத்தினால் தாக்குண்டு மருத்துவமனையில் படுத்த படுக்கையில் கிடக்கிறார். அதிகாலையில் எழுந்து எனது தந்தையார் அம்மாவிக்கு வேண்டிய காலை உணவை தயாரித்து மருத்துவ மனைக்குக் கொண்டு செல்வார். தாய்ரா காலைக் கடன்களைக் கழிப்பதற்கு தாதிமாரின் உதவியை நாடாமல் தந்தையே முடிக்க உதவுவார். உடல் கழுவி, உடைகளைக் கழுவி உடுத்தி - காலை உணவினை ஊட்டிய பின் சக்கர நாற்காலியில் வைத்து தொலைக்காட்சி பார்க்கவோ காற்று வாங்கவோ அழைத்துச் செல்வார்.

"பகலில் கதைப் புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் தாயாருக்குப் படித்துக் காட்டி ஓய்வாக இருக்கவிட்டபின் 15 மைல் தூரத்திலுள்ள வீடு வந்து சேர்வார். வீட்டுக்கு வந்தாலும் சதா அம்மாவைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பார். வீட்டிலிருந்த வண்ணம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசும்போது அவர் அம்மா மீது வைத்துள்ள அளவற்ற அன்பை உணரமுடிகிறது".

இவ்வாறு தனது தந்தையைப் பற்றி சுசான் ஒல்சான் கூறுகிறார்.

நிருபருக்கு ஒரே குழப்பம். இதில் யார் உண்மையான காதல் மன்னன்? போதும் என்று திரும்பிவிட்டார். ●

# சூப்பர் சுறா!

பெட்டித் தகவல்



அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள மெரீனா டெல்ரே கடற்கரையில் ஜோ கறுசோ என்பவருக்குப் பயங்கரமான சுறா தரிசனம் கிடைத்தது. முதலில் அவருக்கு தன் கண்கள் மீதே சந்தேகம். பின்னர் அதிர்ச்சி. ஓடிப்போய் ஊருக்குள் சொல்லி ஆட்களை அழைத்துவந்து காட்ட எல்லோருக்கும் பயம் கலந்த ஆச்சரியம்.

இந்த சூப்பர் சுறாவின் நீளம் 17 அடி 3 அங்குலம். எடை 4500 இறாத்தல். பலரை கடலில் சுருட்டிச் சாப்பிட்ட பயங்கர வெள்ளைச் சுறாவாம் இது. ஊரே திரண்டு மடக்கிப்பிடித்து மூச்சை நிறுத்திவிட்டார்கள்.

பிறகுதான் நிம்மதிப் பெருமூச்சு!



## அன்று முரசில் வந்த நிலா!
## இப்போது கல்யாண உலா!!

முரசு 48ல் கனடாவில் உள்ள அழகி ஆஸ்லேயின் படத்தை வெளியிட்டிருந்தோம். நாலு கால் அழகி மணமகன் தேடும் விசயத்தையும் வெளியிட்டிருந்தோம்.


முரசு வாசகர்கள் சிலரே விலாசத்தைத் தாருங்கள் பிளீஸ் நாங்கள் ரெடி என்று கேட்டிருந்தார்கள்.

நாம் என்ன செய்யமுடியும்? இன்னாருக்கு இன்னார் என்று எழுதி வைத்திருக்கிறார்களாமே!?

அமெரிக்க இளைஞர் 'இதேன்' என்பவர் இதோ நானே உன் இராஜகுமாரன் என்று முந்திவிட்டார். நாலுகால் அழகியின் இதயத்தில் நாற்காலி போட்டு அமர்ந்துவிட்டார். அவர் மடியில் அழகி அமர்ந்துவிட்டாள். இனி டும் டும் டும் கல்யாணம்.

வாழ்க மணமக்கள்!

## வசதியான உயரம்



அமெரிக்காவில் டல்லாஸ் மாநிலத்தில் ஒரு இரவு விடுதி. அங்கு காவல்காரனாக இருப்பவர் கல்வின். அவர் நெஞ்சை நிமிர்த்திக் கொள்ளலாம். ஏனென்றால் உலகிலேயே அவர்தான் உயரமான காவல்காரன்.

7 அடி 6 அங்குல உயரம். எடை-400 பவுண். 42 அங்குல அளவுக்கு நெஞ்சை விரிக்கும் பயிற்சியும் அவருக்கு தெரியும்.

இரவு விடுதியில் நடனமாடும் பெண்களுக்கு கல்வின்மீது ஒன்று+அரைக் கண்! ஆனால் கல்வின் லேசில் சபலப்படும் ரகமல்ல. சேர்ந்து நின்று புகைப்படம் எடுக்க மட்டும் நடனப் பெண்களுக்கு போனால் போகட்டும் என்று அனுமதி கொடுப்பார்.

இரவு விடுதியில் வேலை என்பதால் கராத்தே கற்றும் வைத்திருக்கிறார். வரம்பு மீறுவோரை வசதியாக கவனிக்க உதவும்.

# நாம் இருவர்—நமக்கிருவர்
# இரட்டையரை மணந்த இரட்டையர்




இரட்டையரை இரட்டையர் மணந்துள்ளார்கள். இந்த அதிசய ஜோடிப் பொருத்தம் வருமாறு:


இந்தியாவின் கேரள மாநிலத்தில் எர்ணாகுளம் ஏலூரைச் சேர்ந்த வாசுதேவன் பிள்ளையின் மகள்கள் ரமா, உமா இருவரும் இரட்டையர்கள். இருவரும் அசப்பில் ஒன்றுபோல இருப்பார்கள். அதிக வித்தியாசம் தெரியாது. இருவ்ரும் பி.எஸ்.ஸி. பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்வு பெற்றனர். இப்போது உமா கம்பியூட்டர் படிப்பும், ரமா எம்.எஸ்.ஸியும் படித்து வருகிறார்கள்.

இரட்டை சகோதரிகளான இவர்களுக்கு பெற்றோர் வரன் தேடினார்கள். இருவரையும் ஒரே வீட்டில் சகோதரர்களுக்குக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணினர். ஏனெனில் ரமாவும், உமாவும் பிறந்தது போலவே எப்போதும் இணை பிரியாமல் வளர்ந்தார்கள். திருமணம் அவர்களைப் பிரித்துவிடக் கூடாது என்று வீட்டார் விரும்பினார்கள். அவர்களுக்காகத் தகுந்த வரன்களைத் தேடி அலுத்துப்போன நிலையில் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார்கள்.

அப்போதுதான் உமா, ரமாவைப் போலவே ஒரு இரட்டைச் சகோதரர்கள் பெண்தேடிக் கொண்டு இருந்த விபரம் தெரியவந்தது. அவர்கள் பாலக்காடு அருகே உள்ள பள்ளிபுரம் வாசுதேவன் நாயருடைய மகன்களான விஜயசங்கர், ஜெயசங்கர். இவர்கள் இருவரும் துபாயில் பணி புரிகிறார்கள்.

இரு வீட்டார்களும் சந்தித்துப் பேசியதில் விஜயசங்கருக்கு ரமாவும், ஜெயசங்கருக்கு உமாவும் ஜோடி சேர்க்கப்பட்டனர். இந்த அபூர்வ ஜோடியின் திருமணம் கடந்த அக்டோபர் 24ல் (24/10/94) நடந்தது. திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்பார்கள். இது இவர்களைப் பொறுத்தவரை உண்மைதான் என்று உறவினர்கள் வியப்படைகிறார்கள்.

(தகவல்-
இந்திய நிருபர்
ஏழுமலை)





# சினி விசிட்

## இந்தியில் ஏ.ஆர். ரகுமான்

இளம் இசையமைப்பாளரான ஏ.ஆர்.ரகுமான் முதன் முதலாக ஒரு இந்திப் படத்திற்கு இப்போது இசையமைத்து வருகிறார். படத்தின் பெயர் 'ரங்கீலா'. 'உதயம்' படத்தை இயக்கிய ராம்கோபால் வர்மா இயக்கும் 'ரங்கீலா' படத்தைத் தொடர்ந்து இன்னுமொரு இந்திப் படத்தில் ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கவுள்ளார்.

## தயாராகிறது 'புலிகேசி'

அர்ஜுன் நடிக்கும் புதிய படம் 'புலிகேசி'. கதாநாயகி யார் என்பது இன்னும் முடிவாகவில்லை. கவுண்டமணி, செந்தில், மனோரமா ஆகியோரும் நடிக்கிறார்கள். ஒளிப்பதிவு சந்தோஷ் சிவன்.

## மினிசினி

- 'பாட்ஷா' படத்தில் ரஜினியுடன் இணைந்து ஒரே ஒரு பாடல் காட்சியில் மட்டும் நடனமாடுகிறார், 'துள்ளித் திரிந்த' படத்தின் கதாநாயகி ரீத்து.
- 'திருடா திருடா' படத்தில் நடிகர் திலகத்திற்கு ஜோடியாக நடித்த 'ரீனா', தற்போது 'கட்டபொம்மன்' படத்தில் இளையதிலகம் பிரபுவுக்கு சகோதரியாக நடித்து வருகிறார்.
- தொழிலதிபர் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டு அமெரிக்காவுக்குச் சென்ற 'தென்றலே என்னைத் தொடு' நாயகி ஜெயஸ்ரீ தமிழில் மீண்டும் நடிக்கவுள்ளார்.
- சரவணன் நடித்து தீபாவளிக்கு வெளிவந்த 'தாய்மனசு' படத்தை தெலுங்கில் தயாரிக்கவுள்ளார் 'ஊர்வசி' சாரதா. அத்துடன் தமிழில் மனோரமா நடித்த வேடத்தில் சாரதா தெலுங்குப் பதிப்பில் நடிக்கவுள்ளார்.
- தமிழ்த்திரையுலகின் முன்னணி நடிகர்கள் அனைவரையும் இயக்கிய திரைப்படக் கல்லூரி மாணவர் என்ற பெருமை ஆர்.வி. உதயகுமாருக்கு உண்டு. இவர் அடுத்து அர்ஜுன் கதாநாயகனாக நடிக்கும் 'ஆகஸ்ட் 15' என்ற படத்தை இயக்கவுள்ளார்.
- நீண்ட இடைவெளிக்குப் பின் 'பாண்டியன்', 'ராஜதுரை' போன்ற படங்களில் நடித்த ஜெயசுதா, அடுத்து தமிழில் ஒரு படத்தைச் சொந்தமாகத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார்.
- 'நூறாவது நாள்' படத்தில் சத்யராஜ் முதன் முறையாக சினிமாவுக்காக முதலில் மொட்டை போட்டார். இதைத் தொடர்ந்து பல சினிமாவுக்காக மொட்டை போட்டவர், அண்மையில் 'தாய்மனசு' படத்திற்காக பிரதிவிராஜ் மொட்டை போட்டார். தற்போது செய்யாத புதிதாக நடிக்கும் படமொன்றிற்காக மொட்டைபோடப் போகிறார்.
- முதன் முறையாக தெலுங்குப் படமொன்றில் நடிக்கவுள்ளார் அரவிந்தசாமி. தமிழ்-தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் தயாராகும் இப்படத்தில் அரவிந்தசாமிக்கு ஜோடியாக தபு நடிக்கவுள்ளார்.
- தமிழ், தெலுங்கு, கன்னட படங்களை இயக்கி வந்த இராமநாராயணன் அண்மையில் ஒரியா மொழிப் படமொன்றை இயக்கி வெளியிட்டார். இவர் அடுத்து அஸ்ஸாமி, வங்காளி ஆகிய மொழிகளில் படங்களை இயக்கவுள்ளார்.
- கமல் சொந்தமாகத் தயாரிக்கும் 'சதிலீலாவதி' படத்தில் கோவை வேடத்தில் நடிப்பதுடன், சொந்தக் குரலில் ஒரு பாடலையும் பாடுகிறார். 'சதிலீலாவதி' மொழிகளிலும் வெளிவரவுள்ளது.


ஊர்வசி
படம்-சிட்டி

## மீளும் முயற்சி

'காவியத் தலைவன்' படத்தின் மூலம் பலத்த அடி வாங்கிய ஆபாவாணன், சரிவில் இருந்து மீளும் முயற்சியில் 'அன்பின்ராமன்' என்ற படத்தைச் சத்தமில்லாமல் எடுத்து வருகிறார்.

ராம்கி கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தை 'சக்கரைத்தேவன்' படத்தை இயக்கிய ஜெ.பன்னீர் இயக்கி வருகிறார். முழுக்க முழுக்க தமிழ்நாட்டிற்கு வெளியே இதன் படப்பிடிப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

## பிரபலத்தின் வாரிசு

காலத்தால் அழிக்க முடியாத காவியமாகப் பேசப்படுகின்ற 'கப்பலோட்டிய தமிழன்', 'வீரபாண்டிய கட்டபொம்மன்', 'ஆயிரத்தில் ஒருவன்' போன்ற படங்களை இயக்கியவர் மறைந்த மாமேதை பி.ஆர்.பந்துலு.

இவருடைய மகளான ஒளிப்பதிவாளர் பி.ஆர்.விஜயலட்சுமி முதன் முதலாக 'பாட்டுப் பாடவா' என்ற படத்தை இயக்கி வருகிறார். "பாடல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, நகைச்சுவை காதல் கதையாக குடும்பத்துடன் அனைவரும் பார்க்கக்கூடிய படமாக இருக்கும்" என்று கூறியுள்ளார் பி.ஆர்.விஜயலட்சுமி.

## அடித்தது சான்ஸ்

தமிழில் விசுவின் 'மணல் கயிறு' படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி, 'சித்திரைப் பூக்கள்' படத்தின் மூலம் கதாநாயகி அந்தஸ்துக்கு வந்தவர் வினோதினி. தொடர்ந்து இரண்டாவது கதாநாயகியாகவும், தங்கை வேடங்களிலும் நடித்த அவர், கன்னடம் மற்றும் மலையாளப் படங்களில் பிஸியாக நடித்து வருகிறார்.

சமீபத்தில் வினோதினிக்கு இந்திப் படமொன்றில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்தப் படத்தில் இவருக்கு ஜோடியாக பிரபல இந்தி நடிகர் ஜாக்கி ஷெராப் நடிக்கிறார்.

## ஸ்ரீபிரியாவின் 'விடுதலை'

நடிகை லதாவின் தம்பி ராஜ்குமாரை திருமணம் செய்துகொண்ட பின்னர் திரையுலகைவிட்டு ஒதுங்கியிருந்தார் ஸ்ரீபிரியா. ஒரு குழந்தைக்குத் தாயாகிய பின்னர் இப்போது மீண்டும் டைரக்ஷன் துறையில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளார்.

ஸ்ரீபிரியா இப்போது இயக்குவது சினிமாவை அல்ல, தொலைக்காட்சித் தொடரொன்றை. 'விடுதலை' என்ற பெயரில் இவர் இயக்கும் தொலைக்காட்சித் தொடரில் கதாநாயகியாக ராதிகா நடிக்கவுள்ளார்.

## 'வேட்டிய மடிச்சுக் கட்டு'

ஒரு வாரம் ஒரு ராஜகுமாரி படத்தை முடித்துவிட்டு பாக்யராஜ் நடிக்கப்போகும் புதிய படத்தின் பெயர் கிடைத்திருக்கிறது. அதன் பெயர் 'வேட்டிய மடிச்சுக் கட்டு' பாக்யராஜ் கதைவசனம் எழுதி இயக்கி நடிக்க அதற்கு பொருத்தமான நாயகியை தேடி தேர்வு நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

## சினிமா கற்றுத் தந்த பாடம்...!

"தெரிந்தவர்கள் பெயரைச் சொல்லிக்கொண்டு சினிமாவில் வாய்ப்புத் தேடக்கூடாது. தேடினால் அவமானம்தான் மிஞ்சும் என்கிறார் ராதாரவி.

ஆரம்பத்தில் வாய்ப்புத் தேடிப்போனபோது ஸ்டுடியோவுக்கு காரில் செல்லவே அனுமதிக்க மறுத்தார்கள். இப்போது படுக்கையறைவரை செல்லவும் தடை இல்லை. திறமையைக் காட்டி முன்னுக்கு வந்தால்தான் மதிக்கிறார்கள். இதுதான் சினிமா எனக்குக் கற்றுத்தந்த பாடம்" என்கிறார் ராதாரவி.

## மூன்று வேடங்களில் சத்யராஜ்

சத்யராஜுக்கு தீபாவளி சந்தோசம் தந்திருக்கிறது. தீபாவளி வெளியீடாக வந்த அவரது 'வீரப்பதக்கம்' வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

'அமைதிப்படை' வெற்றிக்குப் பின் 'வீரப்பதக்கம்' படத்திலும் வில்லத்தனமாக நடித்திருக்கிறார். அடுத்த படம் 'வில்லாதி வில்லன்'. இயக்கம் சத்யராஜ். மூன்று வேடங்களில் அசத்தலாம் என்று திட்டமிட்டிருக்கிறார். முதலில் இரு வேடத்தில் நடிப்பது என்று தீர்மானித்ததில் இப்போது மாற்றம்.

வீரப்பதக்கத்தில் சத்யராஜின் ஜோடிகளில் ஒருவராக நடித்த ராதிகா 'வில்லாதி வில்லன்' படத்திலும் ஒரு சத்யராஜுக்கு ஜோடி. ஜனவரி மாதம் படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.

## பிரசாந்தின் புதியபடம்!

பிரசாந்த் நடிக்கும் 'ஆணழகன்' படத்தை இயக்குவது அவர் தந்தை தியாகராஜன் என்பது தெரிந்த செய்தி.

'ஆணழகன்' படத்தை அடுத்து தியாகராஜன் இயக்கப்போகும் புதிய படம் 'படகோட்டி பாபு'. இதில் கதாநாயகன் வேறு யாருமல்ல பிரசாந்தேதான்.

தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் தயாராகும் 'படகோட்டி பாபு'வுக்கு கதாநாயகி தேர்வு நடக்கிறது.

## சில்க்-சில சுவையான தகவல்கள்

சில்க் ஸ்மிதா பற்றி அறிந்துகொண்டு பொது அறிவை வளர்ப்பது மிக அவசியம் என்பதால் இதோ சில தகவல்கள்.

சொந்த ஊர்- ஆந்திரா. சாதனை- இடைவிடாமல் 14 வருசம் ஆட்டம்.

சில சமயம் மட்டும் நடித்து பெரும்பாலும் ஆடி முடித்த படங்கள் ஏறக்குறைய 400.

சின்ன சின்ன வர்ண வர்ண ஆடைகளில் ஆடிவரும் சில்க் ஸ்மிதாவின் ஆசை அன்னை தெரேசா போல் சமூக சேவை செய்வது.

தற்போதைய வருத்தம் சென்சார் கையில் இருக்கும் கத்தரிக்கோல் பற்றித்தான்.

சந்தோசம் 'அன்று பெய்த மழை'யில் படத்தில் தனது நடிப்புத் திறமையை பளிச் பண்ணியது.

## கிடைத்த முத்தம்

இந்தித் திரையுலகில் அமிதாப்பச்சனுக்கு பின்னர் ரசிகைகள் அதிகமுள்ள நடிகர் ஷாருக்கான். சமீபத்தில் நட்சத்திர நிகழ்ச்சிக்காக இலண்டன் போன ஷாருக்கானை அங்குள்ள ரசிகைகள் முத்தம் கொடுத்து மூச்சுத் திணற வைத்துவிட்டார்கள். அக்ஷய் குமாரும் போயிருந்தாராம். அவருக்கும் கிடைத்ததாம். வாங்கிக் கொண்டு திருப்தியாக திரும்பியிருக்கிறார்கள்.


அமீர்கான்



## ...ளத்தில் தீபாவளி படங்கள்!

...தமிழ்நாட்டில் ரஜனி ரசிகர்களுக்கு மட்டும்தான் ...ம். 'பாட்ஷா' பொங்கலுக்குத்தானே வருகிறது. ...வெளியாகிய படங்களில் சில் 'நம்மவர்' (கமல்-கௌதமி) ...த்யராஜ்-ராதிகா-ஊர்வசி) 'பெரிய மருது' (விஜயகாந்த்- ...ல்லிக்கட்டுக்காளை' (பிரபு-கனகா) 'மணி-ரத்னம்' ...ஆனந்தபாபு-மோகனா-சாந்தினி) 'நாட்டாமை' (சரத்குமார்- ...' (ஜெயராம்-வினிதா) 'பவித்ரா' (நாசர்-ராதிகா) 'தாய் ...-சொர்ணா) 'கருத்தம்மா' (ராஜா-ரஞ்சனி)

## கமல்ஜோடி கோவை சரளா

பாலுமகேந்திரா இயக்கும் கமலின் சொந்தப்படம் 'சதிலீலாவதி'. இப்படத்தில் கமலஹாசன் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். கமலின் ஜோடி யார் தெரியுமோ? கோவை சரளா. படத்தில் கதாநாயகன் ரமேஷ் அரவிந்த். ஜோடி கல்பனா. இவர் நடிகை ஊர்வசியின் அக்கா. ஏற்கனவே பாக்யராஜின் 'சின்னவீடு' படத்தில் நடித்தவர்.

கதை அனந்து, வசனம் கிரேசி மோகன், இசை-இளையராஜா.

## கிடைக்குமா ஆஸ்கார்?

ஹாலிவுட் இயக்குநர் ரிச்சர்ட் ஆட்டன்பரோவை மறக்கமுடியுமா 'காந்தி' படத்தை இயக்கியவரல்லவா? 'காந்தி' படத்தை இந்தியாவில் எடுத்துவிட்டு ஹாலிவுட்டுக்குப் பறந்த ரிச்சர்ட் மீண்டும் கம் பண்ணவிருக்கிறார் இந்தியாவுக்கு.

ஜான்சி ராணி அதாகப்பட்டது இந்திய சுதந்திரப் போராட்ட வீராங்கனையின் கதையை படமாக்கும் திட்டத்தோடு வந்திறங்கினார். விசயமறிந்த இந்திப் பட நடிகைகள் ரிச்சர்ட் பின்னால் அலைந்தனர். ஆனால் ஜான்சி ராணியாக நடிக்கும் அதிர்ஷ்டம் கிடைத்திருப்பது ஹேமாமாலினிக்குத்தான்.

'வுமன் ஒப் இந்தியா' என்ற பெயரில் படம் தயாராகிறது. ஹேமா மாலினி 'ஆஸ்கார்' விருது பெறும் கனவில் மூழ்கியிருக்கிறார். 'காந்தி' படத்தில் நடித்த பென் கிங்ஸ்லிக்கு 'ஆஸ்கார்' விருது கிடைத்தது தெரியும்தானே!



ஸ்ரீதேவி



## 'ரோஜா' தாராளம்

'சரிகமபதநி' படத்தில் ரோஜா கொடுத்த ஒத்துழைப்பை பார்த்திபன் இப்போதும் பாராட்டுகிறார். முழங்கால் தெரியும் காட்சி என்றால் ரோஜா அதற்கும் மேலே தெரியக்கூடிய உடை அணிந்து வந்து விடுவாராம். இப்படி ஒரு கதாநாயகி கிடைப்பது அபூர்வம் என்று சொல்லிச் சொல்லி புகழுகிறார். ஏன் என்றால் எண்ணெய் என்பது இதுதா ...ளாக்கும்.

பாரிசில் தயாராகிவரும் படம் 'முகத்தார் வீடு' இலங்கைக் கலைஞர்கள் அசத்தப்போகிறார்களாம். அசத்தப் போவதில் இது ஒரு கூட்டம். இலங்கையின் பிரபல வானொலிக் கலைஞராக விளங்கிய ஜேசுரத்தினம் அரிவாள் மீசையோடு தோன்றுகிறார்

கார்த்திக்
படம்-முத்துக்காளை

வினிதா
படம்-நிலா

## சிவாஜி–பாரதிராஜா கூட்டணி
## பிரபுக்கு அம்மா ராதிகா

சிவாஜி கணேசன் நடிக்க பாரதிராஜா இயக்கி சூப்பர் ஹிட்டான படம் 'முதல் மரியாதை'. இப்போது ஓய்வில் இருக்கும் சிங்கத்திற்கு மீண்டும் தீனிபோட விரும்புகிறார் பாரதிராஜா. 'பசும்பொன்' படத்தில் நடிக்க நடிப்புலக சிங்கத்திடம் சம்மதம் பெற்றுவிட்டார். அடுத்ததாக பிரபுவின் அம்மாவாக நடிக்க ராதிகாவை கேட்டிருக்கிறார். பிரபுவோடு கட்டிப்புரண்டு 'டூயட்' பாடி நடித்துவிட்டு இப்போது அம்மாவாக நடிப்பதா? ராதிகா யோசித்தார். பாரதிராஜா விடவில்லை. 'நான் கற்பனை பண்ணியுள்ள பாத்திரத்தில் நீ மட்டுமே நடிக்க முடியும். நடியம்மா நடி' என்று அன்புக் கட்டளையிட்டுவிட்டார். கட்டளையை ராதிகா மீறமுடியாமல் கன்றுண்டு விட்டாராம். ஆகவே இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் 'பசும்பொன்' படத்தில ராதிகா உண்டு உண்டு... உண்டு.



## அவதாரம்

தீபாவளிக்கு வரவிருந்த 'அவதாரம்' சற்றுத் தள்ளிப் போயிருக்கிறது. திருப்தியாக எடுத்து முடிக்க வேண்டும். அவசரப்படவேண்டாம் என்று சொல்லிவிட்டாராம் இயக்குநர் நாசர். எடுக்கப்பட்ட காட்சிகளைப் போட்டுப் பார்த்ததில் நாசருக்கு பூரண திருப்தியாம். 'அவதாரம்' திரைக்கு வந்தபின் நாசரை தயாரிப்பாளர்கள் துரத்தத் தொடங்கலாம். அவரை இயக்குநராகவே மாற்றினாலும் மாற்றிவிடுவார்கள்.

## மணிரத்னம் கூறுவது யாதெனில்...

"கமெராவுக்கு முன்னால் நடிப்பென்று வந்துவிட்டால் தனக்குரிய கதாபாத்திரத்தின் செயலை சரியாகச் செய்து முடித்து விடுவார் மோகன்லால். அவர் நடிப்பில் எந்த வகையிலும் மைனஸ் தெரியாது. அவர் நடித்த 'உணரு' என்ற மலையாளப் படத்தை இயக்கியபோது அவரது நடிப்புத் திறமையை நான் அறிய முடிந்தது. நமக்குக் கிடைத்த சிறந்த நடிகர் மோகன்லால். சண்டைக் காட்சிகளில் இருந்து காதல் காட்சி வரை அசத்தி விடுவார். மோகன்லாலும், மம்முட்டியும் ஒருவருக்கொருவர் வித்தியாசமான நடிகர்கள். மம்முட்டி தத்ரூபமான நடிப்பைத் தருபவர். மோகன்லால் இயல்பான நடிப்பைத் தருபவர். மோகன்லாலை வேறு நடிகருடன் ஒப்பிடுவோமானால் அவர் பிரெஞ்சு நடிகர் ஜெராட் தபர்தீவ்" என்று மனம் திறந்து கூறுகிறார் மணிரத்னம்.

## சூப்பர்ஹிட் ஆடியோ கசட்டுகள்

தற்போது விற்பனையில் முதல் பத்து இடங்களை பெற்றிருக்கும் ஆடியோ கசட்டுக்களின் விபரம்

| படத்தின் பெயர் | இசையமைப்பு |
|---|---|
| 1. காதலன் | ஏ.ஆர்.ரகுமான் |
| 2. கருத்தம்மா | ஏ.ஆர்.ரகுமான் |
| 3. வீரப்பதக்கம் | தேவா |
| 4. ஜல்லிக்கட்டுக்காளை | தேவா |
| 5. பெரிய மருது | இளையராஜா |
| 6. புதிய வாசல் | மாசா |
| 7. நாட்டாமை | சிற்பி |
| 8. துறைமுகம் | ஆதித்யன் |
| 9. புதிய மன்னர்கள் | ஏ.ஆர்.ரகுமான் |
| 10. வள்ளி வரப்போறா | கே.எஸ்.மணிஒளி |

## கிசு-கிசு நியூஸ்

### எட்டநில்

'வள்ளி' நாயகியை சுலபமாக யாரும் நெருங்க முடியாதாம். பாதுகாப்புக்கு கூடவே தந்தையும் வந்து கண்ணும் கருத்துமாக காத்து வருகிறார். நிருபர்கள் கூட நெருங்க முடியாது. பிரிய நாயகிக்கு வாய்ப்புக்கள் குறையவும் அதுதான் காரணமாம்.

### அதைவிட–இதே மேல்

ஆக்சன் கிங் வீட்டில் ரஞ்சித நடிகையால் முன்னர் கச முசா. அதன்பின் பம்பாய் இறக்குமதி நடிகை விடயத்தாலும் லடாய். ரஞ்சித நடிகையைவிட பம்பாய் இறக்குமதிதான் பிரச்சனை என்று 'கிங்' வீட்டரசி நினைத்திருக்கவேண்டும். அதனால் 'ரஞ்சித' நடிகையோடு நடிக்க அனுமதி கொடுத்து விட்டாராம்.

### கடன்தீர டும் டும்

கடன் அடைக்கும் வரை கல்யாணமா 'மூச்' என்கிறார் 'ரோஜா' நடிகை. அதிரடி படத்தில் பட்ட கடனைத்தான் சொல்லுகிறார்.

## பிரபு நடிக்கும் 'புரபசர்'

கமலஹாசனின் மனேஜர் தயாரிக்கும் புதிய படம் 'புரபசர்'. பிரபு இருவேடங்களில் நடிக்கிறார். கல்லூரி பேராசிரியராகவும், மாணவனாகவும் பிரபுவை நடிக்க வைக்க கதை உருவாக்கியிருக்கிறார்கள். ஒரு பிரபுவுக்கு ஜோடி குஷ்பு இன்னொரு ஜோடி ரஞ்சிதா. சுகன்யாவை போடலாம் என்று அணுகினார்களாம். அவர் 8 இலட்சம் தந்தால்தான் 'ஓ.கே.' என்றுவிட்டார். வெறுத்துப்போன தயாரிப்பாளர் ரஞ்சிதாவைப் பிடித்துவிட்டார்.

## கொம்பு கிடைத்தது

தமிழில் அநேகமாக நாம் மறந்துபோய்விட்ட பானுப்பிரியா இப்போது இந்திப் படவுலகை பற்றிப் பிடித்திருக்கிறார். ஏற்கனவே இரண்டு இந்திப் படங்களில் நடித்துள்ள பானுப்பிரியாவுக்கு இப்போது கிடைத்துள்ள வாய்ப்பு பெரியகொம்பாம்.

## ஆடியோ உரிமை 40 இலட்சம்!

சத்யராஜ் தற்போது நடித்துவரும் 'எங்கிருந்தோ வந்தான்' படத்தின் ஆடியோ கசட் உரிமை இந்தியப் பெறுமதிப்படி 40 இலட்சம் ரூபாவுக்கு விலை பேசப்படுகிறது.

ஆடியோ கசட் வெளியிடும் உரிமையைப் பெற பல நிறுவனங்கள் மத்தியில் போட்டா போட்டி நிலவுகிறது.

எல்லாவற்றுக்கும் காரணம் அந்த படத்திற்கு இசையமைத்திருப்பது பிரிந்துபோய் மீண்டும் இணைந்துள்ள இரட்டையர் எம்.எஸ்.விஸ்வநாதன்-ராமமூர்த்தி என்பதுதான். அதுதான் பாடல்களுக்கு ஏகப்பட்ட எதிர்பார்ப்பு!



நம்பியார்-ரோஜா
படம்-ராஜமுத்திரை





# பெண்ணால் முடியும் நம்பு!

## போர்க்களத்திலும் பெண்களின் காலடிகள்!

தமிழக முன்னாள் முதல்வர், கலைஞர் கருணாநிதியின் மகள் கனிமொழி. இப்போது இந்தியாவின் பிரபல ஆங்கில நாளேடான 'இந்து' ஆசிரியர் குழுவில் ஒருவர். அவர் 'வாசுகி' இதழில் எழுதிய கட்டுரை இது. கட்டுரையல்ல உறுதியுரை!

மலரா, முகமா? அல்லது நிலவோ நங்கை அவள் வதனம். **'காம்போடு சூடிய மலரின் கனம் தாளாமல் கொடி யிடை தவித்ததாம்'** என்று சங்கத்தமிழ் முதல் சமீபத்திய இலக்கியம் வரை பெண்ணை, ஏதோ தொட்டால்கூட வதங்கிப் போகும் அனிச்ச மலராய், ஒரு சோணியாய் வர்ணித்தே பழகி விட்டோம்.

பெண் என்றால் மென்மையானவள்! உழைக்கத் திராணியற்றவள் என்ற முத்திரை குத்தியே வளர்க்கப்படுபவர்கள் நாம். பெண்மையையும், உடல் மென்மை யையும் இணைத்துப் பேசுபவர்கள், இதை ஒன்றாகவே மாற்றிக்கொண்டு விட்டார்கள்.

ஆண் அசகாயசூரன், வீரன், வில்லை வளைப்பான், போர் புரிவான், கப்பல் விடுவான், பலவான், இந்த விஷயத்தில் பெண் அவன் எதிரில் கூட நிற்க முடியாது. இப்படி உடல் வலிமையின் அடிப்படையில் பெண்மையைக் குறைத்தே மதிப்பிட்டவர்கள், நமது கிராமப்புறங்க ளில் உள்ள உழைத்து உழைத்து ஆணுக்கு நிகராய் உரமேறிய பெண்களை கூட தண்ணீரா, தலையில் இரண்டு, இடுப்பில் இரண்டு என்று தண்ணீர் குடங்களை சுமந்தபடி, ஐந்தாறு மைல்கள் தினம் நடந்து வரும் பெண்களை, சுள்ளிக்கட்டு சுமப்பதா? புல்லுக்கட்டு தூக்குவதா? விறகு வெட்டுவதா? எதுவாகிலும் ஆணுக்கு நிகராக உழைக்க வல்லவர்களை மறந்து விடுகி றார்கள். கிராமப் புறங்களுக்குப் போவா னேன்? பட்டணத்து வீதிகளில் எழும்பும் அடுக்கு மாடிகளில் கட்டிட வேலை செய்யும் பெண்கள், சக தொழிலாளிகளைவிட, எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல. ஆனால் காலம் முழுவதையும் இவர்கள் கல் சுமப்பவர்களாக, சிமெண்டு சுமப்பவர்களா கவே கழிக்க வேண்டியதாயிருக்கிறது. அவர் கள் பெரிய ஆளாகவோ, மேஸ்திரியாகவோ மாறுவதுகூட ஜீரணிக்க முடியாதது.

என்னதான் அவள் உழைத்தாலும், பெண் ஒரு ஆணின் சொற்படி, அவனுக்கு கீழ்ப்படிந்து, நடப்பவளாக இருக்கவேண் டுமே தவிர, ஒரு பெண் அதிகாரம் செய்யும் நிலையில், ஒரு பொறுப்பான நிர்வாகம் செய்யும் இடத்தில் உயர்த்திவைக்கப்படுவது இன்னும் பலரால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றுதான்.

சொந்த தொழிற்சாலைகளிலும், நிர்வாகங்களிலும் பெண்கள் உயர்ந்த பொறுப்பில் இருக்கிறார்கள். இன்று பத்திரிகை, மருத்துவம், கம்பியூட்டர் என்று பல துறைகளில் நுழைந்து பெண்கள் அடுப்படிக்கு மட்டுமே ஏற்றவர்கள் என்ற எண்ணத்தை தகர்த்தெறிந்து கொண்டிருக் கிறார்கள்.

ஆனாலும், உடல் உழைப்பு, அறிவு, பொறுப்பு என்ற மூன்றும் சேர்ந்து தேவைப் படும் துறைகளில் பெண் ஏற்றுக்கொள்ளப் படுவது அரிது தான். கட்டிடத் தொழிலில் ஒரு பெண் எப்படி ஒரு மேஸ்திரியாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாளோ, அதே போல் அத்தொழிலில் ஒரு பெண் சிவில் எஞ்சினியர் என்று ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாள். கட்டிடத்திற்கான வரைபடத்தை ஒரு பெண் வரையலாம். அதற்கு ஆகப் போகும் செலவுகளைக் கணிக்கலாம், கட்டி முடிந்தபின் அதை அழகுபடுத்தலாம். ஆனால் ஒரு பெண் அந்தக் கட்டிடத்தைக் கட்டும் நிர்வாகப் பணியில், மேற்பார்வைப் பணியில் ஒரு பொறியியல் வல்லுநராக ஏற்றுக்கொள்ளப் படமாட்டார்.





இதற்குச் சொல்லப்படும் காரணங்கள், ஆண் தொழிலாளர்கள் ஒரு பெண்ணிட மிருந்து கட்டளைகள் பெறுவதை விரும்ப மாட்டார்கள். அத்தோடு இதுபோல் உடலை வருத்தி செய்ய வேண்டிய வேலைகளுக்கு மென்மையான பெண்ணினம் ஒத்து படாது. இதுபோலும் வார்த்தையினால் மட்டுமல்லா மல், இப்படிப்பட்ட படிப்புகளுக்கு முடிந்த வரை பெண்களைத் தேர்வு செய்வதை தவிர்க்கவும் செய்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலையின்தான், ஒரு விடியலின் அறிகுறியாக, இந்திய விமானப் படை தெரிகிறது.

செப்டம்பர் மாதம் இரண்டாம் திகதி இருபத்தி இரண்டு வயதான, 'அரிதாகவுர் டிஒல்' இந்திய விமானப் படையின் முதல் பெண்மணியாக தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கிறார்.

1992 ஆம் ஆண்டு, இந்திய விமானப் படையின் எட்டு இடங்களுக்காக விண்ணப் பித்த, இருபது ஆயிரம் பெண்களில் இருந்து தேர்ந்தெடுத்து பயிற்றுவித்து, இன்று பெருமையுடன் ஏற்றுக்கொண்ட ஏழு பெண் விமானிகள்தான் இந்தியாவின் முதல் விமானப்படை விமானிகள்.

போர்க்களம், ஆணின் தனி உரிமை என்பது போய், அங்கேயும் பெண் சரிநிகர் சமானமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆண்க ளோடு ஒன்றாக கம்பீரமாய் நின்று நாட்டுக்காய் போராடுவதில் கூட சளைத்த வர்கள் அல்ல என்று நிரூபிக்க சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த ஏழு விமானிகளும், தங்களது அதிகாரிகளிடம் எந்தவித சலுகையும் எதிர்பார்க்காமல், ஆண் போர்ப்படை விமானிகளுக்கு நிகராய் பயிற்றுவிக்கப் பட்டவர்கள். இவர்கள் யாரும் திறமைகளில் சளைத்தவர்கள் அல்ல, என்று உயர் அதிகாரிகளாலேயே சான்றிதழ் வழங்கப் பட்டவர்கள்.

தன் ஆணாதிக்க குணங்களால், பலமுறை உலகத்தின் பார்வையில் தலை குனிய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்ட இந்தியா, இன்று பல முன்னேறிய நாடுகள் கூட ஏற்றுக்கொள்ளத் தயங்கும் பெண் படைவீரர்களை ஏற்று தலை நிமிர்ந் திருக்கிறது.

லேடீஸ் ஸ்பெசல்

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது—சுகந்தினி

### கோழி குருமா

**தேவையான பொருட்கள்:**

கோழி இறைச்சி - 1/2 கிலோ
வெங்காயம் - 100 கிராம்
தக்காளி - 100 கிராம்
இஞ்சி - சிறியதுண்டு
பூண்டு- 2
கொத்தமல்லி தழை - ஒரு சிறிய கட்டு
ஏலக்காய் - 5
கறுவா -2 அங்குலத் துண்டு
மிளகு - ஒரு தேக்கரண்டி
பச்சைமிளகாய் - 10
தேங்காய்(துருவியது) - ஒன்று

**செய்முறை:**

முதலில் கோழி இறைச்சியை சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் கொண்டு தண்ணீரில் கழுவி சுத்தம் செய்யவும். பூண்டு, கொத்த மல்லித் தழை, இஞ்சி, பச்சை மிளகாய் ஆகியவற்றை அம்மியில் அரைத்து எடுக்கவும்.

அதுபோல தேங்காய்த் துருவலையும் அரைத்துக்கொள்ளவும். வெங்காயத்தை நறுக்கி எண்ணெய் விட்டு வதக்கி எடுக்கவும்.

பிறகு அதில் அரைத்த கலவையைச் சேர்த்து பின்னர் கோழி இறைச்சியுடன் சேர்த்து சுண்டும்வரை கிளறிவிடவும். நான்காக நறுக்கிய தக்காளியைப் போட்டு, நான்கு டம்ளர் தண்ணீர் விட்டு வேகவிடவும்.

பின்னர் அதில் கறுவா, மிளகு, ஏலக்காய் ஆகியவற்றைப் பொடி செய்து போட்டு, அரைத்த தேங்காயையும் போடவும். சிறிது கொதிக்கவிட்டு பின்னர் இறக்கி விடலாம். சோறு, இட்லி, தோசை, சப்பாத்தி, இடியப்பம்போன்றவற்றுடன் சேர்த்துக்கொள்ள சுவையாக இருக்கும்.

## நீங்களும் தைத்து ப் பார்க்கலாம்

12 வயதுப் பெண்பிள்ளைகளுக்கான **ஜயனார் சல்வார் காற்சட்டை**

எஸ்-எஸ்

**எடுக்கப்படவேண்டிய அளவுகள்:**

1 மீற்றர் அளவிலான துணி - 2 துண்டுகள்

**வெட்டும்முறை:**


மேற்குறிப்பிட்ட அளவிலான சதுரத் துணியினை எடுத்து ABCD குறித்துக் கொள்ளவும். குறித்ததும் BC எதிர் மூலை கள் இரண்டும் சேரும் வண்ணம் மடிக்கவும். மடித்த அப்பகுதிகளில் முக்கோண வடிவம் தோன்றுகிறதல்லவா?

அவ்வடிவத்தை (படம் 2ன் படி) Aயிலிருந்து 5 1/2 அங்குலம் உள்நோக்கி Fஎனக் குறித்தும் Fலிருந்து 8 அங்குலம் கீழ்பதிவாக சரிவாக வரைந்து E எனக் குறிக்கவும். குறித்தபின்னர் படம் 2ன் வடிவம் தோன்றினால் வெட்டவும். இவ்வாறு வெட்டப்பட்டபின்னர் வரும் கழிவு துணி யினை எடுத்து வைக்கவும். பிள்ளையின் நாரிப் பகுதியை அளந்துகொள்ளவும்.

உ+ம்: பிள்ளையின் நாரி 24 அங்குல மாயின் மேலும் 6 அங்குலம் கூடுதலாக எடுக்கவும். மொத்தம் 30 அங்குலமாகும். அக்கழிவுத் துணியில் நாரிப் பகுதிக்கேற்ப நேர்த்துண்டினை வெட்டி எடுக்கவும்.


**பொருத்தும் முறை:**

முதலில் தனித்தனியே E,D பகுதியை இணைக்கவும். Dப்பகுதியிலிருந்து மேலே 4 அங்குலம் விட்டுப் பொருத்தவும். அதன் பின் படம் 2ல் புள்ளியிடப்பட்ட பகுதியை தைத்து வெளிப்புறமாக திருப்பிக் கொள்ள வும். இதனையடுத்து E,F பகுதியினை அடுத்த கால் பகுதியுடன் பொருத்திக் கொள்ளவும். இப்போ இருகால் பகுதிகளும் அமைந்துவிட்டனதானே. அவ்வாறு அமைத்த பின்னர் அம் மேற்பகுதிகளில் (1/2 அங்குலம்) சிறுசிறு சுருக்கிட்டு நாரிப்பகுதிக்கென வெட்டப்பட்ட நேர்த் துணியுடன் இணைக் கவும்.



படம்.1

இவ்வாறு இணைத்த பின்னர் மேற்பகுதிக்கு மடிப் பிட்டு எலாஸ்ரிக் நாடா போட்டுக்கொள்ளவும்.



படம்.2

**குறிப்பு:** ஒரு பக்கத்திற்கு மூன்று சுருக்கிடுதல் போதுமானது.

### வீட்டில் நூலகம்

சிலருக்கு வீட்டிலேயே மினி லைப்ரரி வைக்க ரொம்ப ஆசையாக இருக்கும். அப்படி வைக்க ஆசைப்படுகிறவர்கள் என்ன செய்யணும் தெரியுமா? புத்தகங்களை வகை வகையான கலர்க் காகிதங்களில் அட்டைபோட்டு ஒழுங்காக ஷெல்பில் அடுக்க வேண்டும். இப்படி செய்துபாருங்கள். இப்போ உங்கள் லைப்ரரி பார்க்க 'அட்ராக்டிவ்'வாக இருக்கா?

## பட்டுச்சேலை எப்படி எடுக்கலாம்?

திருமணமா அல்லது வீட்டில் விசேஷமா? கடன்பட்டாவது பட்டுச்சேலை வாங்கிக் கட்டினால்தான் திருப்தி ஏற்படும். அந்த அளவிற்குக் கவர்ந்துள்ளது பட்டு. பட்டுச்சேலை வாங்கும்போது பார்த்து வாங்க வேண்டும். இல்லையென்றால் ஏமாறத்தான் வேண்டும்.



பட்டுச்சேலை எடுக்கப்படும்போது பொறுமை வேண்டும். ஒருநாள் இரண்டு நாளானாலும் பறவாயில்லை. உடலுக்கேற்ற சேலையை தெரிவு செய்யவேண்டும்.

பட்டு அழுத்தம் நிறைந்ததாக இருந்தால் தான் அதிக காலம் பாவிக்கும். தூக்கிப் பார்த்தால் சேலை கனமாக இருக்க வேண்டும். எடை குறைவாக இருக்கும் சேலை அதிகநாள் உழைக்காது.

சேலையில் சரிகை அதிகம் இருந்தால் விலையும் அதிகமாக இருக்கும். போலி சரிகையினால் செய்யப்பட்ட சேலையின் விலை குறைவாக இருக்கும். ஆனால் விரைவில் சேலை கறுத்துவிடும். காஞ்சிபுரம் பட்டு என்றால் சரிகை சுத்தமாக இருக்கும். அத்துடன் காஞ்சிபுரம் பட்டு மினுமினுப்பாக வும் இருக்கும்.

### வீட்டுக் குறிப்பு

சாப்பிடும் தட்டுகளில் உள்ள முட்டை கறைகளை நீக்க வேண்டுமா? ஒரு துணியில் சிறிதளவு உப்புத் தூளைத் தொட்டு தட்டுகளை அழுந்த துடைக்கவும். பிறகு வெந்நீரில் கழுவி விடலாம். தட்டுகளில் உள்ள கறை மறைந்து பளபளப்பாகி விடும்.

## நாவல் தொடர்......

## வரும் வாரம் முதல்

# 'தாய்'

மக்சீம் கார்க்கி

காதல்-வீரம்-சோகம்
மனிதாபிமான ஈரம்
போர்க்குணம்

ரஷ்ய எழுத்தாளர்களில் புரட்சியின் விதைகளைத் தூவிய பேனாவுக்கு சொந்தக்காரர் அமரர் மக்சீம் கார்க்கி! அவரது இறவா புகழ் நாவல்களில் முதன்மையானது-முக்கியமானது

'தாய்'

-அந்த நாவல்தான்- பூமியெங்கும் பல புரட்சிக்காரர்களுக்கு புனித வேதமாகவிருந்தது.

-இன்றும் என்றும்- இளமையான எழுத்துக்கள் கார்க்கியினுடையவை. முரசு-தன் வாசகர்களுக்கு வரும் வாரம் முதல் அந்த நாவலை தொடராக தரவிருக்கிறது.

ஒரு வாரத்தைகூட தவறவிடாதீர்கள்.

'தாய்' உங்களிடம் புதிய உணர்வுகளை உற்பத்தியாக்கப்போவது உறுதி!

அடுத்த வாரம் முதல்
அற்புத நாவல்
தொடராக...



## முரசின் பரிசு

யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

* 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

முரசின் பரிசு
கூப்பன் இல 16
உண்மை—நேர்மை—
வெளிப்படைத்தன்மை

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.
* நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
* மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
* இன்றுமுதல் கூப்பன்களை சேகரிக்க ஆரம்பியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தேன் கிண்ணம்

## (என்) காதல்

பனித்துளி
மேல்
பொறிக்கப்பட்ட
பொன் எழுத்து!


குறிஞ்சிப் பூவில்
நெறிஞ்சிமுள்
வைத்து
நேசிக்கப்பட்ட
நாலகாரம்!

கதிரியக்கமில்லாத
கிரகத்தில்
கட்டி,
குட்டிச்சவரான
தாஜ்மஹால்!

கற்பனையின்
கற்பவறைக்குள்
காவாவதியாகி
கருகிப்போன
கரு!

வானவிற்களின்
வர்ணத்திற்கு
முற்பட்ட
மில்லி செக்கனில்
ஏற்பட்ட–
மிலேச்சங்களின்
எச்சங்கள்!

பாணகமுவ அஸ்-முஸ்தாக்
குருநாகல்.



## கற்பிழந்த பூக்கள்!

மனச்சிறகை விரித்து
பட்டாம் பூச்சியாய்
அந்த நள்ளிரவில்
நந்தவனத்துள்
கால் பதித்தேன்.

மேக அவலங்கள்
இல்லா வானிலிருந்து
நட்சத்திரங்களே
மழையானதுபோல்
எங்கிருந்தோ
இத்தனை மின்மினிகள்!

மெய்விளக்கோடு
மரங்களைச் சுற்றி
மொட்டுக்குள் உறங்கும்
பூக்களுக்கென்று
பறக்கும் காவலர்களோ?

மலர் பெட்டகத்துள்
தேனாபரணங்கள்;
கொள்ளையிட
வண்டுத் திருடர்கள்
வந்து விடுவார்களென்று
இரவு ரோந்து
நடக்கிறது.

இந்தக் காவலர்களை
கண்காணித்ததில்
நித்திரை என்னை
கவனிக்காமல்
விட்டு விட்டது!

கிழக்கு வானின்
புன்னகைப்பில்
கடமை முடிந்து
அவர்கள் போக,
விழித்துக்கொண்ட
பூக்களின் கண்களில்
கண்ணீர் கொட்டுகிறதே...

ஓ_ இரவுக் காவலர்களே
கோவலர்களாகி
விட்டனரோ...
புயலாய் கிளம்பிவரும்
வண்டினத்தின்
படையெடுப்பைப் பார்த்தால்
அப்படித்தான் தெரிகிறது!

மெய்யன் நட்ராஜ்
பூண்டுலோயா.

## காத்திருப்பேன்...!

எதிர்காலத்தை
மறந்து
நிகழ்காலத்தை
கவிதைகளாக்கி
உனக்காக என்றும்....

–•–

உயிரினோரம்
தினசரி
ஆலோலம் இசைக்கும்
உன்–நினைவுகள்
கனவுகளாக்கி
மாதங்களை விழுங்கி,

–•–

புயல்வரும்
தெருவில் –நீ
நடந்து வருகையில்
'செக்கிங் போஸ்ற்றில்'
கியூவில் நின்று
உணர்வுகள் உறைந்து,

–•–

குருதியின் வாடையை
கந்தகத்தின் நாற்றமதை
நிதமும் முகர்ந்து
மணநுகர்ச்சி கெட்டு
பதுங்கு குழியினுள்
ஒதுங்கியிருந்து,

–•–

சமாதானக் கீற்றுபோல்
கண்சிமிட்டும் நேரமதில்
புள்ளியாய்த் தேயும்
உன்னைப் பார்த்து
நிலவுபோல்
தேய்ந்து– வளர்ந்து–
ஆத்மா உடலில்
ஒட்டியிருக்கும் வரைக்கும்
காத்திருப்பேன்!

–•–

ஆரையம்பதி மனோ.

## நிலவின் கனவில்

கோயில் சந்நதி போய் நின்று
குங்கும திலகம் நீ தந்தாய்
வாழ்வில் சேர்வோம் நாம் என்றாய்
வாழ்வை பிரித்து நீ நின்றாய்

காதல் என்பது பொய் தானா
கனவுகள் யாவும் சதி தானா?
திசையை மாற்றிய காரணமே
உன் திருமண அழைப்பில் மாற்றமாம்
காலத்தின் மெய் எனக் கலந்தவளே
கண்ணீர் துளிகள் உனக்கு எதற்கு
உன் கல்லறை மீது பூ எதற்கு
காலம் உனக்கு பதில் கூறும்
காதல் உலகம் கவி பாடும்.

தெ.லோஜனா-கொழும்பு-15.



## நுளம்பு

நோய் கொடுக்க ஊசிபோடும்
நூதனமான வைத்தியர்.
சாக்கடை கலாசாலையின்
திறமைமிக்க பட்டதாரி!

ராகில் ஏ. காசிம்
மன்னார்.

## வேண்டா....ம்!

வானம்
வேண்டாம் அங்கு
வாசல் இல்லை!

••

மேகம்
வேண்டாம் அங்கு
மெத்தை இல்லை!

••

மின்னல்
வேண்டாம் அங்கு
யன்னல் இல்லை!

••

வானவில்
வேண்டாம் அங்கு
வாத்தியார் இல்லை!

••

பௌர்ணமி
வேண்டாம் அங்கு
மகளிர் இல்லை!

••

நிலவு
வேண்டாம் அங்கு
குளிரும்!


••

சூரியன்
வேண்டாம் அங்கு
சுடும்!

••

நட்சத்திரம்
வேண்டாம் அது
உதிரும்!

ஷஹிர்ஷா தாஸிம்
தர்கா நகர்.



## காதல் நாட்டு ரோசக்காரி...!

நல்லாப் பார்...
உன்
புன்சிரிப்பால்
அத்துப்போன இதயத்தை...

••

உன்
விழிகளை
கையெடுத்துக் கும்பிடும்
இதய நரம்புகளையும்
பார்...

••

என் மனசுக்குள்
கிழிந்துகிடக்கும்
உன்
கப்டான் துண்டுகளையும்
பார்....

••

எனக்குள்
பேசாமலிருந்து
என்னையே பைத்தியமாக்கும்
உன்னோடு
வருகிற கோபத்துக்கு....

••

கட்டிப் பிடித்து
கொஞ்ச வேண்டும்
போலிருக்கு

••

நீ....

••

தாவணி நூல்களை
நகங்களால்
சப்பிச்சப்பி
என்னோடு பேசியவை...

••

அது
மௌனம்..

••

கனவுகளைத் தூக்கி
என்
கட்டிலில் போட்டுவிட்டு
நீ மட்டும்
எடுப்பாய் நட...

••

என் தூக்கம்
சிரமப்படும்போது
சிரி..

••

பொத்துவில் பௌர்ணமி நிலா (பைசல்)



## விழிகள் தூங்குமா?

1. சிறைக்குள் ளிருக்கும் அத்தானுக் கோர்
செய்தி தருகின்றேன்! – மனக்
குறையைச் சொல்லி கடிதம் தன்னை
கோதை வரைகின்றேன்!

2. பிழைகள் செய்யா உங்களை ஏனோ,
பிடித்து அடித்தார்கள்! – என்
தலையின் விதியா கொடிய சிறையில்,
தள்ளி அடைத்தார்கள்!

3. திகதி மாதம் ஆண்டுகள் போயும்
திரும்பி வரவில்லை! – இறை
அகதி யென்றே வாழ்ந்திடும் எனக்கோர்
ஆறுதல் தரவில்லை!

4. பிள்ளைகளோடு தொல்லைகள் கண்டே,
பேதை துடிக்கின்றேன்! – படும்
அல்லல்கள் தன்னை நிதமும் எண்ணி
அழுதே முடிக்கின்றேன்!

5. உத்தமனாக வாழ்ந்தீர் அத்தான்
உள்ளம் தாங்கிடுமா? –எனை
நித்தமும் உங்கள் நினைவில் இணைத்தீர்
நயனம் தூங்கிடுமா?

அ.கௌரிதாசன்
ஆலங்கேணி கிழக்கு.

# இரு கணவன் ஒரு மனைவி!

## ருசிகரத் தகவல்

ஒரு ஆணுக்கு, ஒரு பெண் மீது காதல் வந்தால் என்ன செய்வான்? இதென்ன கேள்வி? "அவளுக்கும் அவனைப் பிடித்திருந்தால் இருவரும் கல்யாணம் செய்துகொள்வார்கள்" என்பீர்கள். சரி, ஆனால் ஒரு பெண்ணுக்கு இரண்டு ஆண்கள் மீது காதல் வந்து, அந்த இரண்டு ஆண்களுமே அவளை விரும்பினால்.... "இது நடக்கக் கூடிய காரியமா?" என்கிறீர்களா? இதோ......



கேரளாவில் 'உடாதுரா' என்னுமிடத்தில் ஒரு பெண் ஒரே சமயத்தில் இரு கணவர்களுடன் வாழ்கிறாள். ஜானகி கோவிந்தராமன் என்ற இந்த பெண் இரட்டையரைத் தன் கணவர்களாக்கிக் கொண்டு வாழ்கிறாள்.

வேறொன்றுமில்லை. இரட்டையர் இருவர் மீதும் ஜானகிக்குக் காதல் வந்துவிட்டது. அதேபோல் இரட்டையர்களும் ஒருத்தியையே விரும்ப, டும்...டும்... சுப (மங்கள)மாக முடிந்தது. கழுத்தில் இரண்டு தாலிகள்.

ஜானகிக்கு திருமணத்தின்போது 12 வயதுதான். இப்போது 66 வயது. இவள் கணவர்களின் பெயர்கள் ரர்மன்-கோவிந்தன். இருவருக்கும் இப்போது வயது 81.

54 ஆண்டுகால தாம்பத்திய வாழ்வின் அடையாளமாய் ஒன்பது குழந்தைகள். ஆனால் ஒன்பது குழந்தைகளுக்கும் தமது அப்பா ராமனா அல்லது கோவிந்தனா என்பது தெரியாது. அது பிரம்மனுக்கு மட்டுமே தெரிந்த இரகசியம்.

ராமனும், கோவிந்தனும் நாட்டு மருத்துவத் தொழில் செய்கின்றனர். இந்த இரட்டையர் ஒரே மாதிரி ஆடை, அணிகள் அணிகின்றனர். நோய் வந்தாலும் ஒரே மாதிரியான நோய் தான் இருவரையும் தாக்குகிறதாம். வலியும்கூட.

1904ல் ராமன், கோவிந்தனுக்கு 30 நிமிடத்திற்கு முன்னதாக பிறந்தாராம். இவர்களின் திருமணம் எப்படி நடந்தது எனத் தெரியுமா? கண்களைச் சுருக்கிக் கொண்டே ஜானகி நாணத்தோடு கூறுகிறார்.

ஒரே மாலையை ஆளுக்கொரு பக்கம் பிடித்து..... ஜானகியின் கழுத்தில் ஒரே சமயத்தில் போட, அதேபோல் தானும் தன் கணவர்களின் கழுத்தில் ஒரே சமயத்தில் ஒரே மாலையைப் போட்டதாகக் கூறுகிறார் ஜானகி, சிரித்துக் கொண்டே.

இத்தனை வருட தாம்பத்தியத்தில் இரு கணவர்களும் தன்னை ஒரு முறை கூட அடித்ததேயில்லை என பெருமையுடன் கூறுகிறார் ஜானகி.

ஜானகிக்கு ஒரேஒரு ஆசை; "இறக்கும்போது தானும் இரு கணவர்களும் ஒரே நேரத்தில் இறக்கவேண்டும்" என்பதுதான் அந்த ஆசை!

# இந்த வாரம் உங்கள் பலன்

(20.11.94 முதல் 26.11.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

விருட்சிகம் - சூரியன், வியாழன்
கும்பம் - சனி
மேடம் - கேது
கர்க்கடகம் - செவ்வாய்
துலாம் - வெள்ளி, இராகு, புதன்

சந்திரன்- இடபம், மிதுனம், கர்க்கடகம் ஆகிய இராசிகளில் சஞ்சாரம் செய்வார்.

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் மந்தம், மனக்கவலை. | காலை 6 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தொழில் மேன்மை, உயர்ந்த வாழ்க்கை. | காலை 7 மணி |
| புதன்- | புதிய முயற்சி, மனக்கவலை நீங்கும். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், எதிர்பார்த்த நன்மை. | காலை 9 மணி |
| வெள்ளி- | பணவரவு, காரியானுகூலம். | காலை 7 மணி |
| சனி- | பயணத்தால் கெடுதி, மனப்போராட்டம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | உறவினர் பகை, வீண் செலவு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | முயற்சி கெடுதல், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| புதன்- | பெரியோர் பகை, பயனற்ற செயல். | காலை 6 மணி |
| வியாழன்- | பொருள் வரவு, மனப்பயம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், புதிய நம்பிக்கை. | காலை 7 மணி |
| சனி- | மனக்குறை நீங்கும், எடுத்த காரியம் வெற்றி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் நட்டம், மனக்கவலை. | பகல் 12 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், கடன் சுமை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | உறவினர் உதவி, தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| புதன்- | எண்ணங்கள் நிறைவேறல், கௌரவம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 6 மணி |
| வெள்ளி- | தெய்வ நம்பிக்கை, மனத்தைரியம். | பகல் 12 மணி |
| சனி- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, முயற்சி மேன்மை. | காலை 6 மணி |
| திங்கள்- | உறவினர் நட்பு, கடன் பயம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | செய்தொழில் விருத்தி, பண வரவு. | காலை 6 மணி |
| புதன்- | முயற்சி தடை, மனக்கவலை. | காலை 7 மணி |
| வியாழன்- | வீண் குறை கேட்டல், எதிர்பார்த்த நன்மை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | காரிய சித்தி, துயர் நீங்கும். | பி.ப. 2 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், உயர்ந்த நோக்கம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | உறவினர் நட்பு, குடும்ப சுகம். | பகல் 12 மணி |
| புதன்- | வீண் மனஸ்தாபம், பயனற்ற செயல். | காலை 6 மணி |
| வியாழன்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | கடன் தொல்லை, மனக் கவலை. | பி.ப. 2 மணி |
| சனி- | உறவினர் உதவி, கஷ்டம் தீரல். | காலை 7 மணி |

அதிஷ்_நாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| திங்கள்- | மனப்போராட்டம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | தொழில் மந்தம், எதிர்பார்த்த நன்மை. | பி.ப. 1 மணி |
| புதன்- | பெரியோர் பகை, அரச விரோதம். | காலை 7 மணி |
| வியாழன்- | மனமகிழ்ச்சி, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | உயர்ந்த நட்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| சனி- | பணவரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 7

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | காலை 6 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, மனக் கவலை நீங்கும். | காலை 7 மணி |
| செவ்வாய்- | துயர்நீங்கும், பொருள் வரவு. | பகல் 12 மணி |
| புதன்- | புதிய முயற்சி, குடும்ப சுகம். | காலை 7 மணி |
| வியாழன்- | மனமகிழ்ச்சி, எதிர்பார்த்த நன்மை. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | குடும்ப சுகம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, உயர்ந்த நட்பு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- | உறவினர் பகை, மனக் கவலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | செலவு மிகுதி, பெரியோர் நட்பு. | காலை 6 மணி |
| புதன்- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| வியாழன்- | மனக்குறை நீங்கும், கௌரவம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | கடன் சுமை, வெளியிட வாழ்க்கை. | பகல் 12 மணி |
| சனி- | புதிய முயற்சி, தொழில் சிறப்பு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-8

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| திங்கள்- | காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, புதிய முயற்சி. | பி.ப. 1 மணி |
| புதன்- | மனத் தைரியம், கௌரவ நிலை. | பகல் 12 மணி |
| வியாழன்- | வீண் குறை கேட்டல், தொழில் கேடு. | காலை 8 மணி |
| வெள்ளி- | செய்தொழில் இலாபம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| சனி- | உயர்ந்த எண்ணம், ஆடம்பரச் செலவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -3

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், மனக்கவலை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | தொழில் சிறப்பு, புதிய நம்பிக்கை. | பகல் 12 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | வெளியிட வாழ்க்கை, கடன் சுமை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | இடமாற்றம், புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| சனி- | மனத் தைரியம், உயர்ந்த் நிலை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -2

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் உயர்ச்சி, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | பயனுள்ள செயல், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், பொருள் கஷ்டம். | காலை 9 மணி |
| புதன்- | முயற்சி பலிதம், உறவினரால் நன்மை. | பகல் 12 மணி |
| வியாழன்- | வீண்குறை கேட்டல், தொழில் விருத்தி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | குடும்ப சுகம், கௌரவம். | காலை 7 மணி |
| சனி- | துயர் நீங்கும், காரியானுகூலம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5


### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், கௌரவம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | உறவினர் நன்மை, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- | தூர இடப் பயணம், மனக் கவலை. | காலை 7 மணி |
| வியாழன்- | உயர்ந்த நட்பு, பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | முயற்சி பலிதம், கடன் தொல்லை நீங்கும். | காலை 6 மணி |
| சனி- | பயனற்ற செயல், பொருள் நட்டம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 1





## முயற்சி கொண்டு வாழுவோம்

தாகங்கொண்ட காக்கையொன்று
தண்ணீர் தேடி அலைந்ததாம்
வேகமாக பறக்கும்போது
விரைவில் குடமும் கண்டதாம்.

குடத்தின் அருகில் சென்று மே
குனிந்து தலையைப்போட்டதாம்
குடத்தின் அடியில் கொஞ்சமாய்
நீரும் இருக்கக் கண்டதாம்

கற்கள் பொறு க்கிப் போடவே
காகம் சித்தம் கொண்டதாம்
கற்கள் நீருள் விழுந்ததால்
நீரும் மேலே வந்ததாம்.

முயற்சி செய்து பார்த்ததால்
காகம் தாகம் தீர்ந்ததே
முயற்சி கொண்டு வாழுவோம்
சிறந்த பயனு ம் சேர்ந்திடும்.

-பசறையூர் மல்லிகா பத்மநாதன்-

"அன்பென்று கொட்டு முரசே! - அதில்
ஆக்கமுண்டாமென்று கொட்டு;
துன்பங்கள் யாவுமே போகும்-வெறுஞ்
சூதப் பிரிவுகள் போனால்."

-மகாகவி பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

## யோகியின் சிகிச்சை

வெகுகாலத்திற்கு முன் துர்க்காபுரி என்ற நாட்டை குலசேகரன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் ஒரு கேளிக்கை பிரியன். நாட்டை மந்திரிகளின் பொறுப்பில் விட்டு விட்டு, நன்கு சாப்பிட்டுக்கொண்டும், இசை, நாடகம், நாட்டியம் போன்ற கேளிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டும் இன்பமாகப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தான்.

அவன் வேறு எந்த வேலையும் செய்யாமல் இருந்த இடத்தில் இருந்து கொண்டு ஆடம்பர வாழ்வை அனுபவித்துக் கொண்டிருந்ததால் அவன் உடல் பருத்து விட்டது. இதனால் அவனுக்குப் பல விதங்களிலும் சிரமமாக இருந்தது.

தன் உடல் இப்படி குண்டாகி விட்டதே என்று கவலைப்பட்டான் குலசேகரன். மெலிந்த உடல் உள்ளவர்களைப் பார்க்கும் போதெல்லாம் அவனுக்குப் பொறாமை ஏற்பட்டது. முடிவாகத் தன் உடலை மெலிய வைப்பவருக்கு இந்த நாட்டில் பாதியைத் தருவதாகவும், மெலிய வைக்கும் முயற்சி பயனளிக்காவிட்டால் அவருக்கு மரண தண்டனை என்றும் அறிவிப்புச் செய்தான்.

தண்டனைக்குப் பயந்து எவரும் குலசேகரனை மெலிய வைக்க முன்வர வில்லை.

நாட்கள் ஓடின.

விஷயத்தைக் கேள்விப்பட்டு குலசேகரனின் உடலை மெலிய வைக்க, பக்கத்து நாட்டிலிருந்து வசந்தானந்தர் என்ற யோகி ஒருவர் வந்தார்.

"யோகியாரே! மன்னருக்கு நீர் கொடுக்கப்போகும் மருந்துகளை எங்களிடமும் காட்ட வேண்டும்!" என்றனர் மந்திரிகள்.

"நான் சிகிச்சையளிக்கும் முன் நோயாளியின் ஜாதகத்தைப் பார்த்துவிட்டுத் தான் சிகிச்சையளிக்க முடியும்" என்றார் யோகி.

உடனே மன்னனின் ஜாதகம் கொண்டு வரப்பட்டது.

அதைப் பார்த்த யோகி, "மன்னனின் ஜாதகப் பலனின்படி அவருக்கு மருந்து கொடுப்பதால் எவ்வித பலனும் ஏற்படப் போவதில்லை. இன்றிலிருந்து முப்பதாவது நாள் மன்னர் இறந்துபோவார்" என்றார்.

"ஐயோ உண்மையாகவா?" என்று அலறினார்கள் மந்திரிகள்.

"என் வார்த்தை மீது நம்பிக்கை இல்லாவிட்டால் இந்த முப்பது நாட்களும் என்னை உங்கள் பாதுகாப்பில் வைத்திருங்கள். சிறையில் வேண்டுமானாலும் கூட அடைத்து வையுங்கள்." என்றார் யோகி.

மந்திரிகளும் அவ்வாறே செய்தனர்.

ஆனால் மன்னனுக்கோ யோகியின் பேச்சில் முழு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. ஆகவே தன் மரணத்தை நினைத்துப் பயந்தான். சாப்பாடு, கேளிக்கைகள் என்று எவ்வளவு அனுபவித்தானோ அவை அத்தனையையும் வெறுத்தான். எப்போதும் மரண பயமே அவனைச் சுற்றிக்கொண்டிருந்ததால், ஒரு கவளம் கூட அவனால் சாப்பிட முடியவில்லை. இப்படி எதுவுமே சாப்பிடாததால் அவனின் பருத்த உடல் மெலிய ஆரம்பித்தது.

யோகி கூறிய முப்பது நாட்கள் முடிந்தது. ஆனால், அவரின் கூற்றுப்படி மன்னன் இறக்கவில்லை. ஆகவே பொய் ஜோசியம் சொன்னதற்காக யோகியை இழுத்துவரச் செய்தான் மன்னன்.

"ஏய் கிழவா! நான் இன்னும் உயிரோடு தான் இருக்கிறேன். உன் பொய் ஜோசியத்திற்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்று யோசிக்கிறேன்" என்றான் மன்னன்.

யோகி மெல்லப் புன்னகைத்து, "மன்னா! எனக்கு நீங்கள் பாதி நாட்டை அல்லவா தரவேண்டும்" என்றார்.



"பாதி நாடா? நீ என்னை என் உடல் இளைக்க சிகிச்சையா செய்தாய்? ஒரு மாதத்தில் செத்துப்போவேன் என்றல்லவா சொன்னாய்?" என்று கோபத்தோடு கத்தினான் மன்னன்.

"மன்னா! அது ஜோசியமல்ல. அதுதான் நான் செய்த சிகிச்சை. முதலில் போய் உங்களைக் கண்ணாடியில் பார்த்துவிட்டு வாருங்கள். அதன்பிறகு நான் பரிசுக்குரியவனா? அல்லது தண்டனைக்குரியவனா? என்று முடிவெடுங்கள்" என அமைதியாகக் கூறினார்.

மன்னன் திகைத்துப்போய் தன்னை முழுமையாக நிலைக் கண்ணாடியில் பார்த்தான். அவனுக்கு ஆச்சரியம் தாள வில்லை. யானை போல் பருத்திருந்த உடலா இப்படி மெலிந்திருக்கிறது? நான் நானே தானா? என்று திகைத்து தன்னை ஒருமுறை கிள்ளிப் பார்த்துக்கொண்டான்.

"யோகியாரே! உம்மால் இது எப்படி முடிந்தது?" என்று கேட்டான் மன்னன்.

"முடிந்தது எப்படி என்று அனுபவித்த உங்களுக்கும் தெரியும். ஆனாலும் சொல்கிறேன். மரணத்தைவிட மரணபயம் ஆளை உருக்குலைத்து விடும். அந்தப் பயத்தைத்தான் உங்களுக்குச் சிகிச்சையாகக் கொடுத்தேன். நீங்களும் மரணத்தை நினைத்துப் பயந்து பயந்து சாப்பாடு, கேளிக்கை, உல்லாசம் என்று உங்கள் பருமனிற்குக் காரணமாயிருந்த அத்தனையையும் வெறுத்தீர்கள். அந்தப் பயத்தாலும், கவலையாலும் உங்கள் உடல் மெலிய ஆரம்பித்து இன்று சரியாகி விட்டது" என்றார் யோகி.

மன்னன் பெரிதும் அகமகிழ்ந்து அவரது அறிவுத்திறனைப் பாராட்டினான். வாக்குக்கொடுத்தது போலவே, தனது நாட்டில் பாதியை யோகிக்குக் கொடுத்தான். யோகியோ, பெருந்தன்மையுடன் அந்த நாட்டை அவனுக்குக் கொடுத்து,

மன்னா! நீங்கள் எனக்குச் செய்வதாக இருந்தால் ஒன்றே ஒன்று செய்யுங்கள். அதாவது நீங்கள் சுகபோகங்களையும், கேளிக்கைகளையும் குறைத்து வாழுங்கள். அத்துடன் சுறுசுறுப்பாகவும் நீங்கள் வேலை செய்ய வேண்டும். அப்போதுதான் உங்கள் உடல் ஆரோக்கியமாகவும் இருக்கும்" என்றார் யோகி.

"அப்படியே செய்கிறேன்" என்றான் மன்னன் குலசேகரன்.

## காண்டா மிருகம்

* **காண்டாமிருகத்தில் எத்தனை வகை உள்ளது?**
  ஐந்து வகையான காண்டாமிருகங்கள் உள்ளன. இவற்றில் மூன்று வகை மட்டுமே ஆசியாக் கண்டத்தில் உள்ளன. மற்ற இருவகைக் காண்டாமிருகங்களும் ஆபிரிக்காக் கண்டத்தில் காணப்படுகின்றன.



* **காண்டாமிருக வகைகளில் எது பெரியது?**
  ஆபிரிக்காவில் காணப்படும் வெள்ளை காண்டா மிருகங்கள் தான் உருவத்தில் பெரியது. 1.5 மீற்றர் உயரமும், 4.5 மீற்றர் நீளமும் வளரக் கூடிய இவற்றின் எடை 3 தொன் இருக்கும்.
  (ஒரு தொன்=1000 கிலோ)
* **காண்டாமிருக வகைகளில் எது சிறியது?**
  ஆசியாக் கண்டத்தில் காணப்படும் சுமத்திரா காண்டா மிருகங்கள் தான் உருவத்தில் சிறியவை. இவை 1.5 மீற்றர் உயரம் வளரும். எடை ஒரு தொன்தான்.
* **காண்டாமிருகத்தின் கொம்பு எதனால் ஆனது?**
  முடிபோன்ற மெல்லிய நார்களால் ஆனது. தற்காப்பிற்கும், மரங்கள் கிளைகளை ஒதுக்கித் தள்ளவும் இந்தக் கொம்பு பயன்படுத்தப்படுகிறது.
* **இது சேற்றில் புரளுவதேன்?**
  இதற்கு வியர்வைச் சுரப்பிகள் கிடையாது. உடலின் வெப்பம் வியர்வையாக வெளியேறும் வசதி இதற்கு இல்லை. அதனால் கடும் வெப்பத்தில் இருந்து தப்பிக்க சேற்று நீரில் புரளும்.

## வினாடி வினா

1. ஒன்றுக்கும் உதவா பை எது?
2. இதை ஓட்டுவதற்கு பயிற்சி தேவையில்லை. எதை?
3. பேனுக்கும் பிரச்சினைக்கும் உள்ள ஒற்றுமை என்ன?
4. மேலே போகும் 'கை' எது?
5. ஒரு எழுத்தில் திருவள்ளுவர் மறைந்திருக்கிறார். எந்த ஊர் அது?
6. எல்லோருக்கும் பிடிக்கக் கூடியது ஒன்று கூறு?

**விடைகள்**

1. குப்பை 2. ஈ ஒட்டுவதற்கு
3. இரண்டிற்கும் தலை சொறிய வேண்டும்.
4. பு'கை' 5. திரு வள்ளூர்
6. ஜலதோஷம்.

பர்ஸனா எம். இஸ்மாயில்-கொத்தான்தீவு.

## இருமலால் நடந்த விபரீதம்



கி.பி.1799ல் நெப்போலியன் போனபாட் பிரெஞ்சு தளபதியாக மத்திய கிழக்கில் போர் நடத்திக்கொண்டிருந்தபோது ஜாபா என்ற இடத்தில் 1200 துருக்கியர்களைக் கைது செய்தார். பின்னர் அவர்களை விடுதலை செய்ய நினைத்தார். இதைத் தனது மேலதிகாரியிடம் சொல்ல முயன்றபோது அவருக்குத் திடீரென்று இருமல் வந்தது. உடனே MASACRE TOUX என்று பிரெஞ்சு மொழியில் சொன்னார். (தமிழில் இதன் அர்த்தம் 'அட சனியன் பிடிச்ச இருமலே') இந்தச் சொல் நெப்போலியனுக்கு அருகில் இருந்த உதவித் தளபதிக்கு MASSACREZTOUS என்று கேட்டது. (இந்தச் சொல்லிற்கு 'எல்லாரையும் கொல்' என்று தமிழில் அர்த்தம்)அவ்வளவுதான். அடுத்தகணமே பிடிபட்ட 1200 துருக்கியர்களும் பிரெஞ்சு சிப்பாய்களால் கொல்லப்பட்டனர்.

## அதிசய ஒற்றுமை



ஒரே தேதி, ஒரே மாதம் (வருடம் மட்டும் வேறு) ஜப்பானில் பயங்கர பூகம்பங்கள் ஆறுமுறை தோன்றி ஜப்பானிய நகரங்களை அழித்தன.
1.9.827, 1.9.859, 1.9.867, 1.9.1185, 1.9.1649, 1.9.1923

## விடுகதைகளும் விடைகளும்

1. அம்மா பணிந்தவள். மகள் உயர்ந்தவள். யார் அவர்கள்?
2. நாலு கண்ணுண்டு. நடக்க முடியாத ஒன்று. அதுஎன்ன?
3. வாயால் உண்பாள். வாயால் எடுப்பாள். ஆனால் வௌவால் அல்ல. யார் அவள்?
4. காக்கி உடை அணிந்திருப்பான். கடவுள் ஆலயத்திலே கண்ணீர் வடிப்பான். வெள்ளை உள்ளத்தோடு வீடு திரும்புவான். அவன் யார்?
5. நிலையாக மலராதபூ- நினைத்தால் மலரும் பூ. நீரில் விழுந்தால் நிறம் மாறும் நேர்மையற்ற பூ. அது என்ன பூ?
6. வெட்டினால் தழைக்கும் மரம். வேண்டுவாரற்ற மரம். பூக்காமல் காய்க்காமல் பழுக்கும் மரம். அது என்ன?

**விடைகள்**

1. உரல், உலக்கை
2. போத்தான்
3. போத்தல்
4. தேங்காய்
5. நெருப்பு
6. முடி

என். நூறுல் நிம்ஸா-திக்வெல்ல.

---


1. உன்னுடன் ஒருவன் ஓடிக்கொண்டு இருக்கிறான் அவன் யார்?
2. உள்ளே இருந்தால் ஓடித்திரியும். வெளியே வந்தால் விரைவில் மடியும். அது என்ன?
3. உருளும், புரளும், தத்தளிக்கும், தாளம் போடாது. அது என்ன?
4. உயிர் இல்லாத பறவை. ஊர் ஊராய்ப் போய்ச் சேரும். அது என்ன?
5. உயர்ந்த வீட்டில் இருக்கும், ஊரார் தாகம் தீர்க்கும். அது என்ன?

**விடைகள்**

1. நிழல்
2. மீன்
3. நாக்கு
4. ஆகாயவிமானம்
5. மழை

ஜெ.சந்திரகாந்தன்
பெரியகல்லாறு மகா வித்தியாலயம்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 26.11.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 66
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 63

**பரிசுக்குரியவர்:**
எஸ். விமலகாந்தன்
தமிழ் வித்தியாலயம், பூனாகலை-3.

**பாராட்டுக்குரியவர்கள்:**

இ.ஷீரஸாகர்-கோணேஸ்வர இந்துக் கல்லூரி, திருகோணமலை.
எஸ். சர்வானந்தா-கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை.
எம்.எம். பஸ்னா-ஸாதாத் மகா வித்தியாலயம், அக்குறஸ்ஸ.
எம். கிருஷாந்தினி-ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம், ஆரையம்பதி.
ஜே.சுபாஷினி- புனித மத்தேயு பாடசாலை, தெனியாய.
சோபனா சபாரெத்தினம்- இராம கிருஷ்ண வித்தியாலயம், மண்டூர்.
ஹிஷாம் நிஸாம்-கண்டி.
எம்.எச்.எம். ஹாபிலீன்-ஸாஹிரா கல்லூரி, புத்தளம்

நன்றி - நூலகத்திட்டம்




# கொலை விழும் நேரம்

## அங்கம் 40

காலடியில் வந்து நின்ற நாய் அவன் சப்பாத்துக்களை நாவால் வருடியது.

அவன் குனிந்து அதனை பரிவோடு தட்டிக்கொடுத்துவிட்டு முன்னால் நடந்தான். அதுவும் அவன் பின்னால் ஒட்டிக் கொண்டது.

இந்திரா வீட்டுக் கதவருகே சென்றவன் உள்ளே பேச்சுக் குரல்கள் கேட்க சற்று நிதானித்தான்.

இடி, மின்னல் முன்னறிவிப்புக்களைத் தொடர்ந்து இப்போது வானம் பொழியத் தொடங்கியது.

உள்ளே காயத்திரி இந்திராவை முதுகில் ஆதரவாய் தடவி ஆறுதல் சொன்னாள்.

"நடந்ததையெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தால் மனசில் வலி அதிகமாகும் இந்திரா. மற!"

இந்திரா சோகமாய் சிரித்தாள்.

"எப்படி முடியும் காயத்திரி? எப்படி? காயம் உடலில் என்றால் ஆறிவிடும். இது மனசில்! அதுவும் ஆழத்தில்! கூடாது; மறக்கக் கூடாது"

"மறக்காவிட்டால் வலி உனக்குத்தானே இந்திரா. வதை உனக்குத்தானே!"

"நோ! மறப்போம்; மன்னிப்போம் என்ற வாசகம்தான் சில மிருகங்களுக்கு ரொம்ப வசதியாகிவிடுகிறது காயத்திரி. மறக்க மாட்டோம் தண்டிப்போம் என்பது தான் சரி!"

என்றதில் முழுவதுமிருந்தது பொய். சுத்தமாக கலப்படமில்லாமல் தயாரிக்கப்பட்ட ஹரிகரன் மார்க் பொய்!

காயத்திரி நம்பினாள். மெத்தென்ற இரட்டை சோபாவில் கவனமாக அமர்ந்தாள்.

"கோப்பி மட்டும் போதும்"

"என்ன நீ; இந்த ஹோட்டலையே சாப்பிடக் கேட்டாலும் நான் ஓ.கே. நீ ஆக ஒரு கோப்பி என்று.."

ஜோக்காக நினைத்து சிரித்து,"வீட்டில் இப்போதுதான் ஒருபிடி பிடித்துவிட்டு வருகிறேன். நாம் யாரை மீட் பண்ணப் போகிறோம்?"

"அது வந்து.. மிஸ்டர் பிர்லா."

புருவம் வியப்பில் உயர்த்தி ஹரிகரனைப் பார்க்க,

"யெஸ்! நீ நினைப்பது சரி. இது இந்தியாவின் கோடிஸ்வரர்களில் ஒருவரான பிர்லா அல்ல. ஆனாலும் நூறு கோடிக்கு மேல் பத்திரமாக வைத்துள்ள குட்டி பிர்லா. நமது வியாபாரத்திற்கு இவரே போதும்"

ரிசீவர் எடுத்து கோப்பி சொல்லிவிட்டு காயத்திரிக்கு அருகில் வந்து சோபாவில் அமர அவளுக்குள் ஏதோ உறுத்தல் முதல் தடவையாக எட்டிப்பார்த்தது.

"பிர்லா ஏற்கனவே ஒருதரம் இங்கே வந்திருந்தார்."

உறுத்தலோடு "ஐ.ஸீ" என்றுவிட்டு கைப்பையில் கைக்குட்டை எடுத்து முகத்தை ஒற்றிக் கொண்டாள்.

அருகில் விசும்பல் ஒலி கேட்க திரும்பியவள் அதிர்ந்து போனாள்.

ஹரிகரன்தான் முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டு குலுங்கி அழுதுகொண்டிருந்தார்.

'இப்போது என்ன செய்வது?

'ஏன் இந்த மனுசர் அழுகிறார்? நான் இதற்கு என்ன செய்ய வேண்டும்?'

"பொஸ்"

என்றாள் பதிலில்லை.

தொடர்ந்து அழுது கொண்டிருந்தார். சட்டென்று அவள் பக்கம் திரும்பி, முகத்தை மூடியிருந்த கரங்களை விலக்கிக் கொண்டு,

"நான் கெட்டவனா காயத்திரி? நான் கெட்டவனா?"

காயத்திரி பொம்மைபோல் இல்லையென்று தலையாட்டினாள்.

வஞ்சகமில்லாத மனதிலும் அழுகை உற்பத்தியாகும்.

வஞ்சக மனதிலும் அழுகை நடிப்பிற்காக உற்பத்தியாகும்.

கண்ணீரின் நிறம் ஒன்றுதான்- கனம் ஒன்றுதான்.

அழுபவன் குணத்தை கண்ணீரை வைத்தா கணிப்பிட முடியும்?

ஏழையின் கண்ணீர் கூரிய வாள். ஏய்த்துப் பிழைப்பவன் கண்ணீர் ஏமாறுகிறவர்களது முதுகில் செருகும் கத்தி.

கூரிய வாள் நெஞ்சுக்கு நேரே வரும்

"ஹரி இதுதான் நேரமடா"

உள்ளே நரி உத்தரவு போட்டது.

காயத்திரி எதிர்பாராத நொடியில் அவள் மடியில் சரிந்து முகம் கவிழ்த்து விசும்பினார்.

காயத்திரியின் வலது புறத் தொடையில் முகம் கவிழ்ந்திருக்க அவளுக்கு கூச்சமாக இருந்தது.

என்ன செய்வதென்றே தெரியவில்லை. காயத்திரிக்கு நெஞ்சுத்துடிப்பு அதிகமாகியது.

அதே நேரம் ஹரிகரன் தனது முகத்தை தூக்கி அவளின் அடிவயிற்றில் வைத்துக் கொண்டு, "காயத்திரி!" என்றார் ஏக்கமாக, மயக்கமாக.

அந்த பலவீன நொடியில், காயத்திரியும் தன் மனதுக்கு கடிவாளம் தேடி தோற்றுப் போய்க் கொண்டிருக்க,

ஹரிகரன் முகம் இப்போது அவள் மார்புகளுக்கிடையே தஞ்சமானது.

கரங்களை விரித்து முதுகைச் சுற்றிக் கோர்த்து அவளை இறுக்கிக் கொண்டார்.

காயத்திரி முற்றாக சரணடையும் நேரம் வந்துவிட்டதைப் புரிந்து முகம் உயர்த்தி அவள் உதடுகளை எடுத்துக் கொண்டார்.

காயத்திரியின் மூச்சுக் காற்று ஏ.சி. குளிரிலும் ஹரிகரனின் நெற்றியைச் சுட்டது.

"என்னைப் பிடித்திருக்கிறதா காயத்?"

கன்னத்தில் உதடுகளால் கோடு போட்டபடி கேட்க, "..ம்.." என்றாள் பெரு மூச்சை வெளியேற்றிய படி காயத்திரி.

அவள் ஆடைகளை ஒவ்வொன்றாய் வெளியேற்றத் தொடங்கினார் ஹரிகரன்.

சரியாக ஒன்றரை மாதம் கழித்து ஹரிகரனிடம் சொன்னாள் காயத்திரி;

"நான் கர்ப்பமாக இருக்கிறேன்!"

ஹரிகரன் அதிராமல், குலுங்காமல் சிகரெட் ஒன்றை உதட்டில் செருகி தீ மூட்டி அதை அழிக்கத் தொடங்கிவிட்டு,



இந்திராவின் கண்களில் வெறியிருந்தது.

"பழிக்குப் பழிதான் தீர்வா இந்திரா?"

"காயப்பட்டவர்களுக்கு காயம் பட்டு அறியாதவர்கள் ஆறுதல் சொல்வது சுலபம். ஏன் தெரியுமா காயத்திரி? வேதனை என்ன என்பது அனுபவத்திற்கு வெளியில் இருப்பவர்களுக்கு தெரியாதல்லவா?"

இந்திரா சொல்ல காயத்திரி வாய் விட்டுச் சிரித்தாள்.

சட்டென்று சிரிப்பையடக்கி கண்களைச் சுருக்கி இந்திராவைப் பார்த்தாள்.

□□

"உள்ளே வா காயத்திரி."

என்றார்; என்றவர் ஹரிகரன்.

கதவு தானாக மூடிக்கொண்டது. ஐந்து நட்சத்திர ஹோட்டலின் பணக்கார செழிப்புள்ள அறை. இலக்கம் 541. ஏ.சியின் மிதமான குளிர்.

காயத்திரி அறைக்குள் விழிகளை ஓடவிட்டுத் தேடினாள்.

ஹரிகரன் தவிர வேறுயாரும் அங்கிருக்கவில்லை.

காயத்திரி ஏன் ஹரிகரனை தேடி வரவேண்டும்?

வரத்தான் வேண்டும்- ஏனென்றால் காயத்திரி ஹரிகரனின் அந்தரங்க செயலாளினி.

அதற்காக ஹரிகரனின் ரூமுக்கு....? ஏன் வரவேண்டும் என்றால் வியாபார விடயமாக ஹரிகரன் முக்கியமான நபர் ஒருவரை சந்திக்கப் போகிறார்.

"காயத்திரி நீயும் இருந்தால் நன்றாக இருக்கும். குறிப்பெடுத்துக் கொள்ளலாம். உதவியாக இருக்கும்"

காயத்திரி யோசிக்க, ஹரிகரன்சிரித்து, "உன் கற்புக்குச் சேதமிருக்காது. நான் உத்தரவாதம். சரி விருப்பமில்லையா விடு. வரவேண்டாம்"

காயத்திரி சிரித்து, ஹரிகரனின் முகத்தில் அப்பாவித்தனம் இருந்ததை நம்பி,

"வருகிறேன்"

"தாங்யூ!" என்றார் ஹரிகரன்.

அதுதான் இப்போது வந்துவிட்டாள். வந்து அவள் விழிகளால் தேடுவது புரிந்து,

"யாரைத்தேடுகிறாய் காயத்திரி? ஓ.... இப்போதுதான் ஃபோன் வந்தது. அரை மணி நேரமாகுமாம். என்ன சாப்பிடுகிறாய் நீ?"

"பிர்லாவிடம் எனக்குப் பிடித்தது அவரது வியாபார நேர்மை. பிர்லாவிடம் நான் படித்தது அழகான பெண் செயலாளர் இருப்பது வியாபார டென்ஷனில் சூடாகும் மூளைக்கு ஏ.சி. மாதிரி குளிர்ச்சி!"

சொல்லிவிட்டு நிறுத்தி தலையைச் சரித்து காயத்திரியை பார்த்தார். அவள் இரசிக்கவில்லை என்று தெரிந்தது.

கதவு தட்டப்பட எழுந்து போய் திறக்க, ஓடர் செய்த கோப்பியோடு சர்வர் உள்ளே வந்து வைத்துவிட்டு வழக்கமான சம்பிரதாயப் புன்னகையையும் விநியோகித்துவிட்டு மறக்காமல் கடைக் கண்ணால் காயத்திரியையும் இரசித்துக் கொண்டு சென்றான்.

## எழுதுவது ரசிகன்

ஹரிகரன் மீண்டும் வந்து அருகில்அமர, காயத்திரிக்கு ஏ.சி.குளிரிலும் வியர்க்கத் தொடங்கியது.

"ஆ... எங்கே விட்டேன். பெண் செயலாளர். யெஸ். அதுவும் இளமையான, நளினமான, நாகரீகமான.. ஏன் பொறாமையாக இருக்கிறதா? கோப்பியை எடுத்துக் கொள் காயத்திரி!"

ஸ்பூனில் சீனி எடுத்து கலந்தாள். பதட்டத்தில் சற்று அதிகமாகவே போட்டுவிட்டாள். கை நடுங்குவது போல் தெரிந்தது.

"சீனி அதிகம் சேர்ப்பாய் போலிருக்கிறது. சோ.. இனிப்பு என்றால் உனக்கும் பிரியம். எனக்கும் பிடிக்கும். ஆனால் இயற்கையான இனிப்பு."

கோப்பியை உறுஞ்சிய அவள் உதடுகளைக் கவனித்தபடி சொன்னார்.

பேச்சு முழுக்க வேறு திசையில் செல்வது புரிந்து காயத்திரி அவசரமாக கோப்பியை உறிஞ்சி முடித்துவிட்டு, கைக்குட்டையால் உதட்டை ஒற்றிக்கொண்டு,

"நேரமாகும் போலிருக்கிறது. வீட்டில் அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லை.."

"கால் மணி நேரம் கூட ஆகவில்லை நீ வந்து- அதற்குள் அவசரப்பட்டால் எப்படி? போக வேண்டுமானால் போ! இதற்கு நீ வராமல் இருந்திருக்கலாம்."

காயத்திரிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சங்கடமாய் சோபாவில் அசைந்தாள்.

போது தப்பிக் கொள்ளலாம்.

அதனால் தான் கொடியவர்கள் பலர் கூட ஏழைகளின் கண்ணீருக்கு காரணமாகி விட்டுத் தங்களை காத்துக் கொள்ள முடிகிறதோ?

ஏய்ப்பவர்களின் கத்தி முதுகில் செருகப்பட்ட பின்னர்தானே தன்னைத் தெரியப்படுத்துகிறது.

வஞ்சகரின் நடிப்பை நம்பி ஏமாந்தவர்கள் பலருக்கு தங்கள் இறுதி மூச்சுப் போகும் நேரத்தில் தானே வஞ்சகரின் சுயவிலாசம் தெரிந்திருக்கிறது.

சூதற்ற மனதில் உற்பத்தியாகும் கண்ணீருக்கு இல்லை விலை!

சூதும் வாதுமுள்ளவன் கண்ணீர் வலை!

வலையில் விழுந்து போனாள் காயத்திரி.

மெல்லிய மனசு கசிந்து, உருகி அவளை கவிழ்த்துவிட்டது.

"பணம் என் காலடியில் இருந்தும் மனம் வெட்டிப் போடப்பட்ட மரம் மாதிரிக் காய்ந்து கிடக்கிறது காயத்திரி. என் மனைவி சொல்கிறாள் நான் கெட்டவனாம். நாலு சுவருக்குள் இரு துருவமாக இருக்கிறோம் என்றால் நீ நம்பத்தான் மாட்டாய் காயத்திரி."

எத்தனை பெரிய ஆள். இப்படியொரு சொந்தச் சோகமா? காயத்திக்கு இரக்கமாக இருந்தது. ஐயோ பாவமே என்றது மனம்.

"காயத்திரி வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன். ஆணுக்குப் பெண் தேவை. பெண்ணுக்கு ஆண் தேவை. எதற்கு? பிள்ளைகளைப் பெறுவதற்கு மட்டும்தானா? நோ. உடலும் உள்ளமும் ஒரு சேர உற்சாகமாகும் நேரமல்லவா அது. நான் இழந்து கொண்டிருக்கிறேன். அந்த நேரங்கள் எனக்கு கிடைப்பதில்லை."

அற்புதமாக ஒரு கதை தயாரித்து அதற்கேற்ப நடித்துக்கொண்டிருந்தார். ஹரிகரனின் கதை, வசனம், இயக்கம், நடிப்பு அனைத்துமே உண்மைபோல் நம்பப்பட்டு காயத்திரிக்கும் கண்ணீர் வரும் போல் இருந்தது.

காயத்திரி கவிழ்ந்து கொண்டிருப்பதை ஹரிகரன் கவனித்துக் கொண்டார்.

புகையை இரசித்து வெளியேற்றிக் கொண்டு சொன்னார்.

"டேக் இட் ஈசி. அழித்துவிடலாம்."

இடி இறங்கியது உச்சியில்.

"ஹரி!"

கிட்டத்தட்ட கத்தியே விட்டாள்.

"ஃபுஸ்ரொப். ஃபுல்ஸ்ரொப். நான் உன் பொஸ். இதென்ன மரியாதையே இல்லாமல் ஹரி! பிளீஸ் கோல் மீ பொஸ்!"

சிரித்தார். ஒரு தம் உள்ளே இழுத்துப் புகைத்தார்.

"விளையாட வேண்டாம் ஹரி!"

"மீண்டும் பார்..ஹரி. ஃபுல் ஸ்ரொப். ஃபுல் ஸ்ரொப்! இனி என்ன விளையாட்டு. இந்த மாதிரி நேரங்களில் அரிச்சந்திரன் தெரியுமா நான்?"

"பிளீஸ் ஹரி என் நிலை புரியாமல் நீங்கள்..."

"நோ. புரியாமல் இல்லை. புரிந்து கொண்டுதான் புத்தி சொல்கிறேன். இத்தோடு விலகி விடு. அது நல்லது."

"என்னை பரிசோதிக்கிறீர்களா ஹரி?"

அலட்சியமாய் சிரித்துவிட்டுச் சொன்னார்.

"நான் என்ன ராமனா? நீ என்ன சீதையா அக்னிப் பரீட்சை நடத்த? அவதாரங்களுக்குத்தான் பரீட்சை. நாம் சாதாரண மனுசர்கள். இது சகஜம். அதாவது பலவீனங்கள்."

காயத்திரி முகம் சிவந்தாள்.

"நீயெல்லாம் ஒரு...."

"வசனத்தை நானே முடிக்கிறேன் பொறு! மனுசனா? என்றுதானே கேட்கப் போகிறாய்? வழக்கமாக கேட்டுப் புளித்துப் போன வசனம். புதிதாக ஏதாவது சொல்வதென்றால் சொல்லு. இரசிக்கலாமா பார்க்கிறேன். என்ன எதுவுமில்லையா? வீட்டில் போய் யோசித்துப் பார். போ. என்ன முறைக்கிறாய். போடி!"

□□

"காயத்திரி நீ சொல்வது...?"

இந்திரா கேட்டாள்.

"முற்றிலும் உண்மை!"

பதில் சொல்லப்படவில்லை! பதில் வந்தது! திறந்த கதவின் வழியே தெரிந்த முகத்தின் உதட்டிலிருந்து வந்தது.

(தொடர்ந்து வரும்)

# பேனா நண்பர் அரங்கம்



* வி. குமாரசூரியர்
* 17
* இல.9, ஏவாகம பாதுக்க.
* பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.



* எம். பர்வின்
* 18
* 415/A, வஹிட்டுவளை மல்வானை.
* கதைப்புத்தகம், வானொலி, தொலைக்காட்சி.




* கே.சசிகலா
* 25
* 197/1, திருமலை வீதி, மட்டக்களப்பு.
* பத்திரிகை, வானொலி.



* எம். றிஷானா
* 17
* இல. 75/6, தக்கியா வீதி மாவனல்லை.
* வழமையானவை.



* அ.ஜெயராசா
* 26
* M/T. LACONIA GREEK TANKER SHIP CO., 38, AKTIPOSSIODONOS PIRAEYS GREECE.
* தொலைக்காட்சி பார்த்தல்.



* எம்.வாரூக்
* 28
* J.T.C P.O.BOX- 1120 DOHA -QATAR.
* வானொலி, தொலைக்காட்சி.

# வீர மக்கள் தின கவிதைப் போட்டி

'ஐக்கியமே பலம்' என்ற தலைப்பில் சுவிற்ஸர்லாந்திலுள்ள ஐக்கியத்தை வலியுறுத்துவோர் தினமுரசு மூலமாக நடாத்திய கவிதைப்போட்டி முடிவுகள்-

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (PLOT) செயலதிபர் அமரர் க. உமாமகேஸ்வரனின் நினைவு தினத்தை முன்னிட்டு இப்போட்டி நடத்தப்பட்டது.

**ஆறுதல் பரிசுபெறும் 75ன் விபரம் ஏற்கனவே தரப்பட்டது. ஏனைய 25 பேரின் விபரமும் இங்கே தரப்படுகிறது. ஐநூறு ரூபா பரிசு பெற்ற மூன்று அதிஷ்டசாலிகளின் விபரம் அடுத்த முரசில்.**

76. எம். வசந்தாதேவி, அக்கரைப்பற்று.
77. செல்வி. எஸ்.வாணீஸ்வரி, கல்ஹா.
78. வி. முரளீதரன், களுவாஞ்சிக்குடி.
79. எஸ். காண்டீபன், கம்பளை.
80. செல்வி.பி.ராகினி, நானுஓயா.
81. எஸ். அஸ்பத்குமாரி, தெஹிவளை.
82. எஸ்.டன்ஸரன், தெஹிவளை.
83. என். விஜயலட்சுமி, நோர்வூட்.
84. எஸ்.கோகிலப்பிரியா, கண்டி.
85. ரஜினி ராஜபுத்ரன், அக்கரைப்பற்று.
86. எஸ். பரமேஸ்வரன், அக்கரைப்பற்று-07.
87. யசோதா பத்மநாதன், பசறை.
88. சி. தருமன், தம்பிலுவில்.
89. துஷ்யந்தி பாலகிருஷ்ணன், பூண்டுலோயா.
90. ஏ. பிரணவன், கொழும்பு-6.
91. எஸ்.காலிதீன், ஏறாவூர்.
92. சந்திரிகா ஆத்மராசா, கோட்டைக்கல்லாறு.
93. எம். அபூபக்கர், திருகோணமலை.
94. ஆர். ரேணுகா தேவி, கொழும்பு-4.
95. பி.பரமேஸ்வரன், மன்னார்.
96. ஆர். முரளீஸ்வரன், மட்டக்களப்பு.
97. எம். நிம்சான், மினுவாங்கொட.
98. அருளையா, வவுனியா.
99. எம். மரகதம், அக்கரைப்பற்று-8.
100. கே. சங்கர், மூதூர்.

—அன்புடன்—

ஐக்கியத்தை விரும்புவோர் -சுவிஸ்-

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# விடியலை நோக்கி.....!

-சேத்தூர் எஸ்.பகீரதி-

"ஏய் கழுதை இங்க என்ன செய்து கிட்டு இருக்கிறே" என்றவாறே அலுவலகம் செல்வதற்காக ஷேர்ட்டை மாட்டிக் கொண்டு வந்த பிரசன்னா சுபாவின் பின்னலைப் பிடித்து இழுத்தான். அது வரை பிரசன்னாவின் டயறியைப் படித்துக் கொண்டிருந்த சுபா டயறியை மேசைமீது வைத்துவிட்டு 'ஒண்ணுமில்லையே" என்றாள். "ஏன் என்னோட டயறியைப் படிச்சே" அவன் பொய்க் கோபத்துடன் கேட்க, "சும்மா எடுத்துப் பார்த்தேன். அது நிறைய கவிதை கவிதையா இருந்திச்சு. வெரி இன்டரஸ்ரிங் அதுதான் படிச்சேன்." அவள் கூறவும் அவளது காதைத் திருகினான்.

சுபா வேண்டுமென்றே "ஐயோ அத்தை" அலறினாள். பிரசன்னாவின் தாய் "என்ன என்னம்மா சுபா" என்றவாறே ஓடிவந்தாள். "அம்மா காலங்கார்த்தால இந்த சுபாவுக்கு வேற வேலை இல்லையா? அதோ பாருங்க மாமி பாத்திரம் விளக்கிறா. ஒரு ஹெல்ப் பண்ணுவம்னு நினைக்காம இங்க என்னோட டயறி படிச்சுக் கொண்டு இருக்கிறா" பிரசன்னா முறையிட்டான். "இது'தப்பா அத்தை? பிரசன்னா யாரும் இல்லையே, என் சொந்த அத்தான்" சுபா சிணுங்கினாள். பிரசன்னாவின் தாய் "கடவுளே சின்ன வயசிலேர்ந்து இப்படி வயது வந்த பிறகும் உங்க சண்டை ஓயாதா" கேட்டுவிட்டு அவள் சென்று விட்டாள்.

"வெவ்வவ்வ" சுபா கண்களை உருட்டி உதட்டை மடித்து அழகு காட்டிவிட்டு ஓடினாள். "அடி கழுதை" கையை ஓங்கிய பிரசன்னா சிரித்தான். "வர்ரேன்மா" என்றவன் எதிர்வீட்டு வாசற்படியில் நிற்கும் சுபாவைப் பார்த்துக் கைகளை அசைத்து விடைபெற்றான். சுபாவும் கைகளை அசைத்தாள்.

பிரசன்னாவின் மாமன்மகள்தான் சுபா. அவள் ஒரே பெண். பிரசன்னாவும் ஒரே பையன். சின்ன வயதிலேயே தந்தையை இழந்தவன். அவனுக்கு தாய், தந்தை எல்லாம் தாய் மீனாட்சிதான்.

சின்ன வயதிலேயே பெற்றோர்கள் பிரசன்னாவுக்கு சுபா என நிச்சயித்து இருந்தார்கள். பிரசன்னா சுருளான கேசமும் நேரான நாசியும் மிதப்பான கவிதைக் கண்களும், களையான துருதுரு என்ற முகத்துடனும் நல்ல வாட்டசாட்டமாக இருப்பான்.

சுபா ரோஜாப் பூப்போல அழகாக இருப்பாள். ஒளிர்விடும் கண்களும் கிள்ளத் தோன்றும் நாசியும் குறுகலான நெற்றியும் கிள்ளினால் இரத்தம் தெறிப்பதற்குத் தயாராக இருப்பது போல சிவந்த மேனியும் சுருளான நீண்ட கூந்தலும் 'பளிச்' எனச் சிரிக்கும் போது மேலே ஓரமாகத் தெரியும் தெற்றுப் பல்லும், குழிவிழும் கன்னங்களுமாக இருக்கும் சுபா மொத்தத்தில் அவள் ஒரு புதுக்கவிதை. பிரசன்னாவும் சுபாவும் ஜோடியாகச் சென்றால் ஆயிரம் விழிகள் அவர்களை மொய்க்கும்.

வானொலியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கும் பாடலுக்கேற்ப சுபா காற்பாதத்தை லாவகமாக ஆட்டி தாளம் போட்டுக் கொண்டிருந்தாள். கால்களைத் தழுவியிருந்த வெள்ளிக் கொலுசுகளும் ஜதிபாடத் தொடங்கியது.

அது பிரசன்னா கோவிற் திருவிழாவின் போது ஆசையுடன் வாங்கி சுபாவின் கால்களில் மாட்டிவிட்ட கொலுசுகள். பிரசன்னா அருகில் இருந்தாலும் அவனுடைய நினைவுகள் சுபாவின் மனதில் என்றும் பசுமையாகவே இருக்கும்.

□□□

அந்தக் கோயிற் திருவிழா அவளுக்கு ஞாபகம் வந்தது. இருவரும் பெற்றோர்களுக்கு அருகில் இருந்தாலும் இருவரின் விழிகளும் அடிக்கடி சந்தித்துக் கொண்டன. மின் விளக்குகளின் வண்ண ஒளியில் சுபா தங்கப் பதுமையாகத் தெரிந்தாள். நீல நைலக்ஸ்சேலையும் அளவான அலங்காரங்களும் தலை நிறையப் பூவுமாக இருந்த அவளை கண்கொட்டாமல் பார்த்தவன் விழிகளாலே பாராட்டினான்.

"பிரசன்னா நிறைய கடைகளெல்லாம் இருக்கு. சுபாவை கூட்டிக்கிட்டு போய் அவ கேட்கிறதை வாங்கிக்கொடுப்பா!". அம்மா சொல்ல, பிரசன்னா சந்தோஷமாய்த் தலையசைத்தான். "சுபா நீ என்றைக்குமே அழகுதான். அதுவும் சாரில பார்க்க என்னோட கண்கூட பட்டுடும் போல இருக்கு. உன்ன எல்லாருமே பார்க்கிறாங்க. மாமிக் கிட்ட சொல்லி திருஷ்டி கழிக்கணும்." என்றவனைப் பார்த்த சுபா "நீங்க மட்டும் என்னவாம் ராஜாவாட்டம் இருக்கிறீங்க" என்றாள்.

கண்ணாடி வளையல்களெல்லாம் காட்டி சுபா கேட்க "என்ன சுபா இது. போயும் போயும் வெறும் கண்ணாடி வளையல்?" என பிரசன்னா செல்லமாய்க் கடிந்து கொண்டே வளையல்களை வாங்கி அவளது கரத்தில் மாட்டினான். மிகவும்



நூதனமாக ஆராய்ந்து ஒரு ஜோடி அழகான வெள்ளிக் கொலுசுகளையும் வாங்கி வீட்டுக்கு வந்ததும் அவளது கால்களில் மாட்டி விட்டான்.

சின்னக் குழந்தைபோல் கால்களைத் தூக்கிப் பார்த்தவள் "அழகான கொலுசு. என்கிட்ட இருக்கிற கொலுசுகளைவிட எனக்கு இந்தக் கொலுசைப் பிடிச்சிருக்கு. நல்லா செலக்ட் பண்ணியிருக்கிறீங்க" சுபா கூற, "கொலுசைவிட உன்னோட கால்கள்தான் அழகா இருக்கு" எனப் பிரசன்னா கூறினான்.

"பிரசன்னா உங்களுக்கு இந்த கோயிற் திருவிழா ஞாபகமா எது வாங்கித் தர்ரதுன்னு தெரியல்லை. அதனால் இந்தச் சின்னப் பிரசென்ற்" என்று கூறிய சுபா கண்ணாடிப் பேழை ஒன்றைக் கொடுத்தாள். அதனுள்ளே கண்ணாடியால் செய்யப்பட்டு வர்ணம் தீட்டியிருந்த இதயத்திலே 'ஐ லவ் யூ' என்று பொறிக்கப்பட்டிருந்தது. பிரசன்னா மனம் நிறைய பூரிப்புடன் அதைப் பத்திரப்படுத்திக் கொண்டான்.

□□□

அந்த இனிய நினைவுகளுக்குள் புதைந்திருந்த சுபா ஏதோ சத்தம் கேட்டு அவசரமாய் வெளியே அவளது அத்தை ஓடிவந்தாள். அழுது புலம்பிக் கொண்டிருக்க அவளது தாயும் "ஐயோ கடவுளே" என அலறினாள். அவளது அப்பா காார்க் கதவைத் திறந்தபடி பதட்டத் துடன் "சீக்கிரம் ஏறுங்க" என கத்திக் கொண்டிருந்தார். "அத்தை என்னாச்சுது; அம்மா என்ன நடந்தது?" சுபா பதறினாள். "தம்பி பிரசன்னா ஆக்ஸிடென்ட் ஆகி மிகவும் சீரியஸான நிலையில் வைத்தியசாலை யில இருக்கிறார்மா சுபா" பக்கத்து வீட்டு பங்கஜம் மாமி கூற "இல்ல... என்னோட பிரசன்னாவுக்கு ஒண்ணும் நடக்காது" என அலறியவாறே எல்லோருக்கும் முன்பே சுபா காரில் ஏறி அமர்ந்தாள். 'கடவுளே என்னோட பிரசன்னாவுக்கு ஒண்ணும் ஆகிடக் கூடாது' என இறைவனிடம் மனம் உருகிப் பிரார்த்தனை செய்துகொண்டே வந்தாள்.

□□□

பிரசன்னாவை அப்போதுதான் கொண்டு வந்திருந்தார்கள். காலையில் போட்டிருந்த 'வெளேர்' என்றிருந்த வெள்ளை ஷேர்ட் இரத்தத்தில் தோய்ந்திருந்தது. உடல் எங்குமே இரத்தம். பிரசன்னா அடையாளமே தெரியாதவனாக மாறியிருந்தான். மயக்க நிலையிலிருந்தாலும் வலி பொறுக்காமல் "ஐயோ அம்மா ஆ..." என பிரசன்னா ஈனஸ்வரத்தில் முனகிக் கொண்டிருந்தான். டாக்டர்களும், தாதிமாரும் பதட்டத்துடன் பிரசன்னாவைப் பார்த்தார்கள். பிரசன்னா அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டான். மனசுக்கு மிகவும் நெருக்கமானவன் அன்பானவன் சொந்த மாமன் மகன் அவன் படும் வேதனைகளை கண்களில் நீர் நிறைய வெறித்தாள் சுபா. அவளுக்கு தலை சுற்றுவது போலிருந்தது. தாயின் தோள் மீது மயக்கமாய்ச் சரிந்தாள்.

□□□

வாரக் கணக்கில் மயக்கமாயிருந்த பிரசன்னா மெல்லக் கண்களைத் திறந்தான். அம்மா, மாமா, மாமி, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரினதும் அன்பான விசாரிப்புக்களை ஏற்றவனது விழிகள் சுபாவைத் தேடின. "சுபாவுக்கு ஜுரமப்பா அதனால வரல்லை. நாளைக்கு நாம் வீட்டுக்குப் போறம்" தாய் மீனாட்சிதான் சொன்னாள். டாக்டர்கள் மட்டுமல்ல அனைவருமே பிரசன்னா பிழைத்துக் கொள்வான் என நினைக்கவில்லை. அந்தளவுக்கு அவனது உடல் நிலை மிகவும் மோசமாக இருந்தது.

காலையில் பிரசன்னா மிகவும் உற்சாகமாய், யாருடைய உதவியும் இன்றி வீட்டை நோக்கி நடந்தான். சுபா வராந்தாவில் நின்று பிரசன்னாவை முறைத்தாள். தலையை ஒருபுறம் சாய்த்துப் பார்த்தாள். சுபாவைக் கண்டு சந்தோஷப்பட்டவன் அவளது இச் செயலினால் ஏதோ விசித்திரமாய் உணர்ந்த வனாக தடுமாற்றத்துடன் தாயை நோக்கி னான். "உன்னை அன்னிக்கு வைத்திய சாலையில் பார்த்தவுடனேயே மயக்கமாக சரிஞ்சவ அப்புறம்....." தாய் விசும்ப "கடவுளே" பிரசன்னா அலறினான். "தம்பி சுகம் வரும்னு டாக்டர் சொல்லியிருக்கிறார் கவலைப்படாதீங்க" அவனது மாமா ஆறுதல் சொன்னார்.

சுபா தனக்குள் ஏதோ சொல்லிக் கொண்டாள். கலகலவெனச் சிரித்தாள். பின்பு சிணுங்கினாள். சுபாவையே பார்த்துக் கொண்டிருந்த பிரசன்னா நேரம் போவதையுணர்ந்தவனாக சுபாவைத் தோளுடன் சேர்த்து அணைத்துக்கொண்டு நடந்தான். இருள் சூழ்ந்து கொண்டது. நாளைய உதயமாவது இந்த நல்ல இதயங்களுக்கு சந்தோஷமானதாக அமையட்டும்! ●

# வாசமில்லா மலரிது

ஓட்டமாவடி அறபாத்

நான் 'கல்கமுவ' பஸ்ஸினுள் தவித்துக் கொண்டிருந்தேன். குருநாகலிருந்து 'கல்கமுவ, போய்ச் சேர்வதற்குள் குடல் பிதுங்கி, வாய் மூலம் வெளியேறினாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை. அவ்வளவு கூட்டம், மாலை நேர இறுதி பஸ் என்பதால் சன நெரிசலில் வேர்த்துக் கொட்டியது. பஸ் புறப்படுவதற்கு இன்னும் பத்து நிமிடங்கள் இருப்பதால், அன்றைய பத்திரிகையாவது பார்க்கலாம் என்றால் அருகில் ஒரு மங்கை. கைவிரித்து படிக்க முடியாது. படக்கூடாத இடத்திடல் பட்டு விடும் என்ற அச்சம் வேறு. ஜன்னலோர சீட்டில் வசதியாய் அமர்ந்து, வெளியே விழிகளை மேய விட்டேன். ஒரே பரபரப்பு, அங்குமிங்கும் அவசர நடைகளும், பஸ்ஸில்



சீட் பிடிக்க முண்டியடிப்பதுமாய், மனிதர்கள் நெருக்குப்பட்டனர். மழை வேறு இதோ கொட்டப்போகிறேன் என்று பயமுறுத்தியது.

எனக்குப் பக்கத்திலிருந்தவள் ஒரு முஸ்லிமாக இருக்க வேண்டும். பஸ் பயணம் தொடர்ந்ததிலிருந்து நெஞ்சைத் தடவுவதும், நெளிவதுமாய் இருந்தாள். அடிக்கடி தேசிக்காய் கடித்தாள். ஒருவேளை "உண்டாகி" இருக்காளோ இப்போது பாவமாய் இருந்தது. வாயும், வயிறுமாய் மனுச புழுக்கத்தில் குமட்டிக் கொண்டு வந்திருக்க வேண்டும். போதாக்குறைக்கு அருகில் நின்றதடியன் வேறு அவளை முட்டி முட்டி நெருக்கிக் கொண்டிருந்தான். அவளின் சங்கடம் புரிந்தது எனக்கு, மெல்ல எழுந்து ஜன்னலோர இருக்கையை கொடுத்து, அவளின் இடத்தில் மாறி உட்கார்ந்தேன். கொஞ்ச நேரத்தில் ஜன்னல் திறந்து 'குபுக்' கென்று வாந்தி எடுத்தாள். பின்னால் இருந்தவர்கள் ஏதோ முணுமுணுத்தபடி ஜன்னல்களை அவசரமாய் இழுத்து மூடினர். இந்த நேரத்தில் தனியே இவள் வந்திருக்கக் கூடாது. பயணம் கூட செய்யக்கூடாது. விவஸ்தை இல்லாமல், சிலர் பேசிக்கொள்வதும் கேட்டது. அவள் வாந்தி எடுத்த களைப்பில் வியர்த்திருந்தாள். நெற்றி முழுக்க வியர்வை திட்டுக்கள். அப்போது தான் அவளை கூர்ந்து கவனித்தேன். ஒரு பத்தொன்பதை நிச்சயம் தாண்ட முடியாத வயது. இள நீல நிறத்தில் சல்வார். அற்புதமான தெய்வீகம் ததும்பும் முகம். குறை கூற முடியாத அழகு. கவர்ச்சியிலும் வெகு அடக்கமாய் தெரிந்தாள். உள் மனசில் அழிக்க முடியாத ஏதோ ஒரு நிகழ்வின் தாக்கம் எழுதப்பட்டிருப்பதாய் முகம் காட்டிக் கொடுத்தது. வசதியாக சாய்ந்து மூச்சை உள்ளிழுத்து, சுவாசித்துக் கொண்டாள். ரொம்ப களைப்படைந்து சோர்வாய் இருந்தாள். பேச்சுக் கொடுக்கலாம் என்றால், இது ஏற்ற தருணம் இல்லை. அவள் இயல்பு நிலைக்கு வந்திருந்ததை அவதானித்தேன். 'வாரியப்பொல'யில் பஸ் கொஞ்சம் தாமதமானது. அந்த இடைவெளிக்குள் அவளுடன் பேசலாம் என தோன்றவே, மெல்ல தலை கெழித்து பார்த்தேன். செத்துப் போன புன்னகை ஒன்றை உதிர்த்தாள். வாடிப் போன ரோஜாவைப் போல வறண்ட இதழ்களில் அந்தச் சிரிப்பு தோன்றிய மறுகணமே வற்றிப் போனது.

"நீங்க எங்க போறீங்க" நான்தான் கேட்டேன். "அம்மம் பொல" சொகமில்லையா, "ஓம்" தனிய வராம துணைக்கி யாரயும் கூட்டி வந்திரிக்கலாமே, "அவரு கொழும்புல", அப்ப கூடப்பொறந்தவங்க, இருக்காங்க கொழும்பிலதான், "உங்கட சொந்த ஊரு கொழும்பா?" அதற்கு விடை இல்லாமல் மௌனமாய் தலையாட்டினாள். அவளின் மேல் திடீரென கரிசனை ஏன் முளைத்தது. என்ற வினாவை எனக்குள் கேட்டுக்கேட்டு அலுத்துப் போனேன். மேற்கொண்டு என்ன கேட்பதென்றே புரியவில்லை. நீண்ட மௌனம் திரையாய் கிடந்தது. அவள் ஜன்னலின் ஊடே ஆகாயப் பரப்பை வெறித்துக்கொண்டிருந்தாள். அவளின் வாழ்வில் படிந்திருக்கும் அந்த நிகழ்வு வெகுவாய் அவளை அரித்துக் கொண்டிருக்க வேண்டும். நோயின் கடுமையால் அவள் அப்படி இருக்கலாம் இதற்கு போய் அவள் வாழ்வுடன் அதுவும் அந்தரங்கம் பற்றி நான் ஏன் சிந்தித்து குழம்ப வேண்டும். "கருணாகரளா டிக்கக் பஹிண்ட பஸ்ஸக்கே டயரக மாறு கரண்ட ஓண", திடீரென கண்டக்டர் குண்டை தூக்கிப் போட்டான். எரிச்சலுடன் உரிய நேரத்திற்கு போக முடியவில்லையே என்ற ஆத்திரத்துடன் பயணிகள் இறங்கினர். பஸ்ஸுக்கு ரயர் மாற்றுமட்டும் ஒரு 'டீ' குடிக்க வேண்டும் போல் இருந்தது. அவளையும் கூப்பிட்டேன். மறுத்துவிட்டாள். வற்புறுத்தவே தயங்கித் தயங்கி வந்தாள்.

எதிரும் புதிருமாய் உட்கார்ந்தோம். "நீங்க எங்க" அவள் முதன் முதலாய் கேள்வி கேட்டாள். 'மட்டக்களப்பு' "அப்ப இங்கால" "கல்கமுவ போறன்", அங்கதான் மெரி பண்ணிருக்கீங்க போல, இலேசான கடை வாயில் அப்பிக்கிடந்த புன்னகை, அதே செத்துப் போன சிரிப்பு, "இல்ல" தொழில்தான் அங்க. என் பதிலால் சற்று சங்கடப்பட்டாள். "உங்கட ஹஸ்பன்ட் கொழும்புல பிஸனஸா, "ஓம்" நீங்களும் அங்க போய் இருக்கலாம் தானே." "ஏலாது." "ஏன்?" "அவர்ர முதல் வொய்ப்ட புள்ளயலால தொல்லை." நான் எனக்குள் அதிர்ந்தேன். ஏராளமான குண்டுவெடிப்புகள் மனசுக்குள் டமார் டமாரென வெடித்து இதயம் சிதறி துகள் துகளாய் சிதறியது. "இவள் என்ன விளையார்ளா," அதிர்வு மாறாமல் அவளை ஏறிட்டேன். விழியோரம் நனைந்திருந்தது. இவள் இரண்டாம் தாரமா? ஹோட்டலை விட்டு வெளியே வந்தோம். அவளின் நிலை பரிதாபமாய் இருந்தது. அநாவசியமாய் அவள் அந்தரங்கம் பற்றி தோண்டி இருக்கக் கூடாது. அந்த கண்ணீருக்கு நான் காரணமாய் ஆகி இருக்கக் கூடாது.

கைகளை பிசைந்து செய்வதறியாமல் நின்றேன். என்ன பேசுவது இதற்குமேல், என்ற தவிப்பு "ஐ ஆம் சொறி உங்கட மனச புண்படுத்திட்டன்" கனிவா சொன்னேன். "பரவாயில்லை. அன்பா ஒரு வார்த்தை கேட்டு எத்தனயோ நாளாச்சி." இப்ப நீங்க என்கூட பேசினதே சந்தோஷமா இருக்கு, மனசத்துறந்து சொல்றன், கூடப்பொறந்த வரா நெனச்சி சொல்றன். "நான் என் குடும்பத்தில மூணாவது. மொத்தம் ஆறு பேரு வாப்பா நல்லா வியாபாரத்துல கொடிகட்டிப்பறந்தாராம். நான் பொறந்தவுடன், பிஸ்னஸ் சரிஞ்சுட்டாம். என்ட சனியன்தான் அதுன்னு, சில சமயம் எரிஞ்சு விழுவாரு" "உங்கட வாப்பா முஸ்லிம் தானே?" இடையில் நான் வழிமறித்தேன். "ஓம், ஏன் கேட்க்கிங்க, முஸ்லிம்டா அல்லாட நம்பிக்க இரிக்கணும் தாரதும் கொடுக்கரதும் கடவுள் தான?"

அதற்கிடையில் பஸ் ரயர் மாற்றி உறுமிக் கொண்டு நின்றது.. அவளுடன் உரசினாற் போல் நடந்து அதே இருக்கையில் அமர்ந்து கொண்டேன். "ம்... அப்புறம் சொல்லுங்க," விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தாள். "மூத்தவங்க ரெண்டுபேரையும் நல்ல இடத்துல கட்டிக் கொடுத்தாரு. என்ட தலையெழுத்து அவர்ர கூட்டாளிர பொம்புள மௌத்தாகி ரெண்டு வருஷமாம், அவருக்கு ஆறு புள்ளயல், அவரபேசி என்ன கட்டி வச்சாரு. சொல்லும் போதே அவள் உடைந்து அழுதாள். "ப்ளீஸ் அழாதீங்க நம்மள ஒரு மாதிரியா பார்க்கானுகள். அவளை ஆசுவாசப் படுத்திக் கொண்டாள். நீங்க ஏன் ஒத்துக் கனும் மறுத்து இருக்கலாம் தானே?"

முடியாது வாப்பாகிட்ட நான் ஒன்னும் பேச முடியாது. பேசாம ஒத்துக்கிட்டன். அம்மம்பொலயில வாப்பாட தாய் புள்ள இரிக்கி அங்க வூடு வாங்கி அவர எனக்கு கட்டிவச்சிட்டாரு. "உங்கட உம்மாகூட வாதாடல்லயா? "இல்ல" "ஏன்?" அவ, கடசிப்புள்ள பொறக்கக்குள்ள ஒபரெஷன் பண்ணி னாங்க. அதுல மௌத்தாகிட்டா." "ஓ மை காட்" அப்புறம் நான் ஆதரவாய் கேட்டேன், "நீங்க விருப்பமில்லன்னு சொல்லி அவர்கிட்ட பேசி ஏன் உங்கள காப்பாத் தல்ல?"

பேசினன், அவர்ர கால்ல உழுமட்டும் கதறினன், கெஞ்சினன். "என்ன சொன்னாரு?" "உன்னைப்போல அழகா ஒருத்தி எனக்கு எப்பவும் கிடைக்க மாட்டா, பேசாம ஒத்துக்கன்னார்." "பாஸ்டட்" என்னையும் அறியாமல் கூவினேன். அருகில் நின்றவர்கள் ஒருமாதிரியாய் திரும்பினர். "இப்ப கலியாணம் முடிச்சி எத்துண வருஷம்?" "ரெண்டு." மூனு நாலு மாசத்துக்கு ஒருக்கா வருவாரு, ரெண்டு நாள் தங்கிட்டு போயிடுவார். விழியோரமாய் துளிர்த்த நீரை புறங்கையால் துடைத்துவிட்டாள். "தன் மனவிருப்பம் இன்றி ஒரு தந்தையால் மணம் செய்து வைக்கப்பட்ட பெண் முஹம்மது நபி (ஸல்) அவர்களிடம் முறையிட, அத்திருமணத்தை இரத்துச் செய்யும்படி பணித்தார்களே", அவரின் வழிமுறைகளை பின்பற்றும் ஒரு முஸ்லிமா இந்த பச்சைக் கிளியை புலியின் கரத்தில் கொடுத்தான்.

இவள் இளமை உணர்வுகள் நீர் தெளித்த தணல் மாதிரி அடங்கிப் போகவா இவளை நரை விழுந்த ஓலைக்கு தாரமாய் வார்த்தான். நீண்ட நேரமாய் எதுவும் பேசவில்லை. "உங்களோட பேசுனதில மனசே கொஞ்சம் இலேசா இரிக்கி, நீங்க விரும்பினா உங்கட அட்றஸதாங்க ஏதாவது உதவி தேவப்பட்டா எனக்கு உதவும்." "விசிட்டிங்கார்ட்" எடுத்து கொடுத்தேன். பத்திரமாய் தன் 'பேக்'கில் வைத்துக் கொண்டாள். "அம்மம்பொல கட்டிய இஸ்ஸரஹட்ட எண்ட" அவள் எழுந்தாள். நிலவை சலவை செய்தது போல் இருந்தது முகம். பனிவிழுந்த நந்தவனம் சூரியக்கதிரில் ஜொலிப்பது போல் பிரகாசித்தது விழிகள். "போய்ட்டு வாரன். அம்மம்பொல கிட்டதான் லீவு கிடச்சா வாங்க, வீடு பள்ளிக்கு பக்கத்துலதான்." என் இதயம் உருகி ஓடியது. சின்ன வயதில் வாழ்க்கைச்சிறையில் அடைப்பட்டு சாகும் அவளுக்காக விழியிரண்டும் இலேசாய் ஈரமாயின. இறங்கியவள் கரம் அசைத்தாள். ஜன்னல் திறந்து நானும் கரம் அசைத்தேன். வெறுமையாய் இருந்தது மனம். இருள் மெல்ல மெல்ல படர்ந்து கொண்டிருந்தது. அவளை இறக்கிய வேகத்தில் பஸ்ஸின் வேகம் சூடு பிடித்தது. நான் திரும்பி பார்த்தேன். அவள் ஓடும் பஸ்ஸை வெறித்துக் கொண்டு நின்றாள்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# நெஞ்சில் உரமுமின்றி.....

பாரிசிலிருந்து
-அனலையூர் அன்ரன்-

**சிறுகதை**

வெளிநாடுகளில் புகலிடம் தேடியுள்ள நம்மவர்கள் இலக்கியம் படைப்பதை மறக்கவில்லை.
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்களால் பாரிசிலிருந்து வெளியிடப்பட்டுள்ள கதைத் தொகுப்பிலிருந்து இக்கதை பெறப்படுகிறது.

அம்மோய் இஞ்ச அண்ணையைப் பாரெணை தேங்கா எண்ணை விக்கிற விலையில மீசைக்கு எண்ணை தடவுறேர்" தங்கச்சி பெரிசாய் கத்துறாள். அம்மா ஒண்டும் பறையாமச் சிரிக்கிறா. பிறகு திடீரெண்டு கண் கலங்கிறா. தம்பியின்ர நினைப்பு வந்திற்றுப் போல. இவள் தங்கச்சி இப்பிடித்தான். என்னோட தனகாட்டி அவளுக்கு சாப்பிட்டது செமியாது. இவளுக்கு என்ன தெரியும் என்ர மீசையைப் பற்றி?

சின்னனில என்னட்டை ஆராவது "உனக்கு ஐயாவில விருப்பமா? அம்மாவில விருப்பமா?" எண்டு கேட்டால் 'டக்' கெண்டு ஐயாவில தான் விருப்பம் எண்டு வன். ஏனெண்டா அம்மாவுக்கு மீசை இல்லையே. ஐயா மீசையை முறுக்கிக் கொண்டு எங்கிட தோட்டத்துக்க நிண்டு நிலம் கொத்தேக்க எனக்கும் அப்பிடி செய்யோணுமெண்டு சரியான ஆசையாய்க் கிடக்கும். ஆனால் எனக்கு அப்ப மீசையே முளைக்கயில்ல.

நான் பள்ளியில படிக்கேக்க எங்கிட வகுப்பிலேயே எனக்குத்தான் முன்னம் முன்னம் மீசை அரும்பினது. சில பொடியளுக்கு என்னில சரியான எரிச்சல். இவள் தங்கச்சிக்கு என்ன தெரியும்? நான் அப்பவே மீசைக்கு தேங்கா எண்ணை பூசறனான். பாரதியார் மாதிரி பெரி மீசை வளர்த்து அவரைப் போலவே ஒருத்தருக்கும் பயப்பிடாமல் நெஞ்சை நிமிர்த்தி நடக்கோணும் எண்டு நினைச்சுக்கொண்டிருந்தனான்.

ஆனால் இந்தியன் 'ஆமி' வீடு வீடா பூந்து கொடியள் பொட்டையளைப் பிடிக்கிறாங்கள் எண்டோடண மீசை என்னை பெரிய இளந்தாரியாக் காட்டு தெண்டும் இளந்தாரிப் பொடியளக் கட்டாயம் அவங்கள் பிடிப்பாங்கள் எண்டும் என்னை மீசையை வழிக்கச் சொல்லி அம்மா கெஞ்சினா. அவவைப் பாக்க பாவமாகக் கிடந்தது. எனக்கும் சாடையான பயமாக் கிடந்தது. மீசையை வழிச்சுப் போட்டன். மீசை வழிச்ச கவலையில அண்டைக்கு முழுக்க நான் சாப்பிடயில்ல. அம்மா அந்தக் கிழமை முழுக்கச் சாப்பிடயில்ல. ஏனெண்டா அண்டைக்குத்தான் தம்பி இயக்கத்துக்குப் போனவன்.

இந்தியா 'ஆமி'யும் போய்ற்றாங்கள்.

இப்ப எங்கிட பொடியளின்ர அரசாங்கம் தானே, ஆருக்குப் பயம்? பெரிசாய் பாரதி மாதிரி மீசை வளர்ப்பமெண்டு எண்ணை எடுத்துப் பூசினா, இவள் தங்கச்சி 'செல்' விழுந்த மாதிரியெல்லோ கத்துறாள். மீசை எப்பிடியும் இன்னும் ஒரு மாசத்தில பாரதியாற்ற 'லெவலு'க்கு வருமெண்டு தான் நினைக்கிறன்.

ஐயா வாறேர். சாடையான வெறி போல. குசினிக்க போய் அம்மாவோட ஏதோ கதைக்கிறேர். எனக்கும் கேக்குது. "இஞ்சேரணை இவன் நடனம் மாஸ்ரற்ற பொடியன் பிரான்சில இருந்து கொழும்பில வந்து நிக்கிறானாம். வாற மாசம் திரும்பவும் போறானாம். அவன் 'ஏச்சென்சி' வேலைதான் செய்யிறானாம். அதுதான் இவன் ராசனை அவனோட சேத்து வெளிநாட்டுக்கு அனுப்பிவிடுவமெண்டு யோசிக்கிறன்.

"அது சரியப்பா, காசுக்கு என்ன செய்யிறது?"

"அதுக்கும் ஒரு ஒழுங்கு செய்திருக்கிறன். தோட்டக்காணியை நடனம் மாஸ்றருக்கு எழுதிப் போட்டுத்தான் இவனை அனுப்பப் போறன்."

அதுக்கு அங்கால எனக்கு ஒண்டும் கேக்கேல்ல. 'அடிசக்கை அம்மன் கோயில் புக்கை' என்னை வெளிநாட்டுக்கு அனுப்பப் போயினம். அங்க எல்லாம் சும்மா கழுவுற துடைக்கிற வேலைதானாம். லிங்கம் கடிதம் போட்டிருந்தவன். ஆனால் அந்த வேலையளே தனக்கு சரியான கஸ்டமாய் இருக் கெண்டு எழுதியிருந்தவன் அவன். ஆள் இஞ்சேயே சரியான ஒரு பஞ்சி பிடிச்சவன். இந்த வெய்யிலுக்குள்ள நிண்டு தோட்டம் கொத்துற எனக்கு இந்த கழுவிற துடைக்கிற வேலையெல்லாம் வலு சிம்பிள். இனி என்னப் பிடிக்கேலாது.

ஐயா வந்து என்ரை தலையை தடவி விடுறேர். அவற்ற கண் சாடையாய் சிவந் திருக்கு. நான் நினைச்சன் வெறியில தான் ஐயாவுக்கு கண் சிவந்திருக்கெண்டு. ஆனால் ஐயாவின்ர கண்ணிலயிருந்து கண்ணீர் வருது.

"தம்பி இராசன் நீ தான் இந்த குடும்பத்துக்கு மூத்த பிள்ளை. கடன உடனப்பட்டு உன்னை வெளியில அனுப்பப் போறன். சீவியத்துக்கெண்டு இருக்கிற தோட்டக்காணியை அறுதியாய் எழுதிப் போட்டுத்தான் அலுவல் பாக்கிறன். உன்ர தங்கச்சி கரையேறுறதோ, எங்கிட குடும்பம் இந்த ஊரில தலைநிமிர்ந்து நடக்கிறதோ உன்ர கையில தான் இருக்கு. உன்ர தம்பி நாட்டுக்காகப் போய் செத்துப் போனான். இப்ப இந்தக் குடும்பமே உன்னை நம்பித் தான் இருக்கு. யோசிச்சு நடந்துகொள்."

எனக்கும் சாடையா அழுகை வருது. ஆனால் நான் ஒண்டும் பறையேல்ல. பிறகும் ஐயா தான் சொன்னேர்.

"வெள்ளிக்கிழமை கொழும்புக்கு வெளிக்கிட வேணும். முதலில இந்த தலைமயிரை வெட்டி மீசையை வழிச்சு ஒழுங்காய் இரு. தாண்டிக்குள 'செக்'கிங்கில சரியான கெடுபிடியாம். படிக்கிற பொடியன் மாதிரிப் போனால் தான் அவங்கள் அவ்வளவாய் கிளறமாட்டாங்கள்." சொல்லிப் போட்டு ஐயா வெளியில போறேர். போச்சு... போச்சு... ஐயா மீசையை வழிக்கச் சொல்லிப் போட்டு போறேர். இப்ப என்ன செய்யிறது ம்... ம்... அது சரி வவுனியா தாண்டிற தெண்டா மீசையை வழிச்சுப் போட்டுத் தான் போகவேணும்.

ஒரு மாதிரி கொழும்பு வந்து சேந்திற்றம். வரேக்க வழியில பட்டபாடு... சொல்லி வேலையில்ல. ஆனால் சனங்களும் துணிஞ் சிற்றுதுகள். முந்தி நயினாதீவுக்கு தேருக்கு போகேக்க ஒரு எப்பன் தூரம் 'லோஞ்சி'யில போறதுக்கு ஆயிரம் தரம் அம்மாளுக்கு நேர்த்தி வைச்சுத்தான் 'லோஞ்சி'யில ஏறுவினம். இப்ப என்னடாண்டா கிளாலிக் கடலுக்குள் அவன் அங்காலயிருந்து 'ஷெல்' அடிக்கேக்க கூடி பயப்பிடாம வருகுதுகள். அதுசரி.... பயப்பிட்டா பட்டினி கிடந்து தெல்லோ சாகவேணும்.

ஏதோ பெரிய கொழும்பெண்டாங்கள். இஞ்ச ஒண்டையும் காணேல்ல. எங்கிட அம்மாவுக்கு கொஞ்சம் தூரத்து சொந்தமான ஆக்கள் வீட்டிலதான் தங்கியிருக்கிறம். அவையிட பொடியன் பெரிய கரைச்சல். அவன் பிறந்து வளந்து யாழ்ப்பாண பக்கமே வரேல்லயாம். "அண்ணே ரொக்கட் லோஞ்சர் எப்பிடியிருக்கும்? குமரப்பா பைஃவ்தவுசண்ட் எப்பிடியிருக்கும்?" எண்டு எப்பப் பார்த்தாலும் கேள்விகள் கேட்டுக்கொண்டே இருக் கிறான். அங்கேயும் ரோட்டில திரியேக்க இஞ்சமாதிரி அடையாளட்டை கொண்டு திரியோணுமா எண்டு கேட்டான். இரவு நேரங்களில வெளியில திரியலாமோ எண்டும் கேக்கிறான். அங்க நாங்கள் ஆருக்குப் பயம்? எங்கிட ஊர் எங்கிட ரோட்டு நாங்கள் எங்கேயும் எப்பயும் எப்பிடியும் போய் வரலாம்", எண்டு சொன்னன். அப்ப



கொழும்பு எங்கிட நாடு இல்லையோ எண்டு எதிர்க்கேள்வி கேக்கிறான். பிறகு "இல்லைத்தான் போலக் கிடக்கு" எண்டு மெதுவாகச் சொல்லுறான். பிறகு கேட்டான் "அண்ணே பதுங்கு குழி எப்பிடி இருக்கும்?"

"உங்கிட வீடு மாதிரி இருக்கும்" எண்டன். வேற என்ன வெளியில திரிய ஏலாது. வீட்டை விட்டு வெளியில தலை காட்டினாப் பிரச்சினை.

யாழ்ப்பாணத்தில தமிழர் குழிக்குள்ள பதுங்கிறம். கொழும்புத் தமிழர் வீட்டுக்க பதுங்கிக் கொண்டிருக்கினம்.

□□□

சிங்கப்பூர்......

எனக்குச் சரியான சந்தோசமாய் கிடக்கு. ஒரு மாதிரி இலங்கையில இருந்து தப்பி வந்திற்றன். எனக்கு எல்லாத்தையும் விட சந்தோசம். இனி மீசை வளர்க்கலாம். பாரதியார் மாதிரியே வளர்க்கலாம். பாரதியார் மாதிரியே மீசையை முறுக்கிக்கொண்டு நெஞ்சை நிமிர்த்தி நடக்கலாம். ஆருக்குப் பயம்?

சிங்கப்பூர் நல்ல வடிவான நாடு. எல்லாம் வலு நீற். பின்னேர நேரங்களில வெளிக்கிட்டு சும்மா நடந்து திரிவன். 'செந்தோசா' எண்டொரு இடம் இருக்கு, பார்க்க பதினாறு கண் வேணும். ஆனால் தமிழ்ச்சனம் கூடுதலாய் இருக்கிற 'சிரங்கூன்' ஏரியா மட்டும் அவ்வளவு முன்னேற்றம் இல்லாமல் சாடையான குப்பையா கிடக்கு. அது ஏனெண்டு தெரியேல்ல.

இஞ்ச வந்து ஒரு மாசமாகுது. மூண்டு நாள்தான் சிங்கப்பூரில நிக்கவேண்டி வருமெண்டு ஏஜென்சி கொழும்பிலயிருந்து வரேக்க சொல்லிக் கூட்டிக்கொண்டு வந்தவர். நாங்கள் எல்லாமா நாலு பொடியள் வந்தனாங்கள். அதில ஒரு பொடியன் "ஏன் இன்னும் எங்களை பிரான்சுக்கு அனுப்பயில்ல?" எண்டு கொஞ்சம் கோவிச்சுக் கேட்டுப்போட்டான். அவன் கேட்டதும் சரிதான். காசு வேண்டேக்க மட்டும் சிரிச்சு சிரிச்சு வேண்டிப் போட்டு நடுவழியில கொணந்து எங்கள விட்டுப் போட்டு ஒரு அக்கறையில்லாம திரியிறேர்.

அண்டைக்கு இரவு 'ஏஜென்சி' தண்ணியைப் போட்டுட்டு வந்து அந்தப் பொடியனுக்கு அடிச்சுப் போட்டேர். எனக்கு 'ஏஜென்சி' யில சரியான ஆத்திரம் வந்தது. கொணந்து ஊர் பேர் தெரியாத இடத்தில விட்டுப்போட்டு சண்டித்தனம் காட்டுறேர். ம்... யாழ்ப்பாணத்தில எண்டா இவர் இப்பிடி சொறிச் சேட்டைகள் விட ஏலுமே?

காலம்பிற பத்து மணியிருக்கும். ஏஜென்சி என்ன தனியக் கூட்டிக்கொண்டு போனேர். "தம்பி உமக்கு நாளைக்குப் பயணம். என்ர ஊர்ப் பொடியன் எண்ட படியா உம்மை முதல்ல அனுப்புறன். மற்றப்பொடியளுக்குச் சொல்லிப் போடாதே யும், பிறகு குழம்புவாங்கள்" எண்டு சொன்னவர் ஒரு நீல நிற புத்தகத்தை எடுத்து எனக்கு விரிச்சுக் காட்டினார். "இது தான் நீர் போகப் போற புத்தகம். இந்தப் புத்தகத்தின்ர பேர், வயது விபரங்களை இரவோட இரவா இண் டைக்கே பாடமாக்கிப் போடும். இதில இருக்கிறது போல கையெழுத்து வைக்கவும் பழகும். மற்றது மீசையை வழிச்சு 'கிளீன் சேவ்' எடும் என்ன? அப்பதான் இந்த புத்தகத்திலுள்ள படத்துக்கு உம்மிட முகம் பொருத்தமாய் இருக்கும்."

எனக்கெண்டால் மீசையை வழிக்க துப்பரவாய் விருப்பம் இல்லை. அவர் காட்டின 'பாஸ்போர்ட்' படத்துக்கு மீசை வழிச்சாத்தான் நான் 'சேப்'பாய் இருப்பன். என்ன செய்யிறது எப்பிடியாவது பிரான்ஸ் போகத்தானே வேணும்.

சரி... இதுதான் நான் மீசை வழிக்கப் போற கடைசித்தரம். இனிமேல்பட்டு எக்காரணம் கொண்டும் மீசை வழிக்கி றேல்ல. பிரான்சுக்கு போன கையோட பெரிய மீசை வளக்கோணும் பாரதியார் மாதிரியே வளர்க்கோணும்.

□□□

பிரான்சுக்கு வந்து ஆறுமாசம் முடிஞ்சுது. ஏதோ பிரான்சில 'பாலும், தேனும்' ஓடுற மாதிரித்தான் ஊரில கேள்விப்பட்டனான். இஞ்ச வந்து பார்க்கத் தான் எங்கிட பொடியள் படுற கஷ்டம் தெரியுது. லிங்கம் நல்ல பொடியன். ஊரில பழகின சிநேகிதத்தை மறக்காமல் கனக்க உதவிகள் செய்யிறான். அவன்ர அறையில தான் இருக்கிறன். எல்லாமா அஞ்சு பொடியள் இருக்கிறம். வேலை வெட்டி ஒண்டும் கிடைக்கயில்ல. தான் வேலை செய்யிற 'றெஸ்ரோறண்'டில ஒரு வேலை இருக்கெண்டு காலம்பிற லிங்கம் என்னை கூட்டிக்கொண்டு போனவன். என்னைக் காட்டிக் காட்டி முதலாளியோட ஏதோ கதைச்சவன். பிறகு வந்து "நீ வீட்ட போ எல்லாத்துக்கும் பின்னேரம் வாறன்" எண்டான். அம்மா ளாச்சி இந்த வேலை மட்டு கிடைச்சிற் றெண்டால் என்ர குடும்பத்துக்கு ஒரு வழி பிறக்கும். ஈடு வைச்ச காணிக்கு வட்டி ஏறிக்கொண்டே போகுதெண்டு ஐயா கடிதம் போட்டிருக்கிறேர்.

இந்த ஆறுமாசமாய் ரூமுக்குள்ள இருந்து நான் செய்யிற வேலை என்ர மீசையை கண்ணும் கருத்துமா வளக்கிறது தான். ஊரில எண்ணை பூசி வளர்த்த னான். இப்ப 'கிறீம்' போட்டு வளக்கிறன். கொழும்பில நிக்கேக்க அடிக்கடி வழிச்ச தால மீசை கிசுகிசு எண்டு வளருது. எப்பிடியும் இன்னும் ரெண்டு மாசத்தில பாரதியாற்ற 'லெவலு'க்கு வந்திரும். இஞ்ச ஆருக்குப் பயம்? இலங்கை 'ஆமி'க்கு இந்தியன் 'ஆமி'க்குப் பயமா? ஒருத்தருக்கும் பயமில்லை.

கதவு தட்டிக் கேக்குது. லிங்கம் தான் வாறான். "மச்சான் ராசன் நான் 'றெஸ்ரோறண்'டில கதைச்சனான். உன்னை நாளைக்கு வேலைக்கு வரட்டாம். நல்ல சம்பளம் தருவாங்கள் மச்சான். மற்றது மச்சான் நாளைக்கு வேலைக்கு வரேக்க உந்த மீசையை வழிச்சுப் போட்டு வா. இங்க மச்சான் சில 'பத்திறோன்' மாருக்கு மீசை வச்சிருந்தா பிடிக்காது." எண்டு சொல்லிப்போட்டு "இந்தா மச்சான் உனக்கொரு கடிதம் வந்திருக்கு" எண்டு கடிதத்தை என்னட்ட தந்தான்.

எனக்கு அழுகைதான் வருகுது. மீசையை வழிச்சால் தான் வேலைக்குப் போகலாம் எண்டு சொல்லுறான். அப்ப நான் இனி பாரதியார் மாதிரி மீசை வைச்சிருக்க ஏலாதா? மீசையை முறுக்கிக் கொண்டு பாரதியார் மாதிரி நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு கையை விசுக்கி விசுக்கி நடக்க ஏலாதா?

கையிலிருந்த கடிதத்தை உடைச்சன். ஐயா தான் எழுதியிருக்கிறேர். கடிதத்தோட ஒரு 'நோட்டிசும்' இருக்கு. என்ர தம்பிக்கு முதலாம் ஆண்டு வீர அஞ்சலி செலுத்தி எங்கிட ஊர் மக்கள் 'நோட்டிஸ்' அடிச் சிருக்கினம். தம்பியின்ர படம் பெரிசாய் போட்டிருக்கு. படத்தில தம்பி சிரிக்சுக் கொண்டிருக்கிறான். அவனுக்குப் பெரிய மீசை.... முறுக்கு மீசை... சரியாப் பாரதியாற்ற மீசை மாதிரி.

# 'பஸ்ஸுக்குள்ளே இன்னாருன்னு சொன்னாப் புரியுமா?'

-கிண்ணியா அமீரலி-

முன்னால் போய்க்கொண்டிருந்த மெளன தேவதைக்குப் பின்னால் மேத்தாவின் இந்தக் கவிதை வரிகள்.... சேலைத் தலைப்பில் ஞாபகமாய் ஆடியது:

'இதயத்தில்...
முரட்டுத்தனமாக
மோதிவிட்டு-
நளினமாகப் போகின்ற
சில—
நைலோன் மயக்கங்கள்....!'

ரமேஷ் அவளைப் பின் தொடர்ந்தான்.

அவள் எங்கே நடந்தாள்...?

மாங்கனி காவியத்தின் பத்தொன்ப தாம் பக்கத்திலிருந்து கண்ணதாசன் சிரித்தார்:

'சித்திரத்தாள் அடிச்சுவட்டைத்
தேடிப் பார்த்தான்...
தென்றலது போனதற்குச்
சுவடு ஏது?'

ரமேஷ் அவளை விடுவதாக இல்லை.

தெருவின் திருப்பத்தில்- அவளது அழகு நெளிந்தது...

கெளரிதாசனின் விருத்தத்தில்:

'தெருவில் நடக்கையிலும்
தேர்போல அசைந்துவரும்
உருவில் எழிலுடைய
ஒய்யார மெல்லிடையர்
அருகில் நெருங்குகையில்
அளிக்கின்ற புன்சிரிப்பில்
பருவம் தடுமாறும்
பதைப்புவரும் உன் நினைப்பில்!'



மெல்லத் திரும்பினாள் அவள். உடனே 'நான்' ஆகினான் அவன்:

'முன்னழகைப் பார்த்திருந்தால்
மோகவேறி ஓங்கிவிடும்!
பின்னழகைப் பார்த்திருந்தால்
பைத்தியமாய் ஆக்கிவிடும்....
மார்பழகைப் பார்த்திருந்தால்
மாறாத போதை தரும்!
கண்ணழகைப் பார்த்திருந்தால்...
காலமெலாம் கவிதை வரும்!!!'

வரிசைக்கிரமமாக அவளை வர்ணித் துக் கொண்டே போகலாம். நேரம் போகிறது.

ஏதோ ஒரு காரியாலயத்தின் எவனோ ஒரு சிடுமூஞ்சியின் என்னென்னமோ... வார்த்தைகளை வீணாக... அவள் ஏன் கேட்க வேண்டும்?

8.30க்கு முன் வரவுப் பதிவேட்டில் ஒப்பமிடும் அவசரம்அவளது முகக்கடிகார விழி முள்ளில் துடித்தது.

பஸ், பாய்ந்தடித்து ஏறினாள். ரமேஷையும் இடித்துக்கொண்டு- ஒரு தடியனும் ஏறினா(ர்)ன். அவளுக்கு அருகில் மிக நெருக்கமாய் நின்று கொண்டா(ர்)ன்.

பஸ்- சுதந்திர சதுக்கத்தில் திரும்பியது. மூச்சு விடக்கூட முடியவில்லை. அந்த நெரிசலில் கூட அவள் நெருங்காமல் நின்றாள். ரமேஷ் அவ்வளை மெல்ல நெருங்கினான்.

தடியன் அவளை உரச...

அவள் திரும்பி முறைக்க...

ரமேஷுக்கு அடக்க முடியவில்லை.

ஆங்கிலத்தில் அதட்டி.. சிங்களத்தில் சினந்து... தமிழில் சீறினான்:

"நீயெல்லாம் அக்கா தங்கச்சியோட பொறக்கல்லியாடா... பஸ்ஸுக்குள்ளே பொம்புளய உரசுறே?"

தடியன் 'என்னடா சொன்னே'- சொல்வதற்குள்...அவள் தடுத்தாள்: "வேணாங்க.. விட்டுறுங்க..."

தடியன் ரமேஷை உலுக்கி... முறைத்துச் சொன்னான்:

"என்ட மனுஷியை நான் உரசாமல்... நீரா ஓய் உரசுவீர்?"

## கத்தரித்த கடி ஜோக்ஸ்

ஆசிரியர்: கரடிக்குக் கண் தெரியுமா?
மாணவன்: எனக்குத் தெரியது சேர்.
ஆசிரியர்: கரடிக்குத்தெரியுமான்னுதான் கேட்கிறேன்.

□□

ஒருவர்: உங்க கதையில உயிரே இல்லையே.
எழுத்தாளர்: இது ஆவி உலகத்துக் கதையாச்சே அதுதான்.

□□

பாபு: அந்த மத்தாப்பு கடைக்காரரிடம் மத்தாப்பு வாங்கப்போனியே, ஏன் வாங்காம திரும்பி வந்திட்டே?
கோபு: எரிஞ்சு எரிஞ்சு விழுறார்.

□□

அவர்: என் பையன் எள்ளுன்னா. எண்ணையா வந்துநிப்பான்.
இவர்: அப்படின்னா... சொன்ன பேச்சைக் கேக்க மாட்டான்னு சொல்லுங்க.

□□

ஒருவர்: அதோ அதில போறவர் இனி எப்பவும் என்னை மறக்கவே மாட்டர்.
மற்றவர்: அவ்வளவு நட்பா?
ஒருவர்: இல்ல... அவரிட்ட நூறுரூபா கைமாத்து வாங்கியிருக்கிறன்.

□□

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# இலக்கிய நயம்

## ரசிகன் தரும்

# சொல்லாமல் போனது ஏன்?

துள்ளித் திரிந்த மான் அவள். துவண்டு போனது ஏன் அவள்?

காதலெனும் சிறகு விரித்து பறந்து திரிந்த வெண் புறா!

குளிரில் நடுங்கி சிறகொடுங்கி போனதுபோல் சுருங்கியது ஏன் என்ற வினா!

ஆகாய மார்பில் அழகாய் தவழ்ந்த நிலா அவள்!

அந்த நிலாவை பிடித்து இருளில் பூட்டிய பொல்லாங்குக் கரம் எவருக்குச் சொந்தம்?

இத்தனை வினாவும் ஒட்டுமொத்தமாய் உற்பத்தியான இடம் தோழியின் மனம்!

காரணம், மஞ்சத்து மீதில் கொடியில் இருந்து கொட்டிய மலராய், வெளுப்பதற்காக கசக்கிப் பிழிந்து போடப்பட்ட துணியாய், சுட்டெரிக்கும் வெய்யில் காலத்தில் வற்றிய குளமாய் வனப்பிழந்து, கோலச் சிரிப்பிழந்து கிடந்தாள் தலைவி!

தான் வந்த செய்தி அறிவிக்க செருமினாள் தோழி.

ஒரு தரம்...இரண்டாவது தரம்.... மூன்றாவது தரமாய் செருமியபோதுதான் சித்திர விழி முகத்தாள் கழுத்தின் பத்திரம் காப்பதுபோல் மெல்ல- மிக மெல்லத் திரும்பிப் பார்த்தாள்.

"அடியே வாடி!" என்றழைத்து வெள்ளைப் புன்னகை இதழில் ஆட்சி நடத்தும் காட்சி தெரியுமே முன்னர்!

ஆட்சியை பறிகொடுத்த மன்னன் போல் அன்றோ இப்போது காட்சி தருகின்றன இவள் கனியிதழ்கள்!

தோழி நினைத்துக்கொண்டாள்.

சோகம் தன் மனதிலும் நிறைத்துக் கொண்டாள்.

"எப்போதடி வந்தாய்?"

சுரத்தேயில்லாத கேள்வி!

வாடிய சரம்போல நேச வாசமே இல்லாத குரல்!!

"அப்போதே வந்துவிட்டேன்!"

"எப்போதே?"

"உடல் மட்டும் பஞ்சணையில். உன் மனம் மட்டும் வேறேதோ சிந்தனையில் என்று நீ இருந்த நிலையில்!"

மஞ்சத்தில் இருந்து சற்றே நிமிர்ந்தாள். வாடிய மரத்தில் எப்படி வனப்பிழக்காத இரு கனிகள்?! என்று சிந்தித்து வியக்க அவள் எதிரே இல்லையே காதலன்!

"வா! அமர்!"

"முற்றாகிவிட்டதோ மனச் சமர்?"

"கேலியா தோழி?"

"குளிரில் நடுங்கும் கோழியாக கோலமிழந்து கிடக்கிறாய் நீ. இதில் என்ன வேண்டிக் கிடக்கிறது கேலி?"

தன் வேதனையில் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டாள் தோழி. அதனைப் புரிந்துகொண்டு;

"வாடி. இரு! சொல்கிறேன்."

"வாடி இரு என்று விடுக்கிறாய் அழைப்பு! ஆனால் நீ வாடியிருக்கிறாயே அது ஏன் என்பதுதானடி என் நினைப்பு!"

சோகம் கலந்த குரலில் சொல்லியபடியே அருகே வந்தமர்ந்தாள் தோழி.

கண்ணீரில் நனைந்து இன்னமும் காயாத இமைகள் படபடக்க தலைவி சொன்னாள்,

"விடைபெற வராமல் படை முகம் நோக்கி நடையைக் கட்டிவிட்டாரடி அவர்!"

"உரைத்துப் பார்க்காமல் தங்கம் அவர் என்று உருகினாயே வேண்டுமடி உனக்கு!"

"இப்போதும் சொல்கிறேனடி, தரணியில் தனக்கு நிகர் எதுவுமற்ற தங்கமடி அவர் குணம்!"

தோழி விழி விரித்துப் பார்த்தாள்.

"நன்றாக இருக்கிறதடி கதை! காது குத்தாத யாருமிருந்தால் போய் சொல்லு; அவர்கள் கொடுப்பார்கள் உன் கதைக்குக் காதை!"

"புரியாமல் பேசுகிறாய்!"

"உன்மீது பரிவிருப்பதால்தான் பேசுகிறேன்!"

"தெரியுமடி! பரியை நரியென்பதுபோல் பழியும்மன்றோ சொல்கிறாய் அவர்மீது!"

"அதென்னடி அவர்? பொல்லாத அவர்! பொழிகிறாளாம் இவள் நேசத்தை!"

தலைவி இவள் இன்னும் காதலனை வியப்பது வெட்டிப் பேச்சு என்றும் நினைத்தாள்.

"விடை பெறலாம் என்று வந்தாரடி நேற்றிரவு!"

தோழி மெல்லிய புன்னகையை இதழில் நெய்தபடி,

"வந்தது கனவில்தானே?"

"இல்லையடி கண் எதிரே நேராக! அந்த வெண்ணிலவும் சாட்சியடி!"

தோழிக்கு குழப்பம்.

"நீதானே சொன்னாய். சொல்லாமல் போனார் என்று."

"உண்மையைத்தானடி உரைத்தேன்"

தோழி தலை முடியைப் பிய்த்துக் கொள்ளலாமோ என்று நினைத்தாள்.



தோழி சலித்துக் கொண்டாள். சோம்பலாய் நெட்டி முறித்துக்கொண்டாள்.

"அடி அம்மாடி இனியும் நீ பேசினால் என்னை ஊரார் பைத்தியம் என்று பேசும் நிலைதான் எனக்கு வந்து சேருமடி!"

"ஏனடி அவசரப்படுகிறாய்? விடைபெற வந்தார். என் நிலை கண்டு ஏற்பட்ட பரிவால் பிரிவென்ற சொல்லை உதிர்ப்பது சரியல்ல என்று கனிவான தன் மனதால் நினைத்திருப்பாரடி என் நேசர்!"

"ஏன் உன் நிலைக்கு என்ன நேற்று?"

"முரசறைந்த சப்தம் நுழைந்தது என் செவியில்! வந்தது போர் என்று நொந்தது என் நெஞ்சம்! யுத்தம் என்ற சொல் கேட்டதும் அவருமன்றோ செல்லப் போகிறார் என்று சொன்னது சித்தம்! துடித்தது இதயம். துடிப்பின் இடையிலும் தேறுதல் சொன்னது மனம்!"

"அது என்ன தேறுதல்?"

"அவர் இதயம் இருப்பது என்னிடமே. அதனால் அவர் செல்ல நினையார் வேறிடமே"

"பொய் நெய்த்து நீ மெய் கலங்காமல் காத்து நின்றதாக்கும் மனம்!"

"பிரியார் என்று மனம் சொன்னபோதும், என் பிரியம் அவர் வீரம் வாடக் காரணமாகி விடுமோ என்ற கவலையுமன்றே கவிந்தது. அதனால் சோர்வும் சூழ்ந்து கொண்டது"

"குழப்புகிறாய் நீ. உன் நிலை போதும் அவர் நிலை என்ன? அதில் நீ கண்ட நியாயம் என்ன?"

"பிரிவு என்ற சொல் கேட்டால் பேரிடி போல் இருக்கும் எனக்கென்று அவர் நினைத்தார். அதனால் சொல்லாமல் மறைத்தார்."

"பின் எதற்கு கிடந்து தவிக்கிறாய் நீ? கண்ணீர் வடிக்கிறாய் நீ?"

"அவர் நினைப்பும் என் நினைப்பும் பொருதியதின் காரணத்தால் பாழும் என் நெஞ்சத்தில் நல்ல பாம்பு கடித்ததுபோல் வலி பெருகி வதைக்கிறதே! என் செய்வேன்! விழி நீர்தான் வலி வருடி குணமாக்கும். இல்லையில்லை குணமாக்க முயன்று பார்க்கும்"

சோகம்தான். துரத்திட முடியா துயரம்தான்.

இதனைத்தான், இந்தக் காட்சியைத் தான் குறுந்தொகையில் ஒரு பாடலில் காட்டுகிறார் ஔவையார்.

**"செல்வார் அல்லர் என்றுயான்**
**இகழ்ந்தனனே**
**ஒல்வாள் அல்லள் என்று அவர்**
**இகழ்ந்தனரே**
**ஆயிடை இரு பேராண்மை செய்த பூசல்**
**நல் அராக் கதுவி யாங்கு என்**
**அல்லல் நெஞ்சம் அலமலக் குறுமே"**

## குறுக்கெழுத்துப் போட்டி இல-76

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | |
| 3 | | | ■ | 4 | | ■ |
| | ■ | ■ | 5 | | | |
| ■ | 6 | | ■ | | | ■ |
| 7 | | ■ | 8 | | ■ | 9 |
| 10 | | | | ■ | 11 | |
| | | ■ | 12 | | | |

### இடமிருந்து வலம்

1. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் இதற்கான சபை உருவாக்கப்பட்டது.
2. இதில் ஏழரை தொல்லைப்படுத்தும் என்பார்கள்.
3. நம்மைச்சுற்றி இவையும் உண்டு.
5. காந்திக்குப் பிடித்தது.
6. இதன் ஓசைகள் ஓயவேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள்.
10. பணம் வந்தால் சிலருக்கு இதுவும் வந்து விடும் என்பார்கள்.
11. கூட்டாளியை இப்படியும் அழைப்பார்கள்.
12. நாமும் இங்குதான் வாழ்ளகிறோம்.

### மேலிருந்து கீழ்

1. இதன் உள்ளேயும் முத்துக்கள் உண்டு.
2. பரம்பரை என்றும் அழைக்கலாம்.
4. வரும்மாதம் இந்தப் பண்டிகை வரும்.
6. புகழப்படும்போதும் சிலருக்கு இது வந்துவிடும்.
7. இதனால் விபரீதங்களும் ஏற்படுவதுண்டு.
8. விஞ்ஞானப் பரிசோதனைக் கூடங்களில் அதிகமாகக் காணப்படும்.
9. பாசறையையும் இப்படி அழைக்கிறார்கள்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 26.11.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-76**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல. 1772**
**கொழும்பு.**

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-74க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ஏ | ■ | 2 தூ | க் | க | ம் | ■ |
| 3 க | டி | வா | ள | ம் | ■ | 4 த |
| லை | ■ | ன | ■ | 5 மி | 6 தி | லை |
| வ | 7 த | ம் | ■ | ■ | ர | வி |
| ன் | க் | ■ | 8 து | ற | வி | ■ |
| ■ | 9 கா | லை | ■ | 10 ம | ய | ன் |
| 11 கு | ளி | ர் | மை | ■ | ம் | ■ |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.74இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. கே.ரவீந்திரகுமார் தெஹிவளை.
2. செல்வி.எஸ்.தேவிகாராணி மாத்தளை.
3. எம்.முஸம்மில் களுத்துறை.
4. செல்வி.ஈ.ரீட்டா மஸ்கெலியா.
5. பஸ்லியா ஹாஜாமுகைதீன் திருமலை.
6. சுதர்ஷன் கண்டி.
7. அட்சரா கொலன்னாவ.
8. எம்.நௌஷாத் புத்தளம்.
9. எஸ்.றிபாயா கல்முனை.
10. ரஞ்சனா நவரத்தினம் மட்டக்களப்பு.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

ஸ்போர்ட்ஸ்

# கபிலின் ஓய்வு!

## சாதித்தபின் அமைதி!



கபில்

உலக சாதனையாளரும் இந்தியக் கிரிக்கெட்டின் இணையற்ற வீரருமான கபில்தேவ் முதல் தரக் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்றுவிட்டார்.

இம்மாதம் 2ம் திகதி மாலை டில்லியில் நடந்த செய்தியாளர்கள் கூட்டத்தில் முதல் தரக் கிரிக்கெட்டிலிருந்து தாம் ஓய்வு பெறுவதாக கபில்தேவ் அறிவித்தார். அப்போது இந்திய அணி வீரர்களும் உடனிருந்தனர்.

35 வயதான கபில், இந்திய அணிக்காக 17 ஆண்டுகள் விளையாடியிருக்கிறார். நான்கு வருடங்களுக்கு மேலாக அவர் இந்திய அணிக்குத் தலைமை தாங்கியிருக்கிறார். 131 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 434 விக்கட்டுக்களை வீழ்த்தி, உலகிலேயே அதிக டெஸ்ட் விக்கட்டுக்களைக் கைப்பற்றிய ஒரே வீரர் என்ற அரிய சாதனைக்குச் சொந்தக்காரராகத் திகழ்கிறார். அத்துடன் டெஸ்ட் போட்டிகளில் 5348 ஓட்டங்களை எடுத்த பெருமையும் கபில்தேவுக்கு உண்டு.

225 ஒரு தினப் போட்டிகளில் விளையாடி 253 விக்கெட்டுக்களை சரித்துள்ள கபில், ஒருதின ஆட்டங்களில் மட்டும் 3783 ஓட்டங்கள் எடுத்திருக்கிறார். ஒருதினப் போட்டியிலும் அதிக விக்கட்டுக்களை வீழ்த்திய வீரர் என்ற வகையில் கபில் உலக சாதனையைத் தக்க வைத்திருந்தார். அண்மையில் இந்தச் சாதனை பாகிஸ்தானின் வாஸிம் அக்ரம் மூலம் முறியடிக்கப்பட்டது.

"எனது கிரிக்கெட் வாழ்க்கையில், 1983ல் உலகக் கோப்பையை இந்தியாவுக்கு வென்று கொடுத்ததைத்தான் பெருமைக்குரியதாகக் கருதுகிறேன்." என்று தமது ஓய்வு அறிவிப்பை வெளியிட்டபோது கபில் சொன்னார்.

"17 வருட கால கிரிக்கெட் வாழ்க்கை எனக்கு முழுத் திருப்தியை அளித்திருக்கிறது. எவர்மீதும் எனக்கு வருத்தம் கிடையாது. முழு மன நிறைவுடன் ஓய்வு பெறுகிறேன். இந்திய அணியில் விளையாடும் இளம் வீரர்கள் மேலும் சிறப்பாக ஆட எனது வாழ்த்துக்கள்," என்று கூறிய கபில், இந்தியக் கிரிக்கெட்டின் மேம்பாட்டிற்காக எந்த வகையிலும் உதவி செய்யத் தயாராக இருப்பதாகவும் சொன்னார்.

"உங்கள் முடிவு இறுதியானதுதானா?" என்ற கேள்விக்கு,

"இதுதான் இறுதியான, உறுதியான முடிவு. நிச்சயம் மீண்டும் விளையாட வரமாட்டேன்", என்று கபில் சொன்னார்.

இந்தியாவுக்கும், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் இடையில் கடந்த மாதம் 17ம் திகதி பரிதாபாத்தில் நடந்த முதல் ஒருதினப் போட்டியே கபில் விளையாடிய கடைசிப் போட்டி. அந்த ஆட்டத்தில் அவர் 5 ஓவர்கள் பந்து வீசினார். விக்கெட் எதுவும் எடுக்கவில்லை. 12 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

ஸ்ரீகாந்த், ரவிசாஸ்திரி ஆகியோர் வரிசையில் கபிலும் தொலைக்காட்சி வருணனையாளராக செயற்பட்டு வருகிறார். இந்தியன் எயார்லைன்ஸ் நிறுவனமும் விளையாட்டு மேம்பாட்டு ஆலோசகராகப் பணியாற்றுவதற்கு கபிலுக்கு அழைப்பு விடுத்துள்ளது. கபிலும் இதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளார்.

www.padippakam.com
நன்றி - நூலகத் திட்டம்

# மகாபாரதம்

அங்கம் 55

**இவ்வாரம் (20.11.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்: சூழ்ச்சியும் சூதும் சகுனியின் பாதை. சதுரங்க ஆட்டத்தில் தோல்விகள் வரினும் தொடர்ந்தே ஆடிடும் ஆசை ஆறாது. பாண்டவர் மீது கொண்ட பொறாமை சகுனியின் கண்களை மறைத்தே விட்டது. திருதராட்டிரன் பிறவியில் குருடன். காந்தாரியும் கண்களைக் கட்டி கணவருக்காகப் பார்வையைத் துறந்தவள். துரியோதனனோ தன் செயல் தன்னால் தருமத்தின் பாதையைத் தானே தவிர்த்தனன். திரௌபதிதன்னை தீய நோக்குடன் அணுகிய சிந்து நாட்டின் அதிபன் பாண்டுபுத்திரரின் தண்டனையேற்று நலனெனத் தகிக்கிறான்- பழிவாங்கும் எண்ணத்தில் பரமனைத் துதிக்கிறான்.

-காட்சி தொடக்கம்-

நள்ளிடத்தில் வருவதாகத் தகவல் அனுப்பிய சிந்து மன்னன் உரிய நேரத்துக்கு வராதமையினால் அவனைத்தேடி கானகத்தில் துரியோதனன் இரதத்தில் வருகின்றான். ஜெயத்ரதன் மரத்தடியில் தவத்திலிருக்கக் கண்டு அவனருகே செல்கின்றான்.

துரி: சிந்து மன்னா ஜெயத்ரதா! என்ன இது தவக்கோலம்?

ஜெய: துரியோதனா நண்பா! காண்பது நீ உந்தன் முன்னாளின் நண்பனல்ல! அவனுருவில் காண்பதெல்லாம் ஜெயத்ரதன் சடலம்தான். உள்ளத்தால் உருக்குலைந்து உக்கிப் போனேன் நான். என் தலையைப் பார்த்தாயா? என் இரத்தம் உறிஞ்சும் கொடிய சர்ப்பம் போல் ஆங்கு ஐந்து குடுமிகள் என்னை ஆட்டிப் படைக்கிறதே!

துரி: எந்தன் ஆணைக்குள் அடங்கியுள்ள இவ்விடத்தில் உந்தனை இழிவு செய்த இழி குலத்தோர் யார் கூறு.....!

ஜெய: உன் இதயத்தை உடைத்த அந்த உன்மத்தர் பாண்டவர்தான்!

துரி: தங்களது தங்கையின் கணவரென்ற கணிப்பும் கடுகளவும் கருதாது கயமை புரிந்தனரா? நிச்சயமாய்ச் சொல்கிறேன்! இச்செயலுக்கு ஏற்ற கடுந்தண்டனை கொடுப்பேன்!

ஜெய: துரியோதனன் அவரை மன்னித்தாலும் இந்த சிந்து மன்னன் என்றும் மன்னிக்கவே மாட்டான். என் தலையில் அவர் வைத்த ஐந்து குடுமிகளும் அந்த ஐவருக்குமான மரண சாசனங்களாகும். பழி வாங்காமல் என்னுள்ளப் பச்சைப்புண் ஆறாது!

துரி: துஷாலாவின் கணவனுக்கு துர்மதியாளர் விளைத்த துன்பச் செயலுக்கவர்கள் தக்க தண்டனை பெறுதல் தவறாது நடந்தேறும்! கவலைதனை விடுத்து கானகத்தை நீக்கி எந்தன் நகருக்கு வா நண்பா!

ஜெய: என்னைத் தடுக்காதே எனதருமை நண்பனே! பாண்டவரை வெற்றி கொள்ள பரமேசுவரன் பதத்தை வேண்டித் தவமியற்றி வரங்களைப் பெற்றிடுவேன்! ஓம் நமசிவாய! ஓம் நமசிவாய! ஓம் நமசிவாய!.....

-காட்சி மாற்றம்-

கைலாயத்தில் சிவபிரான் நிஷ்டையிலிருக்கையில் பார்வதி அவரை அணுகுகிறார்.

பார: பரம் பொருளான தங்கள் பதம் பணிந்தேன் பிரபு! பெருங்கவலை ஒன்று படருவது கண்டு பேதலிக்கிறேன் சிவமே!

சிவன்: சிந்து நாட்டுக்கரசன் ஜெயத்ரதன் என்னை நோக்கித் தவமியற்றுகிறான். பாண்டவரை வெல்லுதற்கு வர மருள வேண்டுகிறான்.

பார: சத்தியத்தையும் தர்மம் அத்தனையையும் தமது இலட்சியமாய்க் கொண்டவர்கள் பாண்டவர்கள். நாராயணன் தன் நன்மதிப்பையும் பெற்ற நல்லவர்கள் அவர்கள். அவர்களுக் கெதிராக எந்த வரந்தனையும் சிந்து நாட்டு மன்னனுக்கு வழங்கிடவே கூடாது!

சிவன்: என்னை நினைந் தெவரேனும் ஏற்ற தவமிருந்தால் அன்னவரை ஆதரித்தல் என்னுடைய கடமையன்றோ! பொறுத்திருந்து பார் சக்தி! குருதிப் பெருங் கடலைக் கடையும் நாள் விரைந்து வரும்!

-காட்சி மாற்றம்-

வனத்தில் பாஞ்சாலியுடன் பாண்டவர்.

<u>பின்னணிப் பாடல்:</u>

சதுரங்கமெனும் சூழ்ச்சி
வலைதனிலே வீழ்ந்தவர்கள்
விதி வழி தனையேற்று
வெங்கானகம் புகுந்தே
பன்னிரண்டு ஆண்டுகளைப்
பக்குவமாய்க் கடத்தியபின்
பதின்மூன்றா மாண்டதனில்
கரந்துறையத் துணிந்தனரே!

□□□

திரௌ: களைப்பதிகமாகிறது. சற்றுத் தரித்திருந்து போகலாமே! தாகம் எடுக்கிறது தண்ணீர் கிடைத்திடுமா?

யுதிஷ்: அமர்ந்து கொள் பாஞ்சாலி! தம்பி சகாதேவா! தண்ணீர்த் தடாகமேதும் கண்ணில் படுகிறதா? தாவி மரமேறிப் பார்த்தறிவாயப்பா!

சகாதேவன் தனது வில்லை அர்ச்சுனனிடம் தந்து விட்டு மரத்திலேறுகிறான்.

யுதிஷ்: தலைமறைவாய் வாழ்கின்ற காலம் இதுவன்றோ? துரியன் எமைக் கண்டு கொள்ள ஒற்றர்களை ஏவிடுவான்! என்னருமைத் தம்பிகளே! எவ்வாறு மறைந்திருப்பீர்? ஏக்கம் எனை வாட்டுறது.

நகுல: என் அண்ணா பீமன், அருமையாக எத்தகைய அடுப்படியிலும் புகுந்து அறுசுவை உண்டிகளை அமுதமாகச் சமைப்பார்.

எல்லோரும் சிரிக்கின்றனர்.

திரௌ: ஆமாம்! அடுப்படியில் அவர் புகுந்து சமையல்பணி புரிந்தால் ஆண்டொன்று போவதையே அளவிட்வும் முடியாதே!

யுதிஷ்: பீமனை கிண்டல் செய்தல் ஆகாது பாஞ்சாலி! இருப்பினும் அந்த ஆலோசனை ஒன்றே அருமையான பொருத்தம்!

நகுல: மாடு மேய்க்கும் தொழிலை சகாதேவன் ஏற்கட்டும்! குதிரைகளை அடைக்கும் கொட்டில்தனை நான் பார்ப்பேன்!

திரௌ: அரசவை ஒன்றில் உங்கள் மூத்தவர் சேர்ந்திடலாம். ஆனால் காண்டீபன் எவ்வாறு கரந்துறையப் போகின்றார்?

மறுபடியும் எல்லோரும் சிரிக்கிறார்கள். இதேவேளையில் சகாதேவன் மரத்தில் ஏறிப் பார்க்கிறான்.

சகா: தொலை தூரத்தில் ஆங்கே பசுமை படர்ந்துள்ளது. கொக்குகளும் சுற்றி வட்டமிடுவதனால் தண்ணீர்த் தடாகம் அங்கே நிச்சயமதாயிருக்கும்.

யுதிஷ்: தம்பி நகுலா! கொஞ்சம் தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்துதருவாயாக?

நகுலன் புறப்படுகிறான். தடாகத்தை அடைந்து இருகைகளிலும் தண்ணீரை அள்ளிக்குடிக்க முயலும்போது ஒரு பயங்கரச் சப்தம் கேட்கிறது.

குரல்: குடிக்காதே நீரை! நான் விடுக்கும் வினாக்களுக்குத் தக்கவிடை தந்ததன்பின் தண்ணீரை பருகலாம் நீ!

நகுல: தண்ணீரைக் குடித்தால் என்ன செய்யப்போகின்றீர்?

குரல்: முடியுமானால் குடித்துப் பார்!

நகுலன் நீரைக் குடிக்கிறான். கீழே விழுந்து உயிர் துறக்கிறான். நீண்ட நேரம் நகுலனைக் காணாத சகோதரர்கள் அமைதி இழக்கின்றனர்.

யுதிஷ்: தம்பி சகாதேவா! தண்ணீர் எடுத்து வரச் சென்ற தம்பி நகுலன் இன்னும் வரவில்லை! தாமதத்துக்கான காரணமும் தெரியவில்லை! போய்ப் பார்த்து வருவாயா?

சகா: போகின்றேன் அண்ணா!

சகாதேவனிடமும் அதே குரல் அதே கூற்றை கூறுகிறது. பொருட்படுத்தாமல் தண்ணீர் பருகி சகாதேவனும் உயிர் விடுகிறான். இவ்வாறு அர்ச்சுனனும் தண்ணீரைப் பருக முயலுகையில் மடிகிறான். யுதிஷ்டிரர் பீமனை அனுப்பிவைக்கிறார். குளத்தருகே தனது தம்பிமார் மூவரும் இறந்து கிடப்பதைக் கண்டு பதறுகிறான் பீமன்.

பீமன்: எனதருமைத் தம்பியரை இக்கதிக் குள்ளாக்கியவன் எவனாகவிருந்தாலும் இக்கணமே வந்துவிடு......!

அப்போது பெரும் பூதம் ஒன்று தோன்றுகிறது.

பூதம்: உன்னையும் தான் எச்சரித்தேன்! என் வினாக்களுக்கேற்ற விடைதனைக் கூறிவிட்டு வேண்டிய நீரை எடுத்துக் கொள்!

பீமன்: சற்றே பொறுத்திடப்பா! என்தாகம் தணிந்த பின்னர் எனதருமைத் தம்பிகளைத் தீர்த்துக்கட்டிய உனக்கு தக்க தண்டனை தருவேன்!

இவ்வாறு கூறிய பின் பீமன் தண்ணீரை அள்ளிப் பருகும்போதே வீழ்ந்து மடிகிறான். இறுதியில் யுதிஷ்டிரன் அங்கே வந்த தனது தம்பிமாருக்கு நேர்ந்த கதி கண்டு கலங்குகிறார்.

யுதிஷ்: (மனதில் எண்ணுவதாக) தம்பிமாரின் உடம்பில் காயங்கள் காணவில்லை. தண்ணீரில் நஞ்சு இருப்பதாகத் தெரியவில்லை. சகுனிமாமாவின் சூழ்ச்சி இங்கேயும் இருக்கலாமோ? எனதருமைத் தம்பியர்க்கு இந்த நிலை நேர்ந்தமைக்கு என்ன காரணம் என்று அறியத்தான் வேண்டும்!

இவ்வாறு தன்பாட்டில் எண்ணிய யுதிஷ்டிரர் தண்ணீரைப் பருக முயற்சிக்கையில்.....!

பூதம்: தண்ணீரைப் பருகாதே! என் கேள்விகளுக்கேற்ற பதில்களைக் கூறிவிடு- தடையின்றிக் குடித்திடலாம்!

யுதிஷ்: (கூப்பிய கரங்களுடன்) யாரையா நீர்? உருத்திரனா இல்லை அந்த அனந்த சயனனா அன்றிப் பிரம்மனவன் தானா?

பூதம்: அவரெவருமிங்கில்லை. இங்கே நானே தான் இந்த நிலத்துக்கே உரித்துடையோன்! வினாக்களை நான் கேட்பேன். தக்கவிடைதந்து விட்டு தண்ணீரைக் குடித்திடலாம்!

யுதிஷ்: வினாக்களைக் கேட்டிடுக. முடியுமானால் பதிலிறுப்பேன்.

பூதம்: பூமிதனை மிஞ்சும் பாரமென்ன?

யுதிஷ்: அன்னை!

பூதம்: வானுக்கும் உயர்ந்தவன் யார்?

யுதிஷ்: தந்தை!

பூதம்: காற்றைவிடக் கனவேகம் கொண்டது தான் எதுவோ?

யுதிஷ்: மனதுதான் வேகம் கூடியதுவாகும்!

பூதம்: எண்ணில் அடங்காதது...?

யுதிஷ்: எண்ணம் தான்!

பூதம்: இறுதிகாலத்தில் வரும் துணைதான் என்ன?

யுதிஷ்: அப்போது துணைநிற்கும் தர்மமது?

பூதம்: கடமை, புகழ், சொர்க்கம், மகிழ்ச்சி இவற்றின் பிரதான நிலை என்ன?

யுதிஷ்: கடமைக்குப் பிரதானம் தகைமை! புகழுக்கு வழிகாட்டும் தர்மம்! சொர்க்கத்தைக் காட்டுவது சத்தியத்தின் பாதை! மகிழ்ச்சிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்!

பூதம்: மனிதனின் ஆத்மா?

யுதிஷ்: மகனாகும்!

பூதம்: உலகினை மறைப்பது?

யுதிஷ்: அறியாமை.

பூதம்: ஊக்கமின்மை என்றால்?

யுதிஷ்: கடமை தவறுதலாம்.

பூதம்: மகிழ்ச்சி உடையவன் யார்?

யுதிஷ்: பிறருக்குக் கடமைப்பாடற்றவன்!

பூதம்: பரிசுத்தம் எனப்படுவது?

யுதிஷ்: உள்ளத்தின் தூய்மை.

பூதம்: மையைவிட இருண்டது?

யுதிஷ்: இழுக்குத் தரும் களங்கம்.

பூதம்: உலகில் சிறந்த மார்க்கம் எதுவோ?

யுதிஷ்: உயிரினங்களிடம் காட்டும் கருணை!

பூதம்: கட்டுப்பாடற்ற எதனால் துயரம் பெருகும்?

யுதிஷ்: மனதைக் கட்டுப்படுத்தாவிட்டால் மனத்துயர் பெருகும்.

பூதம்: அடக்கம் என்பதன் அர்த்தம் என்னவோ?

யுதிஷ்: வேண்டாதனவற்றில் வீண் தலையீட்டைத் தவிர்த்தல்.

பூதம்: கருணைக்குரிய கருத்தைக் கூறுக.

யுதிஷ்: எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே!

பூதம்: ஒரு தேசம் அழிவுறக் காரணம் யாதோ?

யுதிஷ்: தோல்வியைத் தழுவுதல்.

பூதம்: அந்தணனுக்கான அடையாளம் என்னவோ- குலமா? குணமா? வேதத் தெளிவினால் பெற்ற அறிவதா?

யுதிஷ்: குலத்தாலோ குணத்தாலோ வேதத்தை ஓதிப்பெற்ற பேரறிவாலோ எவனும் பிராமணனாக மாட்டான். நடத்தையே ஒருவனை அந்தணனாக்கிடும். உயர் குடிப் பிறந்தும் உதவாக் குணங்களை அணைத்தவன் எவனும் அந்தணனாகிட அருகதையற்றவன்.

பூதம்: மார்க்கம் என்பது சிந்தனை ஊற்றா? மாமுனிவோரின் எண்ணத் தொகுப்பா?

யுதிஷ்: மதங்களின் உண்மைகள் முற்றும் உணர்ந்திடும் முழுமை பெற்ற முனிவரே இல்லை! அவர்களின் சிந்தனை ஒருவர்க்கொருவர் மாறுபட்டிருக்கும்!



பூதம்: மதங்களின் உண்மைகள் மறைந்தது எங்கோ?

யுதிஷ்: மனிதனின் இதயக் குகைகளுக்குள்ளே!

பூதம்: அகிலத்தில் மேலாம் அதிசயம் என்னவோ?

யுதிஷ்: இறப்பது ஒன்றே இகமதில் உண்மை என்பதை மறந்தே இகபரசுகமே இன்பமென்றெண்ணி அதுவே நிலைத்திடும் என்பதை நம்புதல் இத்தலந்தன்னில் அதிசயமாகும்!

பூதம்: பாரத நாட்டின் பண்புக்குரியவா! அத்தனை வினாவையும் அறிவினால் ஆய்ந்து அற்புதமான விடைகளைத் தந்தாய். அகமகிழ்வுற்றேன். உன் தம்பியர் ஒருவரின் உயிரினைத் தருவேன்! யாருக்கிப்போ உயிர் தரல் வேண்டும்?

யுதிஷ்: நாங்கள் ஐவரும் இருதாய்ப் பிள்ளைகள். குந்திமாதாவின் புதல்வர்கள் மூவர். மற்றோர் அன்னையாம் மாதரித் தாயின் மைந்தர்கள் இருவர். குந்தியின் புதல்வன் நான் இருக்கிறேன். மாதரி அன்னையின் மைந்தனாம் நகுலனை மீட்டுத் தந்திடல் நிச்சயமாக நியாயமும் ஆகும்.

பூதம்: மற்றுமோர் தம்பியை உயிருடன் தருகிறேன். எவனுடை உயிரினை வேண்டுகிறாய் நீ?

யுதிஷ்: ஐவரில் இளையவன் சகாதேவ்னாவான். அவனையே அன்புடன் அடைந்திட விரும்புவேன்!

பூதம்: பாரத வம்சத்தின் பெருமைக்குரியவா! உனக்கு நான் விதித்த பரிசோதனைகளில் நீ வெற்றியே பெற்றாய்! பரவசமூட்டினாய். உன் தம்பிமார் நால்வரும் உயிர் பெற்றெழுவர்!

யுதிஷ்: (பூதத்தை வணங்கி) தாங்கள் பயங்கரப் பூதமே அல்ல! உயிரினை அளிக்கும் ஆற்றல் அதற்குமே இருப்பதும் இல்லை. தேவரீர் உண்மைத் திருவுருக் காட்டி வாழ்த்திட வேண்டும் விருப்புடன் நன்றே!

பூத உருவம் மறைந்து அங்கே யம தர்மராஜன் தோன்றி வாழ்த்துகிறார்.

யம: குந்தியின் மைந்தா! எந்தன் குமரா! உன்னைக் காணவும் வாழ்த்தினைக் கூறவும் வேண்டியே வந்தேன். அறிவுடன் ஆற்றலும் அகத்தூய்மை நெறியதும் அனைத்தும் கொண்டதால் அக மகிழ்வுற்றேன். சாந்தமும் பொறையும் பற்றற்ற தன்மையும் பொறுமையும் சிக்கலைத் தவிர்த்திடும் சிறப்புகள் கொண்ட உன் திறமையைக் கண்டேன், மகிழ்ந்தேன். ஆறு சிறுமைகள் அனைத்தையும் கடந்து நீ ஆண்டவன் ஆசியைப் பெற்றுய்திடுக!

யமதர்மராஜன் மறைகிறார். நான்கு சகோதரர்களும் உயிர் பெற்றெழுந்து யுதிஷ்டிரனின் பாதங்களைத் தொட்டு வணங்குகின்றனர். இதேவேளையில் பாஞ்சாலி பாண்டவர்களைத் தேடி ஓடி வருகிறாள்.

யுதிஷ்: பாஞ்சாலி! பதட்டமடைந்து நீ பாய்ந்தோடி வருவதேன்?

திரௌ: துரியோதனின் ஒற்றர்கள் இங்கே தடம்தேடி வருவதைக் கண்டேன்!

யுதிஷ்: அதைரியம் தவிர்த்து ஆறுதலடைவாய்!

அர்ச்சுனன் தன் வில்லில் பாணம் தொடுத்து எய்கிறான். மின்னல் வெட்டுடன் எங்கும் பனிப்புகார் படர்கிறது.

காலத்தின் குரல்:

தர்மமும் அதர்மமும் உண்மையும் பொய்மையும்
சூனியம் தன்னில் தோன்றுவதில்லை!
செழுமை மிகுந்த சமுதாயச் சூழலே
நன்மையும் தீமையும் நிலைபெறும் நிலைகளம்!
கதிரவனும் தண்மதியும் ஒளி உமிழும் சிறுவிளக்கும்
இருளகற்ற உதவுதல் போல் தெளிவு பெறக் களம் வேண்டும்!
இவ்வரிய உண்மைகளை இயம்பிடவே இக்கதையை
இன்றிங்கு உங்களுடன் பகிர்ந்திடவும் முற்பட்டேன்.
இறையவரும் இக்கருத்தை உணர்வதற்கும் உணர்த்துதற்கும்
இத்தலத்தில் அவதரித்தல் இந்நிலையில் தானன்றோ?

□□□

துவாரகை- அபிமன்யுவின் அரண்மனைக்கு சுபத்திரை வருகிறாள். அபிமன்யு போருக்குரிய ஆடை அணிகளுடனும் ஆயுதங்களுடனும் ஆயத்தமாக நிற்கின்றான்.

சுபத்: அன்பு மகனே! அன்னையின் வாழ்த்துக்கள்! போர்க்கோலம் பூண்டு புறப்பட்டுவிட்டாயே!

அபி: வணங்குகிறேன் தாயே! மாமா ஆணையிட்டார்- தளபதியாம் கீர்த்தி வர்மனுடன் போரிட்டு வெற்றியீட்டினால்தானாம் வீரனென்று எனை ஏற்பார்!

சுபத்ரா சிரிக்கின்றாள்.

சுபத்: முப்படையின் தளபதியை வெற்றி கொள்ளுவாயா நீ?

அபி: ஆமாம் என்தாயே! வீரனை வென்றால் தான் வீரனாக முடியும்! என் மாமன் கண்ணன் தாள் எனக்கு குரு அன்றோ! வரலாறு என்னை காத்திருப்பதாக என்றும் மாமாதான் கூறுகிறார். வரலாறு எங்கே காத்திருக்கும் என்று அவர் கூறாதிருக்கின்றார்.

சுபத்: மாமா கூறியதில் உண்மை மறைந்திருக்கும்! அந்த வரலாற்றை விரைந்து அறிவதற்கு வீரன் நீ என்று நிரூபிக்க வேண்டாமோ?

-காட்சி மாற்றம்-

துவாரகையின் தளபதி கீர்த்திவர்மனுடன் அபிமன்யு வீரப்போர் புரிந்து சாகசங்களைச் செய்கின்றான்.

கீர்த்: கவனம் வேண்டும் மகனே!

அபி: எதிரியாக நிற்கும் என்னை மகனே என்று அழைக்கலாமா?

கிருஷ்: அரும் வீரா அபிமன்யு! போர்க்களத்தில் உன்னை மகனே என்றழைக்கவும், எதிரணியில் பலரிருப்பார்! வீரப்போர் புரிவதற்கு வாளேந்தும் நிலை வந்தால், உறவு முறை பார்த்திருக்க முடியாது என்பதனால் புறப்படு போராட!

அபி: அப்படியே ஆகட்டும் எனதருமை மாமா! தளபதியாரே! நீங்கள் வயதிலும் வலுவிலும் என்னைவிட மூத்தவர்கள். போர்ப்பயிற்சி தொடங்குமுன்னர் எனக்கு ஆசி வழங்குங்கள்!

கீர்த்: போராடத் தொடங்கு முன்னே ஆசி பெற்றுவிட்டாயே! மாமனாருக்கேற்ற அருமையான சீடன் தான்! சரி இப்போ போராடத் தொடங்கிடலாம்!

கீர்த்திவர்மனுடன் போரிட்டு அபிமன்யு வெல்கிறான்.

கீர்த்: வாழ்த்துக்கள் வீரா! பீமர் அர்ச்சுனர் போல் வீரனாகப் போகின்றான்.

கிருஷ்: உண்மையிலே இவனால் எனக்கே பெரும் புகழாம்! இவனது எதிரிகளே திகைப்படைந்து மெச்சுவார்கள்!

அபி: எனக்கு எதிரிகளாய் வரவிருப்போர் எவர் மாமா?

கிருஷ்: உன்னை எதிர்கொள்ள மாவீரர் தான் வருவார். மறவாதே மருமகனே! சாதாரணமானோர் உன்னை நெருங்க மாட்டார்.

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரம்- துரியோதனன் பயிற்சிப் பாசறை பீமனைப் போல் ஒரு சிலையை வைத்து துரியோதனன் தாக்கிக் கொண்டிருக்கிறான்.

துரி: என்ன தம்பி துச்சாதனா? என்ன சேதி கொண்டுவந்தாய்?

துச்சா: ஒற்றர்கள் ஐவரையும் தொடர்ந்துதான் போனார்கள். திடீரென்று எழுந்து ஒரு பெரும் புகார் அந்த ஐவரையும் தெரியாமல் அறவே மறைத்ததாம்- அண்ணா!

துரி: என்ன சொன்னார்கள்? மண்ணில் மறைந்தனரா இல்லை விண்ணில் பறந்தனரா?

ஐவர் கரந்துறையும் இடத்தைக் காணாது மீண்டும் வரும் அவரை இந்த பீமன் சிலைபோல் வைத்தே கதாயுதத்தால் அடித்தே நொறுக்கிடுவேன்!

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரி- பீஷ்மரும் விதுரரும் தனியே உலவுகின்றனர்.

பீஷ்ம: பாண்டவரின் ஒரு வருட அஞ்ஞாத வாசமது தொடங்கிவிட்டதென்பதனை அறிவாய் நீ விதுரா! ஒற்றர்களை அனுப்பி அவர் ஒளிந்து வாழ்கின்ற இடங்களைத் தேட துரியன் துணிந்துவிட்டான்! கண்டு பிடித்துவிட்டால் எதிர்காலம் என்னாகும்?

விதுர: கண்டு பிடிக்காமல் ஒற்றர்கள் தோல்வி கண்டால் அப்போது மட்டும் என்னாகும் என்பதனை எண்ணித்தான் பாருங்கள்!

பீஷ்ம: இந்திரப் பிரஸ்தத்தை மீட்பார்கள். அங்குசென்று இணையிலா ஆட்சிதனை ஏற்பார்கள்.

விதுர: (நகைத்தவண்ணம்) இந்திரப் பிரஸ்தத்தை பாண்டவர்தம் பொறுப்பில் ஒப்படைப்பான் துரியன் என்று எண்ணித் துணிவதுதான் ஏற்புடையதாக எனக்குத் தெரியவில்லை! அத்தகைய தூய எண்ணம் துரியனுக்கு இருக்குமானால் சூது விளையாட்டும் துகிலுரியும் சம்பவமும் வனவாசம் என்னும் வஞ்சக வலை விரிப்பும் இடம்பெறவும் இடமுண்டோ? இயம்புங்கள் பிதாமகரே!

பீஷ்ம: எனதருமைப் பாண்டவர்கள் உரிமை பெற முடியாத சிறுமைதனை அணைப்பதனை எனதுமனம் ஏற்கவில்லை! இருவரும் இரு புறத்தும் இன்பமுடன் இருப்பதற்கே எனது பிரார்த்தனையெல்லாம் என்றும் நடந்திடுவேன்!

விதுர: நடக்க முடியாத தொன்றை நடந்திட வேண்டும் என்று பிரார்த்தித்துப் பயனென்ன பிதாமகரே கூறுங்கள்!

பீஷ்ம: இப்பொழுது பாண்டவர்கள் இருப்பது எங்கே என்று இயம்புவீரா மகாத்துமனே!

விதுர: (குற்ற உணர்வுடன் தட்டுத்தடுமாறி) அஞ்ஞாத வாசத்தில் இருக்கிறார்கள் அவர்கள்!

பீஷ்ம: (ஆத்திரமேலீட்டால் உயர்ந்த தொனியில்) வார்த்தை ஜாலத்தால் என்னை வீழ்த்திட எண்ணாதே! அன்றந்த அரக்கு மாளிகையில் நடைபெற்ற அனர்த்தங்கள் அனைத்தும் என்னிடம் மறைத்துவிட்டீர்! முன்பே தெரிந்திருந்தால் மூர்க்கர்களை அன்றே முறையாகத் தண்டித்து பின்விளைவைத் தடுத்திருப்பேன்! துரியோதனன் கர்ணன் சூழ்ச்சிக்காரன் சகுனி அத்தனை பேரையும்தான் அரசர் முன்னே நிறுத்தி மரண தண்டனை பெற்று தீவினை தவிர்த்திருப்பேன். மகாராஜா தன்மகனின் மீதினிலே வைத்திருக்கும் மதிப்பும் மடிந்திருக்கும். இன்று உதவியற்ற சூழ்நிலையில் நின்று நாமே தவிக்கின்றோம்! நட்ட இடத்தை விட்டே நகர முடியாத நெடுமரம் போல் நாமிங்கு நிலை தடுமாறுகின்றோம். கொடுமின்னல் தாக்குண்டு எரிசாம்பலாகும் பொழுதை எதிர்பார்த்து பொறுத்தே கிடக்கின்றோம். காந்தார நாட்டதிபன் சகுனியுடன் மன்னன் திருதராட்டிரன் வாழும் காலத்தில் நாம் வாழும் சாபத்தைப் பெற்ற சோக உருவாகி விட்டோம்! இத்தகைய விதி இன்று எனக்கு மட்டுமல்லாமல், என் அன்புக்குரித்தான தாய் நாட்டுக்கும் தொற்றி இழிவு வந்து சேர்கிறது. அஸ்தினாபுரம் பற்றி நான் கண்ட கனவுகளும் கலைந்து நொறுங்கி வெறும் சிதைவுகளாயாகி றதே! திருதராட்டிரன், சகுனி, துரியோதனனாகியோரின் விளையாட்டுப் பொம்மையாக விளங்கும் என் நாடு என்று எண்ணியதே இல்லை அன்றோ? (புலம்பியவண்ணம்) எனதருமைத் தாய் நாடே! என்னை மன்னித்தருளம்மா! இத்தகைய சூழ்நிலையில் உன்கதியே ஆகுமென்று என்றுமே நான் எண்ணவில்லை! இங்கு நடப்பதையே என்னால் தடுத்திடவும் சக்தியற்றுப் போய் இன்று சிக்கித் தவிக்கின்றேன்! நன்மை நடக்கும் என்று எண்ணியே ஏமாந்து என் கண்களைக் குருடாக்கி கலங்குகிறேன் அம்மா! கருணையுடன் மன்னிப்பாய்!

<u>பின்னணிப் பாடல்:</u>

தாய் நாட்டுப் பற்று எனும் பெருந்தவத்தின் பயனாக
தூய தடாகமொன்று துளித்ததுவே-தீயவனாம்
துரியோதனன் கொண்ட பேராசைப் பெருநச்ச
திரியதனால் தீய்ந்ததுவே தூய்மை!

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்



436331

வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு





Kala



JEWELLERY

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேழகு

433686

61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


**மீனுக்கு நன்றி!**

தைப்பொங்கல் திருநாளையடுத்து மாட்டுப்பொங்கல் நடத்தும் வழக்கம் தமிழர்கள் மத்தியில் இருக்கிறது. அதுபோல ஆபிரிக்காவில் 'காலா' நாட்டில் மீனுக்கு நன்றி சொல்லும் விதமாக பெரிய மீன் உருவத்தை செய்து அலங்கரித்து அங்குள்ள விவசாயிகள் விழா நடத்துவதுண்டு. வாழவைக்கும் மீனுக்கு நே!



# ஆண்களே நல்லவர்கள்

அமெரிக்க தொலைக்காட்சித் தொடர்களில் நடித்துப் பிரபலமானவர் காதரின். அட்டகாசமான உடல்வாகு. தற்போதைய விளம்பரப் படங்களில் விளம்பரம் செய்யப்படும் பொருளைவிட பெண்ணின் உடலுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் காதரினுக்கு வசதி. மாடலின் மூலம் பணம் கறக்கிறார். உலக அழகு ராணியாக மாறும் ஆசையும் உண்டு. திருமணமே வேண்டாம் என்று மறுத்துவரும் காதரினுக்கு ஆண் நண்பர்கள்தான் அதிகம். ஆண்கள் நல்லவர்கள் என்கிறார்.

# மெய்ப்பட்ட கனவு



வாசிம் அக்ரம் தனது மனைவி ஹியூமாவுடன்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் வாசிம் அக்ரமின் கனவொன்று நிறைவேறியதில் அவரது ரசிகர்களுக்கு மிக மகிழ்ச்சி. ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய வீரர் கபிலின் 254 விக்கெட் வீழ்த்திய சாதனையை வாசிம் கடந்துவிட்டார். 18 வயதில் களம் புகுந்த வாசிம் அக்ரம் கடந்த பத்தாண்டுகளில் தனது வரலாறான சாதனைப்பட்டியலைக் கையில் வைத்திருக்கிறார். 255வது சாதனை விக்கெட் இலங்கையின் பிரமோதயா விக்கிரமசிங்காவை வீழ்த்தி எடுக்கப்பட்டது. எனவே வாசிமின் சாதனையில் இலங்கைக்கும் பங்குண்டு! வாசிம் அக்ரமின் வெற்றிக்கு காரணம் சகிப்புத்தன்மை-கட்டுப்பாடு-தளராத முயற்சி. அணியில் அவமானப்படுத்தப்பட்ட போதும் பொறுமையாக இருந்து போராடி வென்ற சாதனையாளர்.

# அமைதியே வா!



ஹெய்டியில் அமைதியை தேடி- அழுத விழிகளோடு விசித்துழந்து போராடும் தாய்மார்கள். பெற்றவளுக்குத்தானே தெரியும் பிள்ளைகளின் அருமை.


# இன்னிசை விழா

தென் இந்தியாவின் முடிசூடா மன்னன் மதுரக்குரலோன் மனோ

A.R.ரகுமான் அறிமுகப்படுத்திய பிரபல தென்னிந்தியப் பாடகர் S.சாகுல் ஹமீது

மற்றும் பிரபலங்களுடன்

-எமது-

சித்தாரா

இணைந்து தரும்

இன்னிசை இரவு





LIONS CLUB OF COLOMBO MID TOWN
District 306 B. SRI LANKA

இடம்:
சுகததாச உள்ளரங்கு

NO SMOKING INSIDE THE AUDITORIUM

நாள்:
20.11.1994

மாலை- 6.30 மணி

ரிக்கெற்றுகள் அன்றைய தினம் மண்டபவாயிலிலும் அனைத்து பிரதான வியாபார ஸ்தாபனங்களிலும் கிடைக்கும். ரூ.500, ரூ.100. நிகழ்ச்சியின் பின் நுகேகொடை மார்க்கமாகவும், கல்கிசை மார்க்கமாகவும் பஸ் போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. Advt.